ஸ்ரீ ரமண வருகை

ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள்
அருளியது

ஸ்ரீ ரமண வருகை

(மூலமும் உரையும்)

ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள்
அருளியது

இரண்டாம் பதிப்பு
1988

பதிப்பாளர்:

ஸ்ரீ அருணாசலரமண நிலயம்,
11-B, மணக்குள விநாயகர் தெரு,
ஸ்ரீ ரமண நகர், திருவண்ணாமலை,
தமிழ்நாடு - 606 603.

உரிமை © C. P. அருணாசலரமணன்
முதற் பதிப்பு (உரையில்லாமல்) டிசம்பர் 1987
இரண்டாம் பதிப்பு (உரையுடன்) பிப்ரவரி 1988

விலை: ரூ. 12/-

SRI RAMANA VARUHAI

by

Sri Sadhu Om Swamigal

Second Edition 1988

Published by SRI ARUNACHALARAMANA NILAYAM,
11-B, Manakkula Vinayakar Street, Sri Ramana Nagar,
Tiruvannamalai, Tamil Nadu - 606 603, India.

அச்சிட்டோர்: ஸ்ரீ ராம் பிரிண்டர்ஸ் (ராதா பிரஸ்) போன்:2957
42-C சின்னக்கடைத் தெரு, திருவண்ணாமலை 606 601



ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள்

('ஸ்ரீ ரமண வருகை' அருளிய சுமார் ஓராண்டுக்குப் பிறகு)

ஞானப் பிரார்த்தனையும் நாயகனை வாவென்றே
வூனுருகக் கூவு முயர்கவியுங் — கோன்ரமணன்
டாதமே பற்றியுயப் பாப்பலவுந் தந்தவருள்
நாதனே நம்சாது ஓம்.

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணசலரமணய

முன்னுரை

பரம்பொருள் தம் படைப்புயிர்களைப் பற்பல பிறவிகள் தோறும் ஆன்மஞானப் பேற்றிற்குப் பக்குவப்படுத்திக் கொண்டே வந்து, முடிவில் தாமே ஒரு சற்குரு வடிவில் அவதரித்து, அவ்வக் காலத்திற் பரிபூரண பக்குவ மடைந்துள்ள அவ் வுத்தம அடியார்கள் உலகின் எவ்வெப் பாகங்களிற் பிறக்க நேர்ந்திருந்தாலும், அவர்களை யெல்லாம் காந்தம் இரும்பு போற் கவர்ந்து தம் திருவடிக்கு இழுத்து வந்து, மெய்ஞ்ஞானம் அருளி தன்னில் இரண்டற ஐக்கியப்படுத்திக் கொள்வது திருவருள் நியதி யாகும். இறைவன் அவ்வாறு உலகில் சற்குருவாக அவதரிக்கும் காலத்தில், தாம் மட்டும் தனியாக அவதரிப்பதில்லை. தமது அணுக்கத் தொண்டர்களில் மிக உயர்ந்த பக்குவிகளைத் தம்முடனேயே அழைத்து வந்து ஆங்காங்கே பிறக்க வைத்து, தக்க காலத்தில் அவர்களைத் தம்மிடம் ஈர்த்து, அவர்களது மனோவாக்குகாயங்களைக் கருவியாகக் கொண்டு தமது அருளுபதேசங்களுக்கு வியாக்கியானங்களும் விளக்கங்களும் செய்யும்படி அவ் வுத்தம பக்குவிகளின் வாழ்வையும் வாக்கையும் அவரே இயக்கி வைக்கின்றார்.

இவ்வாறு ஸ்ரீ ரமண பகவான் சற்குருவாய் அவதரித்த போது, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தம் அருட்கருவிகளாகக் கொண்டுவரப்பட்ட அடியார்களுள் தலைசிறந்தவர்கள் ஸ்ரீ முருகனாரும் ஸ்ரீ சாது ஓம் சுவாமிகளும் ஆவர். மேற்கண்ட நியதிக் கிணங்க ஸ்ரீ சாது ஓம் சுவாமிகளின் வாழ்க்கை ஸ்ரீ ரமண பகவானால் எவ்வாறு இயக்கப்பட்டது என்பதும், தக்க காலத்தில் அவரை எவ்வாறு தம் அருட்கருவியாகக் கொண்டு அவரை முற்றிலும் பயன்படுத்திக்கொண்டார் என்பதும் அன்னாரது வாழ்க்கை வரலாற்றை ஊன்றிக் கவனிப் போருக்குத் தெற்றென விளங்கும்.

ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் தஞ்சை அருகிலுள்ள மாரியம்மன்கோயில் என வழங்கும் புன்னைநல்லூரில் 12-1-1922 அன்று பிறந்து வளர்ந்தார். அவர் தம் பாலப் பருவத்திலேயே பரமனருளை நாடி நின்றாலும், தமது 24வது

வயதில் தான் (அதாவது, 1946ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் தான்) ஸ்ரீ ரமண பகவானைப் பற்றி முதன்முதலாக அறிய வந்தார். அச் சமயம் 'ஸ்ரீ ரமண விஜயம்' என்ற நூலை அவர் எதேச்சையாகப் படிக்க நேர்ந்தது. அந் நூலில் ஸ்ரீ பகவானின் திவ்விய சரிதத்தைப் படித்து, அதிலுள்ள அவரது திருவுருவப் படங்களைப் பார்த்ததும், காந்தத்தைக் கண்ட இரும்பைப் போன்று ஸ்ரீ பகவான்பால் தாம் கவரப்படுவதை ஸ்ரீ சுவாமிகள் உணர்ந்து, ஸ்ரீ பகவானைத் தரிசிக்க வேண்டு மென்று ஆவல் கொண்டார்.

ஸ்ரீ ரமணாச்ரமத்தில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளைப் பற்றி அறிந்துகொள்ளவும், எந்த விதமான கட்டுப்பாடும் நிபந்தனைகளும் இல்லாமல் ஸ்ரீ பகவானைத் தரிசிக்க இயலுமா என்று தெரிந்துகொள்ள விரும்பியும், ஸ்ரீ சுவாமிகள் தம் சகாக்களிடம் இது பற்றி வினவி அறிந்து கொள்ள ஆரம்பித்தார். இவ்வாறு முன்னதாக வினவித் தெரிந்துகொள்வதற்கு ஏற்ற காரணமும் இருந்தது. இதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர் தான் ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சேர வேண்டும் என்ற அவாவுடன் தம் வீட்டை விட்டு வெளியேறி சென்னைக்குச் சென்று அம் மடத்தில் சேர முயன்ற போது, அம் மடத்தில் சேருவதற்கு முன் பலவிதமான சம்பிரதாயங்களையும் நிபந்தனைகளையும் கடைப்பிடித்தாக வேண்டும் என்பதை அறிய வந்தார். எனவே தான் மேற்கண்டவாறு விசாரிக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீ பகவான் எவ்விதமான ஒளிவு மறை வில்லாத வெற்ற வெளி போன்ற திறந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தார் என்பதை ஸ்ரீ சுவாமிகள் அப்போது அறிய நேரவில்லை. எனவே ஸ்ரீ பகவானைத் தரிசிக்கப் பலவிதமான நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க நேருமோ என்றும் ஐயங் கொண்டதால், திருவண்ணாமலை செல்லு முன் இது பற்றித் தெளிவாகத் தெரிந்து நிச்சயித்துக் கொள்ளத் தீர்மானித்து, தம் நண்பர்களிடம் இதைப் பற்றி வினவினர். அந் நண்பர்களில் ஒருவர் தஞ்சாவூரிலேயே ஸ்ரீ ஜானகி மாதா என்ற உத்தம ரமண பக்தை ஒருவர் உள்ளார் என்றும், அவரைச் சந்தித்து இது பற்றி வினவினால் தக்க விடை கிடைக்கும் என்றும் தெரிவிக்கவே, அன்று மாலையே ஸ்ரீ சுவாமிகள் தம் நண்பர் ஒருவருடன் தஞ்சை கணபதி நகரி

லமைந்திருந்த ஸ்ரீ ஜானகி நிலையத்திற்குச் சென்றார். அந் நிலையத்தின் வெளியே "தம் மனைவியைத் தவிர பிற ஸ்திரீகளைத் தம் தாயாகவும் சகோதரியாகவும் பாவிக்கக் கூடியவர்களே இவ்விடத்திற்குள் வரலாம்" என்ற அறிவிப்புப் பலகையைப் பார்க்கவும், ஸ்ரீ சுவாமிகளுடன் சென்றிருந்த நண்பர் உள்ளே செல்ல அச்சமுற்றுத் திரும்பிவிட்டார். ஆனால் ஸ்ரீ சுவாமிகளோ எவ்விதத் தயக்கமு மின்றி உள்ளே சென்றார்.

அங்கே ஸ்ரீ ஜானகி மாதா தம் பக்தர்கள் புடை சூழ வீற்றிருக்கக் கண்டார் அவரைச் சந்தித்து தாம் வந்த நோக்கத்தைத் தெரிவிக்கவே, ஸ்ரீ மாதா ஸ்ரீ பகவான் வீற்றிருக்கும் அறையின் கதவுகள் எல்லாருக்கும் எப்போதும் திறந்தே யிருக்கு மென்றும், எந்தவிதக் கட்டுப்பாடு மின்றி எந்த நேரத்திலும் யாரும் ஸ்ரீ பகவானைத் தரிசிக்கலாம் என்றும் தெரிவித்தார். பிறகு ஸ்ரீ சுவாமிகளைப் பார்த்து "ஸ்ரீ பகவான் அருளிய 'ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை'யைப் படித் திருக்கிறாயா?" என்று கேட்டார். 'ஸ்ரீ ரமண விஜயம்' தவிர ஸ்ரீ பகவானைப் பற்றிய வேறெந்த நூலோ, அல்லது ஸ்ரீ பகவான் இயற்றியுள்ள எந்த நூல்களுமோ அப்பொழுது அவர் படித் திருக்க வில்லை. இதனைத் தெரிவித்ததும், ஸ்ரீ பகவானின் அக்ஷர மணமாலை அங்கு குழுமியிருந்த பக்தர்களால் பாடப்பட்டது. பக்திப் பாடல்கள் பலவற்றைப் படித்தறிந்திருந்த ஸ்ரீ சுவாமிகள் முதன்முதலாக அக்ஷரமணமாலையைக் கேட்டதும், அதன் நூற்றெட்டுப் பாக்களும் தூய பரபக்தியின் வடிவங்களாக மிளிர் வதைக் கண்டு அவற்றின் அதியற்புத அழகில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்தார்.

இச் சூழ்நிலையில் ஸ்ரீ ஜானகி மாதாவைத் தரிசித்த ஸ்ரீ சுவாமிகள் மாதாவைப் பரமேஸ்வரி சொரூபமாகக் காண, மாதாவும் ஸ்ரீ சுவாமிகளின் பக்திப் பரவசத்தைக் கண்டு அவர் இதற்கு முந்தைய ஜென்மத்திலேயே தமக்கு அறிமுகமாகியிருந் ததையும், அடுத்த இப் பிறவியிலேயே வியக்கத்தக்க விதத்தில் முன்னேற்றமும் பக்குவமும் அடைந்து தம்முன் தற்போது வந்துள்ளார் என்பதையும் உணர்ந்துகொண்டார். அக்ஷர மணமாலைப் புத்தகம் ஒன்றை ஸ்ரீ சுவாமிகளுக்குக் கொடுத்து, ஸ்ரீ மாதா அதே வாரக் கடைசியில் தாமும் தம் அன்பர்கள்

சிலரும் திருவண்ணுமலைக்குச் செல்ல விருப்பதாகவும், ஸ்ரீ சுவாமிகள் விரும்பினுல் அவர்களோடு சேர்ந்துகொள்ளலாம் என்றும் கூறினுர். ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ மாதாவிடமிருந்து பெற்றுக் கொண்ட அக்ஷரமணமாலையை அன்றிரவே முழுவதும் மனப்பாடம் செய்து அதனையே மனனம் செய்து வரலானுர். மறுநாள் ஸ்ரீ ஜானகி நிலையத்திற்குச் சென்று அக்ஷரமண மாலையைப் புதிய ராகத்தில் தமது இனிய குரலில் பாடிக் காண் பித்தார். அதனைக் கேட்டு மிகவும் மகிழ்வுற்ற ஸ்ரீ மாதா ஸ்ரீ சுவாமிகளைத் தம் குழுவுடன் சேர்ந்து அதே ராகத்தில் அக்ஷர மணமாலை பாராயணத்தை செய்து வரும்படி பணித்தார்.

ஸ்ரீ ஜானகி மாதா சொல்லியவாறு அந்த வாரக் கடைசி யில் குழுவினருடன் ஸ்ரீ சுவாமிகள் திருவண்ணுமலை சென்று, 1946ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6ஆம் தேதி சனிக்கிழமை யன்று முதன்முதலாகத் தம் சற்குரு ஸ்ரீ ரமண பகவானைத் தரிசனம் செய்தார். ஸ்ரீ பகவான் வழக்கமாக அமர்ந்திருக்கும் பழைய ஹாலினுள் சென்று . எல்லாரும் ஸ்ரீ பகவானுக்கு நமஸ்காரம் செய்தனர். கடைசியாக நமஸ்காரம் செய்யச் சென்ற ஸ்ரீ சுவாமிகளுக்கு ஸ்ரீ பகவானின் திருவுருவம் தெரியவில்லை; வெறும் இருக்கை மட்டுமே தெரிந்தது. ஸ்ரீ பகவான் வெளியில் சென்றுள்ளார் என்றும், அவர் இல்லாத போது அவரது இருக்கை முன் நமஸ்கரிப்பது இங்கு வழக்கம் போலும் என்று மெண்ணி அவரும் அவ்வாறே நமஸ்கரித்து எழுந்த போது, முன்பு வெற்று இருக்கையாக இருந்த இடத்தில் இப்போது ஓர் ஒளிப்பிழம்பு தோன்றி ஸ்ரீ சுவாமிகள் பார்த்துக்கொண் டிருக்கும் போதே, அது மெல்ல மெல்ல ஸ்ரீ பகவானின் ஒளி மிக்கத் திருமேனியாக உருக்கொண்டது. ஸ்ரீ பகவானின் திவ்விய தரிசனத்திற்காக ஏங்கி ஏங்கி வாடிய ஸ்ரீ சுவாமிகளின் உள்ளம் இப்போது 'மூர்த்தி அவனிருக்கும் வண்ணம்' கண்ணுரக் கண்டு களித்தது; களிக்கூத்தாடியது. இவ்வாறு முதல் தரிசனத்தின் போதே ஸ்ரீ பகவான் தம்முடைய நிர்க்குண நிஜ சொருபத்தை ஸ்ரீ சுவாமிகளுக்கு உணர்த்திவிட்டார்.

அதன் பிறகு ஸ்ரீ பகவான் மீது நாயகி பாவத்தில் தாம் கொண்டிருந்த தெய்வீகக் காதலை வெளிப்படுத்தி 'குயில்விடு தூது' என்ற தலைப்புடன் தாம் எழுதிக் கொணர்ந்திருந்த பாடலை ஸ்ரீ பகவானிடம் கொடுத்து, அப் பாடலை ஸ்ரீ பகவான்

திருமுன்னர் பாடலானூர்*. ஆனுல், உணர்ச்சி மேலீட்டால் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகப் பெருக, குரல் தழு தழுக்க, அதனை முழுதும் பாட முடியாது விம்மி விதிர்விதிர்த் தார். ஸ்ரீ பகவானே மீதிப்பாடல்களைப் படித்துப் பார்த்துவிட்டு 'குயில்விடு தூது' என்ற தலைப்பைக் 'குயிலொடு கூறல்' என்று திருத்தி திரும்ப ஸ்ரீ சுவாமிகளிடம் கொடுத்து, அதனை எடுத்துக் கொண்டு போய்ப் பலாக்கொத்தில் வசித்து வந்த ஸ்ரீ முருகனுர் சுவாமிகளிடம் காண்பிக்கச் சொன்னுர். ஸ்ரீ சுவாமிகளும் அவ்வாறு செய்யவே, அது முதல் ஸ்ரீ முருகனுருக்கும் ஸ்ரீ சுவாமி களுக்கும் இடையே 'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' என்ற முதுமொழிக் கிணங்க நெருங்கிய தொடர்பு ஏற்படலாயிற்று. ஸ்ரீ சுவாமிகள் பிற்காலத்தில் செய்ய வேண்டியிருந்த ஆன்மீக இலக்கியத் தொண்டிற்கு ஏற்ற உறுதுணையாக அவர்களிடையே ஒரு தொடர்பை ஸ்ரீ பகவான் முதலிலிருந்தே இவ்வாறு ஏற்படுத்தி வைத்தார் போலும்.

ஸ்ரீ சுவாமிகள் மேற்கண்டவாறு வந்து ஸ்ரீ பகவானைத் தரிசித்த தினத்திற்கு முந்தின நாள் தான், தற்கால மாணவர்கள் தமிழறிவில் மிகவும் பின்தங்கிவிட்டதால் நல்ல கவிஞர்கள் தோன்ற வாய்ப்பு ஏற்படவில்லை என்ற பேச்சு ஸ்ரீ பகவானின் சந்நிதானத்தில் எழுந்தது. அப்பொழுது ஸ்ரீ பகவான் கல்விக்கும் கவித் திறனுக்கும் சம்பந்த மில்லை என்றும், திருஞானசம்பந்தர், ஸ்ரீ அருணகிரிநாதர், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் போன்ருேர் கல்வியறிவு அதிகமின்றியே திருவருளின் துணையினுலேயே தம் கவியூற்றுத் திறக்கப் பெற்று அவர்கள் அருட்கவிகளாக விளங்கினர் என்றும், இக் காலத்திலும் அதிகக் கல்வியின்றியும் திருவருள் துணையினுலேயே கவி யூற்றுத் திறக்கப் பெற்ற பாலகவிஞர்கள் ஆங்காங்கே இருப்பர் என்றும், தக்க புலவர்களின் தொடர்பு கிடைத்து அவர்களுக்கு யாப்பிலக்கண அறிவும் கிடைத்த மாத்திரத்திலேயே அவர்களும் சிறந்த கவிஞர்களாக மலர்ந்து மெருகிட்ட பொன்னுக மிளிர்வர் என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீ சுவாமிகள் அன்று முதன்முதல் வந்து ஸ்ரீ பகவான் திருமுன்னர் 'குயிலொடு கூறல்' என்ற பாடலைப் பாடியது

* இப் பாடலை 'ஸ்ரீ ரமண கீதம்' என்ற நூலின் பக்கம் 20ல் காணலாம்.

இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக அமையவே, அன்று பிற்பகல் ஸ்ரீ முருகனுர் சுவாமிகள் ஸ்ரீ பகவானின் சந்நிதிக்கு வந்ததும் ஸ்ரீ பகவான் ஸ்ரீ முருகனுரிடம் "நாம் நேற்று தானே தற்காலக் கவிஞர்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்; அதற்குப் பிரமாணமாக இன்று காலை வந்து பாடிய பையனைப் பார்" என்று கூறியருளினுர்.

அன்றே ஸ்ரீ சுவாமிகள் மேலும் பல பாடல்களை 'காட்சி', 'அப்பா வந்தேன்', 'அம்மையப்பா' என்ற தலைப்புகளில் புனைந்து ஸ்ரீ பகவான் சந்நிதியில் பாடியது ஸ்ரீ பகவான் கூற்றை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதாக இருந்தது. அது மட்டுமன்றி, அன்று பாடிய கீழ்க்கண்ட சில பாடல்களிலிருந்து ஸ்ரீ சுவாமிகள் தொடக்க நாளிலிருந்தே ஸ்ரீ பகவானையே தமது ஏக குருநாதனுகவும், இஷ்டதெய்வமாகவும், அம்மையப்பனுகவும் கொண்டிருந்தார் என்பதும், ஸ்ரீ பகவானின் அருளாணைப்படியே தாம் 'அன்னை'யால் ஸ்ரீ பகவானிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்கப்பட்டார் என்பதும் தெளிவுற விளங்கும்.

"முன்னை யெத்தனை யோதவஞ் செய்தும்
முறையிட் டேங்கியும் முனிவருங் காணு
மன்ன வன்றனை மறைகளு மறியா
வள்ள லையடி யேன்மனங் கவர்ந்தே
யுன்ன வுன்னவுள் ளினித்திடுங் கனியை
யொப்பி லாதுயர்ந் தோங்கிய மலையை
யென்ன சொல்லினு மடங்கிடாப் பொருளை
யின்று வந்திவண் நன்றுகண் டனனே."

"இன்று காண்பதோ நாளையோ மற்று
மெந்த நாளில்தா னெந்தையை நாடிச்
சென்று காண்பதோ சென்றிடி லென்ன
செப்பு வார்கொலோ ஸ்ரீரம ணேசர்
கன்று தாயினைக் கண்டதுந் தாய்தான்
கருணை யின்றியு மிருக்குமோ வந்தோ
வென்றே யிவ்வித மேங்கிய கடையே
னின்று வந்திவண் நன்றுகண் டனனே."

"அருணை வாழுமென் னுவியை யரியு
மயனுங் கண்டிடா வானந்தப் பொருளைக்
கருணை யேவுரு வாகியிங் கென்னைக்
கட்டிக் கொண்டுவந் திட்டசின் மயத்தை

வருண னுகநின் றேயருண் மழையை
வாரி வாரியே வருடிக்கு மன்பை
யிருண லிந்திட விருவினை யொழிய
வின்று வந்திவண் நன்றுகண் டனனே.”

— காட்சி — 1, 9, 10.

“அடைவதென் றேதிரு வண்ணு மலைக்கங் கமர்ந்தெனையா
ளுடையசெந் தாமரை யொத்திக் கொண்டுள்ள முறைந்தவவா
வுடைவதென் றேவதென் றேவதென் றேவென் றுளங்குழைந்த
கடையனின் றேவந்து கண்டுகொண் டேனெங் கடவுளையே.”

“கடவுளே யின்றடி யேற்கென வேதூல காயங்கொண்டு
நடமிட வித்தனை நாட்கழித் தேனறி யாமலின்று
விடமுடி யாதவா றீர்த்தணைத் தாய்வந்து வீழ்ந்துநின்ரு
ளிடமடைந் தேனெனை யென்செயி னும்மும திச்சைஐயே.”

“புதல்வனே னீசமும் பொல்லா மையும்பொறுத் தாண்டுகொண்ட
முதல்வனே நின்பால் முறையிட லன்றிவே றெங்குசென்று
கதறுவே னப்பாவென் னம்மாநின் கால்வந்து கட்டிக்கொண்டே
னுதறுவ தெண்ணவேண் டாம்விடுத் தாலுயி ரோயுமன்றே.”

— அப்பா வந்தேன் — 2, 3, 8.

“ஓயாது மைத்துழைத் தேபொருள் திரட்டுவது
முண்பதூ முண்டுண்டுவீ
றுறங்குவதுந் துயிலிலும் விழிப்பிலு மெப்போது
மூர்சுற்றி நின்றயர்வது(ம்)
நாயாதி பேயாதி வெட்கித் தலைகுனிய
நனிகாம நசையுழல்வது(ம்)
நானெனத் தருக்கியே தலைசுழல் வதுமான
நாயினைக் கருதிவந்து
தாயாகி யேதடுத் தாண்டுகொண் டாயன்று
தஞ்சைநகர்ப் பூம்பதியிலே
சகுணகுரு வேயாத்ம ரமணகுரு வேமோன
சச்சிதா னந்தகுருவே
யாயாச மின்றியுள் ளானந்த மூட்டிட
வழைத்தநின் னுணப்படி
யம்மா வழைத்துவர வந்தடைந் தேனென்ற
னம்மையப் பரவருள்கவே.”

''கூவிக்கு தித்தோடிக் கூபம்வீழ் மர்க்கடக்
குட்டிபோற் குவலயத்திற்
கோடிக் கணக்கான வாசைகொண் டோடினேன்
கொடியனே னெடியகாலம்
பாவிக்கு மன்றுநீ பரிவினொடு தாயாகிப்
பக்கத்தி லமர்வித்துநற்
பாலமு தருத்தியுடன் பக்தியு மருத்தினையுன்
பாசவலைப் பட்டுவிட்டேன்
சேவிக்க நின்னையின் றேயழைத் திட்டநின்
றிருவருளை யுன்னியுன்னிச்
சிந்தையெல் லாங்கரைந் தேனமுத வாரியே
ஸ்ரீரமண தீபவொளியே
ஆவிக்கி னித்ததிரு வண்ணா மலைப்பதிக்
கன்பிட் டிழுத்தநின்பா
லம்மா வழைத்துவர வந்தடைந் தேனென்ற
னம்மையப் பாவருள்கவே.''

''பணியாது நல்லோரைப் பகையாது தீமையைப்
பயிலாது சற்சங்கமே
பசியாது பக்திப் பசிசிறிது மின்றியே
பாராது பாபமெல்லாந்
துணிவாக நின்றுசெய் தேங்கிய மகாகொடிய
துட்டனேன் வசைகள்யாவும்
சொல்வதெனிற் பலவருடந் துயிலாம லெழுதினுந்
தொலையாதித் தகையனேனை
'மணியாகிக் கழிகின்ற தந்தோவென் மகனேநீ
வா'வென்ற வள்ளலேயென்
மனமார வெண்ணியுனை வாயார வாழ்த்துமெனை
வயிறார வுண்டுவிடுவா
யணியாளு மஞ்சுகு ழண்ணா மலைப்பதிக்
கரசேநின் றுணைப்படி
யம்மா வழைத்துவர வந்தடைந் தேனென்ற
னம்மையப் பாவருள்கவே.''

— அம்மையப்பா – 1, 2, 5.

இதன்பின் தம்மால் இயலும் போதெல்லாம் ஸ்ரீ சுவாமிகள் தனியாகவோ அல்லது ஸ்ரீ ஜானகி மாதாவுடனோ திருவண்ணா மலைக்கு வந்துபோக ஆரம்பித்தார். ஸ்ரீ பகவானின் முதல்

தரிசனத்திற்குப் பிறகு ஓரிரு வாரங்கள் கழித்து ஸ்ரீ சுவாமிகள் இவ்வாறு திருவண்ணுமலேக்கு வந்த போது, ஒரு நாள் காலே வேளேயில் ஆசிரமத்திற்குப் பின்புற வழியாக மலேமீது சிறிது ஏறி ஒரு பாறை மீதமர்ந்தவாறு, ஸ்ரீ பகவானேப் பற்றி 'வேட்கை' என்ற தலேப்பில் பாடல்கள் எழுதிக்கொண்டிருந்தார். ஏழாவது பாடலே எழுதி முடித்ததும் காலேச் சிற்றுண்டி நேரம் வரவே, ஆசிரம போஜனசாலேக்கு அவசரமாகச் சென்ருர். ஸ்ரீ சுவாமிகள் போஜனசாலேக்குச் சென்ற சமயம் அநேகமாக சிற்றுண்டி முடிந்து பலர் வெளிவந்துகொண் டிருந்தனர். சிற்றுண்டி நேரம் முடிந்துவிட்டதால் ஸ்ரீ சுவாமிகள் உள்ளே செல்லத் தயங்கி நிற்கவே, வெளிவந்த சிலர் ஸ்ரீ சுவாமிகளேப் பார்த்து, "ஏன் நிற்கிறீர்கள்? சற்று முன் தான் பகவான் உங்களேப் பற்றி விசாரித்தார். பகவான் சாப்பிட்டுக்கொண் டிருக்கிருர். உள்ளே செல்லுங்கள்" என்று சொல்லவே, ஸ்ரீ சுவாமிகள் உள்ளே சென்று ஸ்ரீ பகவானுக்கு எதிரில் சற்றுத் தள்ளி அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார். ஸ்ரீ பகவான் சாப்பிட்டு முடித்துவிட்டதால் கையலம்புவதற்காக எழுந்தார். ஸ்ரீ பகவான் எழுந்ததைக் கண்டதும் ஸ்ரீ சுவாமிகளும் எழுந்து நின்ருர். அதனேக் கண்ட ஸ்ரீ பகவான் ஸ்ரீ சுவாமிகளேத் தம் அருட் கண்களால் நோக்கி "வந்த வேலேயைப் பார்" என்று சொல்லவும், ஸ்ரீ சுவாமிகள் கீழே அமர்ந்தார். ஆனல் ஒரு முறை எழுந்து விட்டதால் மீண்டும் தொடர்ந்து சாப்பிடத் தயங்கினர். வழக்கமாகத் தெற்குவாசல் வழியாக வெளியே செல்லும் ஸ்ரீ பகவான் அப்பொழுது மேற்குப் பக்கமாக அமைந்திருந்த வாயிற்புறம் வழியாக வெளியே செல்வதற்காக ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்திருந்த இடத்தை யொட்டிச் செல்லவே, ஸ்ரீ சுவாமிகள் சாப்பிடத் தயங்குவதைப் பார்த்து ஸ்ரீ பகவான் மீண்டும் "வந்த வேலேயைப் பார்" என்று சொல்லவும், ஸ்ரீ சுவாமிகள் சாப்பிட ஆரம்பித்தார். ஸ்ரீ பகவான் வாசல் வரை சென்று வாயிற் படியைத் தாண்டும் பொழுது, ஸ்ரீசுவாமிகள் ஏதோ உள்ளுணர் வால் தூண்டப்பட்டு பின்புறமாகத் திரும்பி ஸ்ரீ பகவானேப் பார்க்கவே, ஸ்ரீ பகவானும் வாயிற்படியில் நின்றவாறே திரும்பி ஸ்ரீ சுவாமிகளேப் பார்த்து மீண்டும் "வந்த வேலேயைப் பார்" என்று சொன்னர். மூன்ருவது முறையாக ஸ்ரீ பகவான் இவ் வாறு சொன்னதும், 'இது சாதாரணமாகச் சொல்லிய வார்த் தைகளல்ல; நான் இவ் வுலகிற்கு வந்த வேலேயைப் பார்க்கும்படி

ஸ்ரீ பகவான் எனக்கு உபதேசிக்கும் ஒரு மாமணிச் சொல் இது' என்பதாக ஸ்ரீ சுவாமிகள் இதனை உணர்ந்துகொண்டார். சிற்றுண்டியை முடித்துக்கொண்டு மீண்டும் மலைக்குச் சென்று 'வேட்கை' என்ற தலைப்பில் தொடர்ந்து பாடல்கள் எழுத ஆரம்பித்து. எட்டாவது பாடலில் இச் சம்பவத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதினார்.

"'வந்தவேலை பார்'ரெனவோர் வயிரமுத்து மணிச்சொல்
வாய்மலர்ந்து காலையிலே வழங்கியமன் னவனே
எந்தவேலை யுளதோமற் றதைவிடுத்து நாய்போ
லெங்கெங்கோ வலைந்ததெலா மினிவிடவும் வேண்டும்
தந்தையொடு தாயாகித் தடுத்தாண்ட நினது
தளிரடியி னுசையொன்று தான்பெறவே வேண்டும்
இந்தவகை யருளநினக் கிச்சைவர வேண்டு
மெனவேண்டி வரவழைத்த விணையடிவேண் டுவனே."

— வேட்கை – 8.

ஸ்ரீ பகவானருளிய இவ் வுபதேசத்தை மனத்திற்கொண்டு ஸ்ரீ சுவாமிகள் திருவண்ணாமலையிலேயே நிரந்தரமாகத் தங்கி ஸ்ரீ பகவானின் பாதங்களிலேயே தம் வாழ்க்கையைக் கழிக்க விரும்பி, தாம் புரிந்து வந்த தஞ்சை ஜில்லா கலெக்டர் அலுவலக கருவூலத்துறைப் பணியையும் இராஜிநாமா செய்யத் தீர்மானித்து, இதனை ஸ்ரீ பகவானிடம் தெரிவிக்க விரும்பினார். இதனை அறிந்திருந்த ஸ்ரீ ஜானகி மாதா ஸ்ரீ சுவாமிகளுடன் ஸ்ரீ பகவானைத் தரிசிக்க அடுத்த முறை வந்த போது, ஸ்ரீ மாதாவே முந்திக்கொண்டு ஸ்ரீ பகவானிடம் "பகவானே! இவன் இந்த வயதிலேயே வேலையை விட்டுவிட விரும்புகிறான்" என்று சொல்லவும், ஸ்ரீ பகவான் "இதெல்லாம் தேவையா என்ன?" என்று சொன்னார்.

எனவே ஸ்ரீ சுவாமிகள் திரும்பிச் சென்றுவிட்டார். ஆயினும் பர பொருளே ஒரு திருமேனி தாங்கி இத் தரை மீது உலவுகின்ற இக் காலத்தில் அவர் அருகில் வசித்து வாழ்க்கையின் பயனைப் பெறாமல் வேலை என்றும், குடும்பம் என்றும் வாழ்க்கையை வீணடித்துக்கொள்ள ஸ்ரீ சுவாமிகளுக்கு மனம் ஒப்பவில்லை. ஆகவே சுமார் ஓராண்டு கழித்து ஸ்ரீ பகவானிடம் வந்து ஆசிரமத்தில் தங்கியிருந்த போது, இங்கிருந்தவாறே தமது வேலையை இராஜிநாமா செய்து இராஜிநாமாக் கடிதம் எழுதி, அதைத் தபாலில் சேர்க்குமுன் ஸ்ரீ பகவானிடம் சமர்ப்பித்தார். ஸ்ரீ பகவானும் அதைப் படித்துப் பார்த்துவிட்டு,

ஸ்ரீ சுவாமிகளிடம் கொடுத்துவிட்டார். தாம் இராஜிநாமா செய்வதற்கு ஸ்ரீ பகவான் இப்போது ஒப்பம் அளித்துவிட்டார் என்ற குறிப்புணர்ந்து, தமது இராஜிநாமாக் கடிதத்தைத் தபால் மூலம் அனுப்பிவிட்டார்.

1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ பகவான் மஹாநிர்வாண மடைந்த பின்னர், திருவண்ணாமலையிலேயே நிரந்தரமாகத் தங்கியிருக்க வேண்டு மென்று ஸ்ரீ சுவாமிகள் விரும்பினா ரெனினும், சிற்சில சூழ்நிலை காரணமாக ஒரு சில மாதங்களில் திருவண்ணாமலையை விட்டுச் செல்ல வேண்டி வந்ததால், மீண்டும் தஞ்சைக்குத் திரும்பினார். அக் காலத்தில் தான் ஸ்ரீ சுவாமிகளுக்கும் ஸ்ரீ ஜானகி மாதாவுக்கு மிடையில் தாய்-சேய் இணக்கம் போன்ற மிக நெருங்கிய தெய்வீக அன்பு மலர்ந்தது. ஸ்ரீ ஜானகி மாதா ஸ்ரீ சுவாமிகளை ஸ்ரீ ஜானகி நிலையத்திலேயே தங்கியிருந்து, தாம் விரைவில் ஆரம்பிக்க விருந்த ஸ்ரீ பகவானைப் பற்றிய 'அருள்' எனப்படும் தமிழ் மாதப் பத்திரிகை யொன்றிற்கு அவரே ஆசிரியராகப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் விரும்பினார். ஸ்ரீ சுவாமிகளும் அதற்கு இணங்கி, ஐந்து வருட காலத்திற்குப் பெரும்பாலும் ஸ்ரீ ஜானகி நிலையத்திலேயே வாழ்ந்து வந்தாலும், இடையிடையே ஓரிரு மாதங்களுக்கு ஊர் ஊராகச் சென்று பிக்ஷை யேற்று உண்டு, பரிவிராஜக வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அச் சமயம் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் திருவண்ணாமலைக்கு வந்து செல்வதையும் வழக்கமாக்கொண்டார். திருவண்ணாமலையிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட வேண்டும் என்ற ஆவல் ஸ்ரீ சுவாமிகளுக்கு மேன்மேலும் வளர்ந்து வந்த போதிலும், அதற்கேற்ற காலம் கனியவில்லை போலும்! ஏதேனுமொரு இடையூறு அவரைத் திருவண்ணாமலையில் நீண்ட காலம் தங்க விடாது தடுத்துக்கொண்டே வந்தது. ஆயினும், தமக்கு வந்த இடையூறுகளைப் பற்றி யாரிடமும் கூறுதும் எதிர்க்காதும், எல்லாம் ஸ்ரீ பகவான் அருளிஷ்டப்படியே நடக்கட்டும் என்றெண்ணி,

"கல்லா லடிக்கன்று நால்வரை மௌனமாய்க்
காப்பாற்றி யருள்செய்தனை
கைகுவித் துன்னருட் காட்சிக் கிணைந்தமெய்க்
கண்ணப்ப னன்புக்கனிக்

கெல்லாமோ ராறுநா ளிற்செய் தவத்தா
லெடுத்துண் டிணைத்தருளினை
ஏதிலார் முப்புரத் தின்னல் பொருதமரர்
ஏங்குநாள் கையிலுற்ற
வில்லாலு மன்றிநின் விளையாட்டு நகையினுல்
வென்றமரர் துயர்வீழ்த்தினை
வினைவிலங் கறவன்று வெளியேனை 'நீவந்த
வேலையைப் பா'ரென்றொரு
சொல்லா லுணர்த்தினைச் சொன்னபடி வாழ்ந்துநான்
சுகமா யிருக்கவருள்வாய்
தூயபர மானந்த துரியவடி வேபரஞ்
ஜோதிரம ணேசகுருவே."*

என்று பிரார்த்தித்து அவரருளையே நாடிய வண்ணமாய் இருந்தார்.

தஞ்சை ஸ்ரீ ஜானகி நிலையத்தில் ஸ்ரீ ஜானகி மாதா மற்றும் இதர ரமண பக்தர்களிடையில் வாழ்ந்து வருவதில் ஸ்ரீ சுவாமிகள் மகிழ்வுற்ற போதிலும், உத்தம சற்குருவாகிய ஸ்ரீ ரமண பகவான் அவரை அச் சூழ்நிலையில் திருப்தியுற் றிருக்க அனுமதிக்க வில்லை. 'வந்த வேலையைப் பார்' என்று ஸ்ரீ பகவான் ஏற்கனவே அறிவுறுத்தி யிருந்ததோடு அமையாது, மேற்கண்ட பாடலில் ஸ்ரீ சுவாமிகள் பிரார்த்தித்தவாறு அவர் வந்த வேலையைக் கவனிப்பதற்காக அவரைத் தவத்தாற் பாகம் செய்து, அவரைத் தமக்கே முழுமையாக ஆளாக்கிக்கொள்ளத் திருவுளம் கொண்டு, அவர் வாழ்க்கையுட் புகுந்து தம் அருள் விளையாட்டைத் துவக்கினர்.

எவ்வாறெனின், 15-5-1955 அன்று ஸ்ரீ ஜானகி மாதாவின் கணவரான டாக்டர் கணபதி ஐயர் காலமானுர். ஸ்ரீ மாதா தமது திருமணம் முடிந்த ஒராண்டுக்குப் பிறகு தமது பதினுன் காவது வயதில் செய்துகொண்ட சங்கல்பத்தின்படி, இந்து ஸ்திரீ தர்மத்திற்கிணங்க 'சதி' வழக்கத்தை அனுஷ்டிக்க முடிவு செய்தார். இதனை யறிந்திருந்த அவரது உறவினர்களும் பக்தர்களும் பத்தாம் நாள் கிரியைகளுக்கு முன்னதாகவே அவர் எங்கே உடலை நீத்துவிடுவாரோ என அஞ்சி, மிகவும்

*13-4-1953 அன்று இயற்றிய 'ஜோதி ரமணேச குரு' என்ற தலைப்பிலுள்ள 9வது பாடல்.

முன்னெச்சரிக்கையுடன் அவரைப் பாதுகாத்து வந்தனர். எனவே தஞ்சையில் இருக்கும் வரை தம் திட்டம் பலிக்காதெனக் கண்டுகொண்டு, கங்கையில் தம் உடலை நீப்பது எளிதாகும் என மனதிற்குள்ளேயே முடிவு செய்துகொண்டு, தம் கணவரின் அஸ்தியை திரிவேணி சங்கமத்தில் கரைத்து வருவதாகத் தம் உறவினர்களிடம் சொல்லிவிட்டு அலஹாபாத் சென்றார். உடன் சென்ற உறவினர்கள் அங்கேயும் அவர் திட்டம் நிறைவேறாது தடுத்துவிட்டனர். ஏற்கனவே துயரடைந்திருந்த அவர் மனம் மேலும் பாதிப்படைந்தது. அப்போது உடன் சென்றிருந்த ஸ்ரீ சுவாமிகள் தமது பூசனைக்கும் போற்றுதற்கும் உரியவரா யிருந்த ஸ்ரீ மாதாவினுடைய வேதனையினாலும் ஏமாற்றத்தினாலும் குலைந்திருந்த மனநிலையைக் கண்டு, அவருக்கு ஆறுதல் அளிக்க வேண்டி,

"உடலை விராகத் தொழித்திடுகை புத்தி
யுடையவராற் செய்ய வொண்ணாதே — யுடலிதனை
யாரம்பித் துள்ளவினை யற்றவுட னிவ்வுடல
பாரந்தா னேயகலும் பார்."

என்ற 'தேவிகாலோத்திரம்' 45வது பாடலில் ஸ்ரீ பகவான் அளித்துள்ள உபதேசத்தை ஸ்ரீ மாதாவுக்கு நினைவுறுத்தினார். ஸ்ரீ சுவாமிகள் இவ்வாறு ஸ்ரீ பகவானின் அருளுபதேசங்களை எடுத்துக் கூறவே, ஸ்ரீ மாதா தமது பாதிக்கப்பட்ட மனநிலையின் காரணமாக "உன்னுடைய ஆன்மவிசார-ஆன்மசமர்ப்பண தத்துவங்களெல்லாம் உனக்கும் உன் பகவானுக்குந் தான் ஏற்ற வை. நான் லலிதாம்பிகையை உபாசித்திருந்தால்,எனது சுமங்க லித்துவம் போயிருக்காது. அத்வைத ஆனந்தானுபவத்திலேயே எப்போதும் திளைத்திருக்கும் ஸ்ரீ பகவானுக்கு வேண்டுமானால் மங்களம்-அமங்களம் ஆகிய பேதங்களெல்லாம் தோன்றா திருக்கலாம். ஆனால் நான் எவ்வாறு அப்படி இருக்க முடியும்?" என்று வெகுண்டு சொன்ன சொற்களைக் கேட்டு ஸ்ரீ சுவாமிகள் திடுக்குற்றார். 'இது பகவான் வழி யல்ல; இனியும் நாம் இருப்பதற் கேற்ற இடம் இது வல்ல' என்றெண்ணி,

"ஏயமனச் சான்றுக் கிசையொழுக்கே நல்லினந்தான்
மேயதனை யோர்கால் விலக்குமேற் — றூய
மனச்சான் றதனை மறுத்தங்கு வாழ்விற்
றனிச்சார்ந்து வாழ்வே தலை."

என்ற 'குருவாசகக் கோவை'' 819வது பாடலுக் கேற்ப ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ ஜானகி நிலையத்தை விட்டுப் பிரிந்து தனியே வாழ வேண்டு மென்று தீர்மானித்தார்.

ஸ்ரீ மாதாவிடம் தம்முடைய இந்தத் தீர்மானத்தை ஸ்ரீ சுவாமிகள் தெரிவிக்கவும், ஸ்ரீ மாதா முதலில் அதனை ஏற்க மறுத்து ஒரு தாய்க்குரிய பரிவுடன் அவர் தம்முடனேயே தங்கி யிருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் ஸ்ரீ சுவாமிகள் பல காரணங்களை எடுத்துச் சொல்லித் தாம் பிரிந்து செல்வதே இருவருக்கும் நல்லதாகும் என்று விளக்கிய பிறகு ஸ்ரீ மாதாவும் அதற்குச் சம்மதித்தார். ஆயினும் "திருவண்ணாமலையைத் தவிர நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்; உனக்குள்ள இனிய குரலுக்கும் இசை ஞானத்திற்கும் நீ திருப்பதி சென்றால், உனக்கு வாழ்வில் சிரமம் இருக்காது" என்று ஸ்ரீ மாதா சொன்னார். ஸ்ரீ பகவானின் உபதேசம் பற்றி ஸ்ரீ மாதா சொல்லிய சொற்களால் ஏற்கனவே மனம் புண்ணாகியிருந்த ஸ்ரீ சுவாமிகளின் நெஞ்சில் இச் சொற்கள் நெருப்பாகத் தகித்தன; பொருளுக்கும் புகழுக்கும் பாடும் அற்பன் என அன்னை நினைத்துவிட்டாரே என்றெண்ணி வேதனை யுற்றார். ஆயினும், தனயன் வாழ்க்கையில் கஷ்டப்படக் கூடாதே என்ற தாய்க்குரிய பரிவின் காரணமாகவே அவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார் என்பதை ஸ்ரீ சுவாமிகளின் உள்மனம் உணர்ந்தது.

பிற்காலத்தில் ஸ்ரீ ஜானகி மாதாவைப் பற்றி ஸ்ரீ சுவாமிகள் சொல்லும் போது, அவர் இழிகுணங்கள் ஏதும் தொட முடியாத தூய்மையான உள்ளம் பெற்ற அன்பின் சொரூப மென்றும், ஸ்ரீ பகவானிடம் சிறந்த தூய பக்தி கொண்டிருந்த அவரிடம் உண்மையில் தேவியின் அம்சம் ஒளிர்வதுண்டு என்றும், ஆனால் ஞானத்தின் முழுத் தெளிவைப் பெறாத குறை அவரிடம் இருந்ததென்றும், எனவே தம் கணவரின் பிரிவுத் துயரின் ஆற்றாமையின் காரணமாக மனத்தின் தெளிவு மங்கி, மனத்தின் நடுநிலை தடுமாறி அத்தகைய சுடு சொற்களைக் கூறியிருக்கிறார் என்றும் குறிப்பிடுவதுண்டு. அது மட்டுமன்றி, ஸ்ரீ மாதா ஸ்ரீ சுவாமிகளிடம் கொண்டிருந்த வாத்ஸல்யத்திற்கும், ஸ்ரீ சுவாமிகளுக்கு ஸ்ரீ மாதாவிடம் இருந்த ஈடு இணையற்ற தெய்வீக அன்புக்கும் இடையே ஏதொன்றும் குறுக்கிட்டு

அவர்களைப் பிரிக்க முடியாதிருந்த நிலையில், ஸ்ரீ பகவான் தாயிடமிருந்து தனயனைப் பிரித்து தந்தையாகிய தம்பால் அவரை முழுதும் ஈர்த்துக்கொள்ளத் திருவுளம் கொண்டதால் தான், அன்னையிடமிருந்து நிமித்த காரணமாக சுடுசொற்கள் வெளிப்பட்டன என்பதையும் ஸ்ரீ சுவாமிகள் கூறுவதுண்டு. தன்னை அச் சூழ்நிலையிலிருந்து பலவந்தமாகப் பெயர்த்து எடுக்க ஸ்ரீ பகவான் கையாளும் கருணைச் செயலே இது என்றறிந்து, ஸ்ரீ பகவானின் கருணைத் திறத்தை வியந்த ஸ்ரீ சுவாமிகள் பிற்காலத்தில் இது குறித்து,

“இருந்ததின் பண்ட மிளஞ்சிறுர் கையிற்
பருந்து பறித்துப்போம் பாங்கிற் — பெருந்திறலோய்
மற்றவர்பா னின்றும் வலிந்து பறித்தெனைநீ
பற்றிக் கொணர்ந்ததென்னே பாங்கு!”

“எங்கோ பிறந்தேன்மற் றெங்கோ வளர்ந்தேன்போ
யெங்கோ புகல்தருவ ரென்றெண்ணித் — தங்கினே
ணுனுலு(ம்) நின்பே ரருள்வலமாங் காங்குவிட்டுத்
தானுய்க் கொணர்ந்ததிங்கு தான்!”

என்று தாம் இயற்றிய ‘ஸ்ரீ ரமண ஸஹஸ்ரம்’ 975, 976 ஆம் பாடல்களில் பாடியுள்ளார்.

1955ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ ஜானகி நிலையத்தை விட்டு விலகிச் சென்ற சில வாரங்கள் கழித்து, ஸ்ரீ ஜானகி நிலையத்தை விட்டுத் தாம் விலகிச் சென்றதற்காகத் தம்மீது குற்றங் கண்டு, ‘பக்தி யற்றவன்’, ‘குரு துரோகி’, ‘நன்றி கெட்டவன்’ என்றெல்லாம் சிலர் பழி சுமத்தி வருவதை ஸ்ரீ சுவாமிகள் அறிய வந்தார். ஆயினும், இத்தகைய பழிச்சொற்களைக் கேட்க நேர்ந்த அவரது பரிசுத்தமான உள்ளத்தில் கோபம் எழவில்லை. “ஆம்! தப்பு செய்தவன் நான் தான். நல்ல நோக்கத்துடனே நான் சொல்லி யிருந்தாலும், அம்மா கேட்காத போது நானுக அந்த புத்தி மதியை அவருக்குச் சொல்லத் துணிந்திருக்கக் கூடாது; இவ்வாறு செய்ததால் நான் அம்மாவின் மனதைப் புண்படுத்தி விட்டேன்; அதன் காரணமாகவே தான் இந்தக் கஷ்டங்க ளெல்லாம் எழுந்துள்ளன; எனவே அவர்கள் என்னைக் குறை கூறுவது சரியே; தவறு செய்ததற்கு இது வேண்டும்;

என்னைத் தூற்றட்டும்" என்றெண்ணி, இவ்வாறு "தற்செயலாய் நேர்ந்த தவறேனும், தான் இரங்கும் அச் செயலும் இன்றேல், அவன் மனதின் தன்மை என்னே?" என்ற ஸ்ரீ பகவானது அருள் வாக்குக்* கேற்ப. தற்செயலாகத் தாம் செய்த அத் தவறுக்கு இரங்கி, தம் மனத்தை விளித்து,

"அப்பனே! ஏனென் றறிந்தாயா விந்நிகழ்ச்சி?
தப்புநீ செய்துள்ள தாதலினுல் — இப்படியே
யாயிற் றினியேனு மப்பிழைசெய் யாதபடி
போயுயர்க வுன்னுடைய புத்தி."

என்று 15-7-1955 அன்று பாடியுள்ளார்.

அதிதீவிர பக்குவியான ஸ்ரீ சுவாமிகள் உண்மையில் தாம் தப்பேதும் செய்யவில்லை யாயினும், நடந்த எல்லாவற்றுக்கும் தம்மீதே முழுப்பொறுப்பை ஏற்றுக்கொண்டும், அந்தச் சமயத்தில் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களெல்லாம் அவருடைய தூய, மேன்மையான உள்ளத்தில் ஒரு பெரும் வேதனையை ஏற்படுத்தின. இவ்வாறு வேதனைத் தீயினுல் வெம்பிய அவர் மனம், தமக்கு ஒரே பற்றுக்கோடாய் விளங்கிய ஸ்ரீ பகவானின் மலரடிகளில் மேலும் அதிதீவிரத்துடன் அடைக்கலம் தேடியது. இம் மனநிலையைக் கீழ்வரும் 'ஸ்ரீ ரமண வருகை'யின் பாடல்களிலிருந்து நாம் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

"உலகின ரகன்றூர் உண்மையன் பினரென்
றுறுதியா யானுநம் பினபேர்
விலகின ரென்னை வெறுத்தனர் விடுத்தார்
வெம்பினேன் துணையிலா தினியுன்
அலகிலா அன்பும் அருட்குரு வுருவும்
அன்றியோ ராறுத லறியேன்
நிலமிசை என்கண் நிலைபெறக் காண
நேயனே ரமணனே வருக." (51)

"முன்பிருந் தேவல் முயன்றிடிற் பெரியோர்
மூடமாம் மதியினுற் பிழைகள்
துன்பெமுந் தாலும் அன்பினுற் பொறுப்பர்
துறந்திடா ரெனையெனத் துணிந்தேன்

* 'உபதேசத் தனிப்பாக்கள்' 7வது பாடலைக் காண்க.

என்பிழை பொறுக்கும் இயல்பிலா ரெவரும்;
எவ்விட மன்பினைக் காண்பேன்?
அன்பினைச் சுவைப்ப தாரிட மென்றே
அஞ்சினேன் ரமணனே வருக." (52)

"மழையிலாப் பயிர்போல் வாடிஎன் னுளத்தில்
வலிவிலாப் போது நான் செய்யும்
பிழையெலாம் பொறுப்பர் பின்பொரு நாளும்
பிழைசெயா வன்மையும் பெய்து
தழையவே செய்வ ரெனச்சர ணடைந்தால்
தள்ளினர் சகத்துள பெரியோர்
அழஅழ நான்வந் தண்டினேன் அபயம்
அளித்திட ரமணனே வருக." (53)

"கொடுப்பதாக் கூறி பசித்தவன் றனையுட்
கொண்டுபோய்ப் பசியினுற் குலைகள்
நடுக்குறு நாழி காத்திட வைப்பார்
நாவெடுத் தொருகுரல் கேட்டால்
அடிப்பதாச் சீறி யகற்றுவார் வெளியில்
அற்புதம் மனிதரி னழகே
அடுப்பனே இவரை யஞ்சினேன் காண
அருட்குரு ரமணனே வருக." (54)

"நீந்திட வறியா வெனையிவர் நீந்தும்
நெறியறி வோமெனத் தூக்கி
ஏந்தியே ஆற்றி னிருகரை நடுவில்
இட்டெனை எதுகுறித் திகழ்ந்தோ
போந்தனர் வெறுத்தார் ஐயகோ செல்லும்
போக்கெது? புகலெது? முழுகிச்
சாந்துய ரடைந்தேன் சற்குரு மூர்த்தி
தயவுளாய் ரமணனே வருக." (55)

"வழியிற் றுணையாய் வந்தெனையுன்
மலர்ச்சீ ரடிக்கே விடுவோராய்
விழியிற் கண்டோர் தமையெல்லாம்
விரும்பி நயந்தேன் அவ்ரெல்லாம்
வழியிற் கைவிட் டகன்றூர்என்
மனநோ வறிய மாட்டாராய்
அழிவிற் கஞ்சு மென்முன்னே
அப்பா ரமணா வருவாயே." (140)

"தங்கச் சட்டி ஏனிலே? நான்
 தரமாட் டேன்!போ!' என்பார்போல்
எங்குற் றங்கண் டெனைத்தள்ளி
 இகழ்வார் பாற்சென் றென்செய்வேன்
மங்குற் றறிவு மயங்கிடுநாள்
 வலிவில் லாமல் வாழ்கின்ற
கங்குற் போதுங் கைகொடுக்கும்
 கடவுள் ரமணா வருவாயே." (148)

"தனியாய் வாழச் சக்தியிலேன்
 தன்மை கண்டாய் தரணியுள்ள
மனிதர் துணையும் உடன்வாழ்வும்
 வாய்க்கின் மனமோ வாந்திசெயும்
புனிதா நீயே போந்திங்கென்
 புலன்க ளறிய நடமாடித்
தனிமை யகற்றித் தரவேண்டும்
 தந்தாய் ரமணா வருவாயே." (153)

"சச்சங் கத்தார் உனையன்றிச்
 சகமேல் யாரோ? தனியான
நிச்சங் கத்தால் உன்னடிக்கே
 நேசம் பொருந்தி நிற்பதலால்
எச்சங் கத்தும் ஏகேன்நீ
 என்னோ டிருந்து யான்கொண்ட
அச்சங் கெடுப்பாய் கண்முன்வந்
 தருள்வாய் ரமணா வருவாயே." (154)

இத்தகைய மனநிலையில் தான் 'உனக்கே நமஸ்காரம்', 'ஸ்ரீ ரமண வருகை', 'இறைவனைக் கண்டிட எண்ணினால்', 'அண்ணாமலை ரமணாண்டி' போன்ற பல உருக்கமான பாடல்கள் அவர் உள்ளத்திலிருந்து பொங்கி யெழுந்தன.

"...'உன்னைக் கொடு'வென்று கேட்டான் — நான்
 ஓடி ஒளிந்தாலு மேவிட மாட்டான்!
தன்னையேநம்பிடச் சொல்வான் — யாரும்
 தானென் றெழுந்தால்தன் சக்தியால் வெல்வான்...
நானெங்கும் போகச் சகியான் ...
'என்னிட மேயிரு' என்பான் — 'வே
 றெதையும் பாராதே,நீ என்னைப்பார்' என்பான்!...
யாரிட மும்விட மாட்டான் — 'உனக்(கு)
 யார்வேண்டும்? நானல்ல வோ?'என்று கேட்டான்..."

என்று ஸ்ரீ சுவாமிகளே பாடியது* போன்று, ஸ்ரீ பகவான் தம்முடைய வாழ்வு முழுவதையும் கொள்ளையடிக்க முடிவு செய்துவிட்டாரென்பதை நன்குணர்ந்த ஸ்ரீ சுவாமிகள் "தனக் கிணை தானென சற்குருவா யுடல் தாங்கி வந்தாய் உனக்கு அலது ஆர்க்கடியேன் உரியேன் இனி யுண்மையிலே"† என்ற திடஞானத்துடன் ஸ்ரீ ஜானகி நிலையத்தை விட்டு வெளியேறிய பின்பு, அவரது நண்பராகிய ஸ்ரீ S. சிதம்பரம் என்பவர் ஸ்ரீ சுவாமிகள் தங்குவதற்காகவும், தாங்கள் வசிப்பதற்காகவும் ஒரு வாடகை வீட்டை ஏற்பாடு செய்து, அதில் ஓர் அறையை ஸ்ரீ சுவாமிகளுக்கென்று ஒதுக்கிக் கொடுக்க, ஸ்ரீ சுவாமிகளும் அதில் தங்கியிருந்தார். ஒரு மாதத்திற்கும் மேலாக அவ் வறையி லிருந்து கொண்டு, ஸ்ரீ பகவானின் அருளுக்காகவே ஏங்குவதும், அவரை எண்ணி அழுவதும், அவரைப் பற்றிப் பாடல்களை இயற்றுவதுமாக இருந்து வந்தார். அதே நாட்களில் பக்கத்திலிருந்த இன்னொரு அறையில் தினமும் சில மணி நேரம் கைராட்டினம் மூலம் பஞ்சை நூற்று நூலாக்கி வந்தார். இதையே ஸ்ரீ சுவாமிகள்,

"நெஞ்சைநூ லாக்கி நெகிழ்ந்துமற்ற நேரத்திற்
பஞ்சைநூ லாக்கும் பணிதந்து — தஞ்சையிலே
வாழுமா றின்றென்னை வைத்த ரமணனடித்
தாழுமே யென்றன் றலை."

என்று 20-7-1955 அன்று பாடியுள்ளார்.

மிகச் சிறந்த அடியார்களது வாழ்வில் பற்பல கொடிய துன்பங்கள் அடிக்கடி வந்து அவர்களை மிகவும் துன்புறுத்து வதை நாம் காண்கின்றோ மல்லவா?

"இடியேறு போற்பல் லிடையூறு செம்மா
ணடியாரை யாற்ற வடர்த்தல் — ஒடியா
நிலைநிறுத்தற் கன்றியந் நின்மலர்தந் நெஞ்சை
உலைவுறுத்தற் கன்றென் றுணர்."

என்று 'குருவாசகக் கோவை' 617வது பாடலில் ஸ்ரீ பகவான் கூறியவாறு, தம்முடைய வாழ்க்கையில் ஸ்ரீ பகவான் ஏற் படுத்தியுள்ள எல்லாக் கொடிய துன்பங்களும், சற்குருவின் திருவருட்சபையில் தாமும் சார்ந்திடும் பொருட்டுத் தமது

---

* 'அண்ணாமலை ரமணாண்டி' பாடல்கள் 14-18.
† 'ஸ்ரீ ரமண குருவருளந்தாதி' 4வது பாடல்.

மனத்தைத் தளர்வுறாமல் தவத்தில் நிலைத்து நிற்க வைப்பதற்காகவே என்பதை ஸ்ரீ சுவாமிகள் அறிந்து, அவை யாவும் தம் நன்மைக்கே என்று எடுத்துக்கொண்டார். இதையே,

"சுபமயந் தருவார் பெரியவ ரிவர்நம்
துணைவரென் றிதுவரை துதித்தும்
அபலமா யானேன் யாவரும் வெறுத்தார்
அதுவுமோர் நன்மையே உன்றன்
சபையிலே யானுஞ் சார்ந்திடத் தானே
தாயெனக் கண்முனே தோன்றி
அபயமே தருவார் யாருனை யன்றி
அஞ்சினேன் ரமணனே வருக."

என்றவாறு 'ஸ்ரீ ரமண வருகை' 56வது பாடலில் பாடியுள்ளார்.

"தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுட னணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை யணைப்பனிங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலா லென்னை
அடித்தது போது மணைத்திடல் வேண்டும்
அம்மையப் பாவினி யாற்றேன்."

என்று ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் பாடியவாறு, 'இன்று தாய் அடித்துவிட்டாள்; தந்தை நீ என்னை அணைத்திட வாராயோ?' என்று அவர் உள்ளம் ரமண வருகைக்காக ஏங்கியது. ஸ்ரீ பகவானின் திவ்விய தரிசனம் கிடைத்தாலன்றி, அவர் உயிர் தரிக்காது என்ற நிலை ஏற்பட்டது. ரமண தரிசனத்திற்காக ஏங்கி ஏங்கி அழுதார், தொழுதார், துடித்தார். அருட் தந்தையின் தெய்வத் திருமேனியைக் காணத் துடிக்கும் அவரது மன நிலை கைலையைக் காணச்சென்ற அப்பரையும், கண்ணனை நோக்கிக் கதறிச் சென்ற சைதன்யரையும், காளியன்னையின் காட்சி வேண்டிக் கைவாளால் தன் கழுத்தைச் சேதிக்கவுந் துணிந்த இராமகிருஷ்ணரையும், அசோக வனத்திற் சிறையிடப்பட்டு இராம தாகத்தால் ஏங்கி நின்ற சீதாப் பிராட்டியையும், இராமனைக் காணக் கானகஞ் சென்ற பரதனையும் அப்படியே ஒத்ததாய் இருந்தது.

"அறியாதிருந்த எனக்கு அன்றே உணர்த்தி அருட் குறியால் உனைக் கொடுத்தாய். அன்றுமுதல் ஓவென்று வெறியால் அழுது வெம்பி வெம்பி அழுகின்றேன் ரமணேசா.

"திருச்சுழியின் செல்வர் அடி தீண்டாமல் தெருநாய் போல் இருக்க மனம் சகியாமல் ஏதோதோ புலம்புகின்றேன்.

"கண்டவ ரெல்லாம் நகைக்கக் கண் கலங்கி அழுகின் றேன். கொண்டவன் நீ கைவிடில் கோதை என் மனம் கொதிக்காதோ?

"என்றேனும் அகம் புணர்வாய் என்றெண்ணி வாழ்கின் றேன். இன்றே நீ 'இல்லை' யென்றால், இப்பொழுதே பிணமா வேன்.

"உண்பதற்கோ, உலகரைப் போல் உடுப்பதற்கோ அன்றி, கண்பதைக்க உனக்காகக் காத்திருந்து நலிகின்றேன்.

"கண்ணயர, கால் தளர, மரம் போன்றே கிடக்கின்றேன். மன்னவ, நின் மலரடிகள் சிரம் பூணக் கொடுப்பீரேல் ஜீவன் வரும் ரமணேசா. வரம் வேண்டும், வரல் வேண்டும்."*

அடியவர்களின் துயர் துடைக்கும் பொருட்டுப் பெயரும் வடிவும் தாங்கி அவர்தம் முன் எழுந்தருளிய நிகழ்ச்சிகளும் அரிதோ?

"ஆரூர் நம்பி அழைக்குங்கால் அவர்முன் தோன்றி அருளிலையோ?

"தூது நடந்தாய்சுந்தரர் மெய்த்தொண்டர் மனையாளிடை யிரவில்; வாது தொடர்ந்தாய் மண நாளில்; மணியும் பொன்னும் வழங்கினையே.

"பாவச் செயலார் எழுந்து திரௌபதியைத் துயிலே பறிக்குங்கால், கூவித் துதிக்க உடனே கைகொடுத்து அங்கு உதவிக் குறை தீர்த்தாய்.

---

*'குயிலொடு கூறல்' பாடல்கள் 2, 4, 5, 7, 8, 9ஐக் காண்க.

“சேதம் புரிய இரணியனுஞ் செய்த சதிக்கெல்லாம் பிரகலாத னிடுக்கண் அகற்றிடவே, அலையில் மலையில் அடு நஞ்சில் ஏதம் படராது எழுந்தனையே.

“ ‘எங்கு முளனேல் தூணிதனில் எனக்கே காட்டு’ என்று இரணியனும் பொங்கும் பொழுதே, புகல்தந்து உன் புதல்வன் காணப் போர் வெல்லுஞ் சிங்க வடிவிற் றோன்றினையே.

“ ‘எந்தா யெந்தா’ யென விரந்த இராமலிங்கர்க் கிரவினிலே வந்தே எழுப்பி ‘மகனே நீ வா’ வென் றழைத்துக் கைதனிலே ‘இந்தா’ வென்றோன் றீந்தனையே

“வெருவுஞ் சிறியாள் விலக்கிட, முன் வெம்பிக் கானில் வீற்றிருந்த துருவனிடமே அழகுருவில் தோன்றி நின்ற தூமணியே.

“குருந்தை யடியில் மணிவாக்கைக் கொண்டு முடிக்க குருவாகி ... புனிதர் சொலச் சொல்ல எழுதிக் கொடுக்க இசைந்தே முன்னெழுந்தாய்

“குதிரை யூர்ந்தாய்; நரி பரியாய்க் கொணர்ந்தாய்; அரையன் கொடுத்த அடி அதிர நலிந்தாய்; வைகைக்கு ஓர் அணையுஞ் செய்தாய்; ... யார்தான் நீ சகுண வடிவம் தாங்காத புதிய னென்பர்?

“கடந்த வினைபால் கழிவிரக்கம் கனியும் அருணகிரிக்கு ஓடி அடைந்து தாங்கி அழியாமல் அமர்ந்த நிலையில் அமர்வித்தாய்.

“தம் பற்று ஒழிய, தரிசனம் நீ தந்து உன் அன்பர் தமக்காக கம்பத்திளையனுகவுமே கடவுளுருவங் காட்டிலையோ?”*

‘இவ்வாறு சகுண வடிவந் தாங்கி நீ காட்சி தந்ததற்கு முன் உதாரணங்கள் பல கூறலாம். ஆனால், அன்னவர்தம் உயர் பக்தியை மெச்சி உன் நாமரூபக் காட்சியை அவர்களுக்குப் பரிசாக அளித்திருக்கலாம். ஆனால் அத்தகு உயர் பக்தியோ உயர் குணங்களோ அற்ற எனக்குப் பரிசாகத் தர நியாயமில்லை யாயினும், எனக்கு தானமாகவாவது உன் தரிசனம் தா’ என்று வெகு வினயமாக வேண்டுகிறார் ஸ்ரீ சுவாமிகள்.

*‘ஸ்ரீ ரமண வருகை’ பாடல்கள் 113-131ஐக் காண்க.

"தான மாகத் தரிசனம்நீ
தந்தா லன்றித் தகுதியெனக்(கு)
ஆன துண்டோ? அவலமெலாம்
அகலா மனத்தேன்; அறியாயோ!
ஞான குருவே உனைக்கண்முன்
நாடிக் கண்டால் பிறகேதான்
ஈன குணங்கள் எனையகலும்
இதற்கே ரமணா வருவாயே."

— ஸ்ரீ ரமண வருகை - 147.

இவ்வாறு ஆற்றாமையால் கொந்தளித்த அவரது உள்ளக் கடலினின்றும் பாடல்கள் பல · ஸ்ரீ ரமண வருகையை வேண்டி அலையலையாய் உருவெடுத்து ஸ்ரீ பகவானின் பாதத்தை நோக்கிப் பாய்ந்தன. "அப்பனே வருக, ஆரமுதே வருக, உலக மகா குருபரா வருக, உலப்பிலா ஆனந்தமே வருக, எந்தாயே வருக, எந்தையே வருக, பரமனே வருக, பகவனே வருக, ஐயனே வருக, அபயக் கையனே வருக, அண்ணலே வருக, அற்புதா வருக, பொற்பதா வருக, நற்பிதா வருக, அத்தனே வருக, அசலவகத்தனே வருக" என்று ஆயிரம் முறை ஸ்ரீ பகவானைத் தம் தமிழ்க் கவிவாயால் கூவி அழைத்தார். ஆயிரம் பாடல்கள் புனைய அவர் எண்ணினர்* எனினும்,

"மங்கா திருக்குந் திருவண்ணா
மலையைக் காண வருமாறே
அங்கே யழைத்தான் அருணேசன்
அதுபோல் 'நீவா அரு'கென்றே
எங்கே யழைப்பா யாயினுமென்
இறைவா உடனே எழுந்தோடி
அங்கே வருவேன் இடஞ்சொல்லி
அழைக்க ரமணா வருவாயே."

என்ற 172வது பாடல் பாடி முடித்த வுடனே, ஸ்ரீ பகவானின் திருவுருவக் காட்சி ஸ்ரீ சுவாமிகளின் முன் தோன்றியது. ஸ்ரீ சுவாமிகள் தம் இளவயதிலிருந்தே அம்பிகை, சுப்ரமணியர்,

---

*ஸ்ரீ சுவாமிகள் தாம் கைப்பட யெழுதிய மூலப் பிரதியில் 'ஸ்ரீ ரமண வருகை ஆயிரம்' என்று தலைப்பை எழுதியிருந்தாலும், ஆயிரம் பாடல்களை இயற்றி முடிக்காததால் பின்னரில் ஸ்ரீ சுவாமி களே 'ஸ்ரீ ரமண வருகை' என்று தலைப்பை மாற்றி யமைத்தார்.

விநாயகர் போன்ற தேவதேவியரின் திவ்வியக் காட்சிகளையும், பிறகு தமது 20 அல்லது 21ஆம் வயதில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலாகப் படித்ததும் அவரைப் பற்றிய நினைவிலேயே ஒரிரு நாட்களுக்கு மூழ்கிக்கிடந்த நிலையில் பரமஹம்சரின் புன்னகையுடன் கூடிய திருவுருவக் காட்சியையும் காணக் கூடியவரா யிருந்தார். இது போன்றே பிற்காலத்தில் ஸ்ரீ பகவானை வந்தடைந்த பின்னரும் பல தடவை கனவிலும் நனவிலும் ஸ்ரீ பகவானின் பிரகாசமான காட்சிகளை மிகத் தெளிவாகக் கண்டிருக்கிறார். இப்படியாகத் தெய்வீகக் காட்சிகளைக் காண்பது ஸ்ரீ சுவாமிகளுக்குப் பழக்கப் பட்ட ஒன்றாக யிருந்ததே தவிர, புதிய அனுபவமாக இருக்க வில்லை. எனவே, இப்போது உள்ளத்தை உருக்கும் தம்முடைய பிரார்த்தனைக் கிரங்கி ஸ்ரீ பகவான் தம்முன் தோன்றி காட்சி தந்த போதும், 'உள்ளது நாற்பது' 20வது பாடலில் வரும் "காணுந் தனை விட்டுத் தான் கடவுளைக் காணல் காணு(ம்) மனோமயமாங் காட்சி..." என்ற ஸ்ரீ பகவானின் அருள்வாக்கு தான் உடனடியாக ஸ்ரீ சுவாமிகளின் ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே, இதற்கு முன் தாம் கண்ட பல்வேறு தோற்றங்களைப் போன்றே இப்போது காணும் ஸ்ரீ பகவானின் இந்தத்தோற்றமும் தம்முடைய மனக் கற்பனையே என்றெண்ணி, ஸ்ரீ சுவாமிகள் கொஞ்ச நேரத்திற்குத் தம்மிரு கண்களையும் மூடிக்கொண்டார். பிறகு கண்களைத் திறந்து பார்த்த போது ஸ்ரீ பகவானின் திருவுருவம் மறைந்துவிட்டதை அறிந்து, மீண்டும் பாடல்களைத் தொடர்ந்து இயற்ற ஆரம்பித்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு ஸ்ரீ பகவானின் திருவுருவம் மறுபடியும் முன்பு போலவே தோன்றி மறைந்துவிட்டது. முடிவில்,

"பார்த்து னைப்ப ழிப்ப டிந்த பாவ சிந்தை மாறிநான்
ஆர்த்து னைத்து தித்த பாத மள்ளி சென்னி மீதிலே
சேர்த்த ணைத்து னின்ப தாரை தேக மெங்கும் தோயவே
மூர்த்தி கொண்டு நீயெ னக்கு முன்னில் ரமண வருகவே."

என்ற 361வது பாடலை இயற்றி முடித்தவுடனே, ஸ்ரீ பகவானின் திருவுருவக் காட்சி மூன்றாவது தடவையாக ஸ்ரீ சுவாமிகளின் முன் தோன்றியது. ஸ்ரீ பகவானின் இந்தக் காட்சியும் தம் முடைய மனக்கற்பனையே என்றெண்ணி, மறுபடியும் தம் கண்களை மூடிக்கொண்டார். ஆனால் இந்த முறை மீண்டும்

கண்களைத் திறந்து பார்த்த போது, ஸ்ரீ பகவானின் திருவுருவம் தம்முன் மறையாது அப்படியே இருப்பதைக் கண்டார். மும் முறை காணில், மும்முறை கேட்டிடில், அது உண்மையின் உறுதி யாகும் என்ற வழக்கப்படி, மூன்றாவது முறையாகக் காட்சி தந்துள்ளதால் இது தாமே காண்கின்ற மனோமயக் காட்சி யல்ல வென்றும், சாக்ஷாத் ஸ்ரீ பகவானே தான் தமக்கு திவ்விய திருஷ்டி யளித்து சகுண வடிவுடன் தம்முன் தோன்றி யிருக்கின்றார் என்று முணர்ந்தார். ஆயினும் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டி, தம்முன் தோன்றியுள்ள ஸ்ரீ பகவான் திருவாய்மலர்ந்து ஏதாவது கூற வேண்டும் என எண்ணினார். உடனே ஸ்ரீ பகவான் (மேற்கண்ட 172வது பாடலின் பிரார்த்தனைக் கேற்றாற் போன்று)தம் திருக்கண்களால் நோக்கி, "என்னை ஏன் உன்னிடம் கூப்பிடுகின்றாய்? நீ ஏன் என்னிடம் வரக்கூடாது?" என்று கூறியருளினார்.

"நீ ஏன் என்னிடம் வரக்கூடாது?" என்ற ஸ்ரீ பகவானின் வார்த்தைகளை 'நீ ஏன் அருணாசலத்திற்கு வரக்கூடாது?' என்று கேட்பதாக ஸ்ரீ சுவாமிகள் உணர்ந்தார். எனினும், ஸ்ரீ சுவாமிகள் துறவு வாழ்க்கையிலுள்ள சிரமங்களை நன்கு உணர்ந்தவ ராதலால், ஸ்ரீ பகவானிடம் "நான் அங்கு வந்தால் சாப்பாட்டுக்கு என்ன செய்வது?" என்று வினவினார். உடனே அந்த திவ்வியக் காட்சி மறைந்து, ஸ்ரீ சுவாமிகளுக்கு முன்பே நன்கு பழக்கமான ஆச்ரமத்தில் அமைந்துள்ள போஜன சாலையில் ஸ்ரீ பகவான் எதிரில் தாம் அமர்ந்திருப்பதையும், அங்கே வரிசையாக நிறைய இலைகள் போடப்பட்டிருப்பதையும், ஆனால் வேறொருவரும் அங்கில்லாததையும் கண்டார். உண வைப் பரிமாற ஒருவரும் வரவில்லை யாதலால், ஸ்ரீ சுவாமிகள் ஏதோ வினவும் பாவனையோடு ஸ்ரீ பகவானைப் பார்க்கவே, ஸ்ரீ பகவானும் தம்முன் வைக்கப்பட்டிருந்த உணவுப் பாத்திரங் களைச் சுட்டிக் காட்டி, "உனக்கு நீயே ஏன் பரிமாறிக்கொள்ளக் கூடாது?" என்று வினவினார். அந்த திவ்வியக் காட்சியும் மறைந்தது; ஸ்ரீ சுவாமிகளும் தஞ்சையிலுள்ள தம் அறையி லேயே தாம் இருப்பதைக் கண்டார்.

"உனக்கு நீயே ஏன் பரிமாறிக்கொள்ளக் கூடாது?" என்ற ஸ்ரீ பகவானின் அருள்வாக்கே தம் சரீரத் தேவைகள்

தாமாகவே கவனித்துக்கொள்ளப்படும் என்று ஸ்ரீ பகவானால் கொடுக்கப்பட்ட உறுதிமொழி என நன்குணர்ந்து, ஸ்ரீ சுவாமிகள் அக் கணமே திருவண்ணாமலைக்குப் புறப்படத் தீர்மானித்தார். தம்முடைய நண்பரான ஸ்ரீ சிதம்பரத்தின் தாயாரிடம் தாம் சிட்டங்களை விற்க வெளியே செல்வதாகக் கூறி தாம் கைராட்டினத்தின் மூலம் நூற்ற நூல் சிட்டங்களைக் கையினில் எடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியேறி,

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே."

என்று அப்பர் சுவாமிகள் பாடியவாறு, தம் தலைவனை நோக்கிப் புனிதப் பயணம் தொடங்கினார்.

சிட்டங்க ளனைத்தையும் பத்து அணாக்களுக்கு விற்று விட்டு, புகைவண்டி நிலையத்திற்குச் சென்று கையிலிருந்த பத்தணாவையுங் கொடுத்து பயணச் சீட்டு வாங்கினார். அப் பயணச்சீட்டைக் கொண்டு கும்பகோணத்திற்கும் மாயவரத்திற்கும் இடையில் அமைந்துள்ள ஆடுதுறை என்ற ஊர் வரைக்குந் தான் பிரயாணம் செய்ய முடிந்தது. இப்படியாகத் தொடர்ந்த பற்பல சம்பவங்களைக் கொண்ட அந்தப் பிரயாணத்தின் முடிவில், ஸ்ரீ சுவாமிகள் திருவண்ணாமலை வந்தடைந்தார். அதன் பிறகு சுமார் முப்பது வருட காலமாகத் திருவண்ணாமலையிலேயே நிரந்தரமாகத் தங்கி, தவ வாழ்க்கை மேற்கொண்டு தம்மைப் பரிபூரணமாக ஸ்ரீ பகவானுக்கே அர்ப்பணித்துக் கொண்டார்.

ஸ்ரீ பகவானுக்கே பரிபூரணமாக அர்ப்பணிக்கப்பட்ட ஸ்ரீ சுவாமிகளின் அதியற்புத வாழ்க்கையின் சீர்மை 'ஸ்ரீ ரமண வருகை' யிலுள்ள பின்வரும் பாடல்கள் மூலம் அழகுற வெளிப்படுவதைக் காணலாம்:

"இட்டிடல் எடுத்தல் எழுவதோ டிருத்தல்
ஏகுதல் இதுசெயல் செயாமல்
விட்டிடல் அருந்தல் விரும்புதல் வெறுத்தல்
வேண்டிய கருமங்கள் இவைபோல்
தொட்டதற் கெல்லாம் நின்னொடு பேசித்
தொடர்புகொண் டணுத்துணை யேனும்
கட்டமில் வாழ்க்கை கண்டுநான் வாழக்
கருணையே ரமணனே வருக." (81)

"பண்ட மெல்லாம் பாரேன்தீப்
பசியு மறப்பேன் பலர்ஏசிக்
கொண்டு சொல்லல் குறியேன்என்
குருவே துயிலேன் உனைக்கண்ணால்
கண்டு கொண்டே னெனிலுலகக்
கனவை மறந்துன் கழிபித்தே
கொண்டு திரிவேன் என்னுசை
குறுக ரமணு வருவாயே." (156)

"உலகங் கருதேன் உடல்கருதேன்
உயிர்க்கக் கருதேன் உயிருடலை
விலகு மிருக்கும் விதங்கருதேன்
வீடும் பற்று மிரண்டற்றுள்
இலகும் பெருமா னுன்னோடே
இருக்கப் பெற்றே னெனிலின்றே
அலகில் லாத அருளுடையாய்
அப்பா ரமணு வருவாயே." (158)

"தன்னைப் பெற்ற தாய்தந்தை
சாமி குருவாம் சதுர்வடிவன்
உன்னைப் பற்றிக் கொண்டாற்பின்
உயிரைப் பற்றிக் கவலையிலை
என்னைப் பற்றி உலகத்தார்
எதுவோ கூறி யிகழட்டும்
இன்னே நீவந் திடஆசை
எழுந்தேன் ரமணு வருவாயே." (159)

"தேக மிருக்கும் வரைகண்முன்
ஜெகமு மிருக்கும் வரைநாவில்
தாக மிருக்கும் வரைஉதரத்
தணலு மிருக்கும் வரைபேசும்

மோக மிருக்கும் வரைநீஎன்
முன்னி லிருக்க வரவேண்டும்
ஏக மிருக்க வைத்தால்நான்
எங்கே? ரமணா வருவாயே." (163)

இவ்வாறு தம் ஐம்புலன்களையும் ஸ்ரீ ரமண பகவானே தம் கைக் கருவிகளாக்கி, தம் மனத்தையும் புத்தியையும் அவரே ஆட்கொண்டு, அவற்றை இயக்க வேண்டும் என்றும், 'நான் காணத்தக்கதே காண்பித்தும், கேட்கத்தக்கதே கேட்பித்தும், அறியத்தக்கதே அறிவித்தும், எண்ணத்தக்கதே எண்ணுவித்தும், செய்யத்தக்கதே செய்வித்தும் என்னை இயக்கியருள வேண்டும்' என்றும் பிரார்த்தித்தார்.

"கண்முன் னிருப்பாய் செய்தொழிலில்
கைமுன் னிருப்பாய் கனிவால்யான்
உண்முன் னிருப்பாய் அயர்ந்துதுயில்
உறுமுன் னிருப்பாய் உதித்தெண்ணம்
எண்முன் னிருப்பாய் எப்போதும்
என்முன் னிருப்பாய் எனவேங்கிப்
பண்முன் னழைத்தேன் பகவானே
பரிவின் ரமணா வருவாயே." (179)

"ஒன்றை எண்ண ஒருப்படுமுன்
உயிரே நீஎன் னுள்ளறிந்து
நன்றை நினைக்க நவைநீங்க
நடத்தித் தரவே வேண்டுமலால்
என்றைக் கப்பா யானியற்ற
வியலும் இயலா ததனால்நீ
இன்றைக் கணுகி எனைக்காக்க
இணங்கி ரமணா வருவாயே." (185)

"புரையைப் புரியப் புகுமுன்னே
புரையா? அலவா? எனப்புரியா
துரைஎண் செயல்செய் துறுவேனை
உறுமுன் னறிமா னுருவோடு
கரைநின் றுரைக்க வரவேண்டும்
கண்கா திவையாற் கண்டுன்னைத்
தரைமேற் புரையாத் தவமாரத்
தயைசெய் ரமணா வருவாயே." (186)

"இதுவோர் குற்றம்! அதுவொன்றும்!
இன்னொன் றுண்டிங் கினிமேலும்
புதுமா றன குறைசெய்தாற்
பொறுப்பே னல்லேன்!' என்றெல்லாம்
எதுவொன் றேனு மியலேன்பால்
இறைவா நீயு மிசைப்பாயோ?
அதுவோ சரி?யா னவைதீர
அருள்வாய் ரமணா வருவாயே" (187)

"எந்த கர்ம மென்று செய்தல் என்று நீக்க லிங்குநான்
எந்த போதி லென்ன பேச லெங்கு மௌன மேகொளல்
எந்த கால மெந்த தேசத் தெந்த வாறி ருத்தலென்
றிந்த பார மேவ கிக்க எந்தை ரமண வருகவே." (340)

இவ்வாறு ஸ்ரீ பகவானுக்கே பரிபூரணமாக சமர்ப்பண மாக்கப்பட்ட அவர்தம் உலக வாழ்க்கை இறுதியில் 1985ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17ஆம் தேதி நிறைவுறவே, ஸ்ரீ சுவாமிகள் விதேக கைவல்ய மெய்தி தமது சற்குருவின் இணை யடிகளில் இரண்டறக் கலந்தார்.

"காணுந் தனை விட்டுத் தான் கடவுளைக் காணல் காணு(ம்) மனோமயமாங் காட்சி" என்ற ஸ்ரீ பகவானின் அருள் வாக்கினை நன்கு உணர்ந்திருந்த ஸ்ரீ சுவாமிகள் ஏன் ஸ்ரீ பகவானின் சகுண நாமரூப தரிசனத்திற்காக இந் நூலின் பல பாடல்களின் மூலம் பிரார்த்திக்கின்றார்? இதன் காரணங்களை அவரே பின் வரும் பாடல்களில் கூறுகின்றார்:

"... கருணை
கூர்ந்தினிப் பிறவியை நாடி
கருவரா விடத்திற் கடத்தியென் றனையும்
கணிப்பையோ விதற்கொரு கரியுன்
உருவரா விடில்நான் உணர்வதெங் ஙனமென்
ஒருவனே ரமணனே வருக." (44)

"உயிர்களின் உறவாய் உலகினுக் கிறையாய்
ஒருபரம் பொருளுனை எ(ன்)னினும்
அயலெனக் கண்போ லைம்புலன் வழியே
அனுபவித் தன்பினு லணைந்து

செயலுமாம் பக்தி தெரித்தனை யெனக்குத்
தெரித்திலே அருவுரு திறத்தை
இயலிதா லுனைக்கண் ணினித்திடக் காண
இச்சைகாண் ரமணனே வருக" (57)

"உலகமும் உடலும் எனக்கொரு வுருவும்
உண்டெனக் கருதிடும் மடமை
விலகிலா தின்னும் விளங்கு மென்னறிவை
வித்தகா அறிந்துமே யதற்குள்
திலகமாம் பிரமத் திருநெறி பயிலச்
செய்கிறுய்! செய்க!யிங் கென்முன்
மலவுட லுலகம் மறைவரை யுருவில்
வருகஸ்ரீ ரமணனே வருக." (58)

"நிர்க்குண ப்ரம்ம நிட்டையில் முயன்று
நின்றிட வலிவிலேன் றனையுன்
சற்குணச் சகுண வடிவிலே யன்புத்
தளையளித் தாண்டனை யிதுநாள்
கற்கவே பிரமக் கல்வியை வலிமை
கைக்கொளும் வரையிலும் எனக்கோர்
நற்கதி வடிவும் நாமமும் காண்டல்
ரமணனே ரமணனே வருக." (60)

"பண்டுநின் றேங்கும் பரமனை நாடும்
பக்தர்கள் பவித்திர வடிவில்
கண்டதுண் டோவக் கடவுளை என்றே
கலியிலே மானிடர் கடாவ
'உண்டு;நான் காண்கின் றேனுரு வுடனே
உடையவன் வடிவினை' என நான்
திண்டிற லோடே செப்பிட வேண்டும்
தெய்வமே ரமணனேவருக." (67)

"காலமும் இடமும் கடந்தநின் பெருமைக்
களவிலை யாதலால் நீளக்
காலமும் இடமும் அடியர்தங் கண்ணுல்
காண்படு கடவுளே யலவோ?
காலமும் இடமும் காணிலா உண்மைக்
கதிஎனக் கருளுநா ளளவும்
கோலமும் குணமும் கொண்டருள் கூர்ந்து
குருபரா ரமணனே வருக." (69)

"'தந்தையோ டிணைந்த தனிச்சுகங் கொண்டேன்
சகத்தவர் தயவினி எனக்கேன்?
பந்தய முரைப்பேன்; பணத்தவர், கற்ற
பண்டிதர், சித்திகள் பலகை
வந்தவர் எவரும் அடைவரோ நான்என்
வள்ளலோ டடைசுக மதுபோல்!'
இந்தவா றுரைத்தென் இன்பமே உன்னோ
டிருந்திட ரமணனே வருக." (79)

"உருவைக் கண்டீ துண்மையென
உலகைக் கொள்ளும் உளம்மாறி
அருமைப் பொருளாம் ஆன்மாவே
அல்லால் ஒன்றும் அயலில்லாப்
பெருமை யுணரும் வரைஎன்முன்
பெருமான் உருவோ டெழுந்தருளுங்
குருவைக் கண்டிங் குடன்வாழக்
குறித்தேன் ரமணா வருவாயே." (177)

இங்ஙனம் 'ஸ்ரீ ரமண வருகை'யானது ஸ்ரீ பகவானின் சகுண தரிசனத்திற்காகப் பிரார்த்திக்கும் தலைசிறந்த பிரார்த்தனை நூலாக இருந்தாலும், மனோநாசஞ் செய்து அஞ்ஞான இருள் நீக்க வேண்டி ஸ்ரீ பகவானின் வருகையை விரும்பும் ஸ்ரீ சுவாமிகளது அதிதீவிர பேராவல் அதன் பல்வேறு பாடல்களில் வெளிப்படுவதைக் காணலாம். உதாரணமாக,

"புறமுக உலகே புரிகின்ற தல்லால்
புத்தியை யகமுகம் பொருத்தும்
திறமிலே னிதைநீ செய்திலை யென்றால்
சென்மம்நா னெடுத்தது வீணே
புறமுக வுலகின் போக்கினைக் கண்டு
பொள்ளென நடுங்குமென் புத்தி
திறமுற நினது திருவுருக் காணத்
தேடினேன் ரமணனே வருக." (84)

"... நாடோறும்
உண்ணேக் கில்லேன் உருக்கண்டால்
உள்ளம் பிறமேல் ஓடாமல்
விண்ணேக் குறுமே வேறென்ன
விழைவேன்? ரமணா வருவாயே." (155)

"...சொந்தமா யருள்நீர் தோய்த்தெனை மலர்த்திச்
சொரூபமாம் தூவெளி கரைக்கத்
தந்தையே நீயும் தயவுசெய் யென்றே
தவித்தனன் ரமணனே வருக." (99)

"தாயு மாயருட் டந்தையு மாயென்முன்
நீயு மேவர, நெஞ்சமுன் னுண்மையை
ஆய வே,யத னுலகங் காரமும்
மாய வேரம ணேச வருகவே." (225)

"சிறக்கு முன்றிருச் சேவடி கண்டிடில்
துறக்கல் மெய்யுறுந் தொல்வினை யாசையால்
பிறக்கும் நெஞ்சு பிழைப்பற வோயும்'நான்'
இறக்கு மேரம ணேச வருகவே." (287)

"...திமிரமே களைய வருகஎன் சிந்தை
செயித்திட ஞானவேல் பிடித்த
குமரனே வருக..." (36)

என்று ஸ்ரீ சுவாமிகள் பிரார்த்திக்கின்றார். மேலும் தம் வாழ்வின் குறிக்கோள் ஆன்ம நிஷ்டையே என்பதையும், அதற்காகவே ஸ்ரீ ரமண பிரானின் வருகையைத் தாம் வேண்டுவதாகவும் 100வது பாடலுக் கடுத்து இயற்றிய கீழ்க்கண்ட தனிப்பாடலின் மூலம் நன்கு தெளிவாக்குகிறார்:

"அல்லும் பகலும் விழித்திருக்கும்
ஆன்ம நிட்டை தாராயோ
அல்லும் பகலும் தூங்கியெழா
ஆன்ம நிட்டை தாராயோ
அல்லும் பகலும் அறியாத
ஆன்ம நிட்டை தாராயோ
அல்லும் பகலு மிதற்கேதான்
அழுவேன் ரமணா வாராயோ."

ஸ்ரீ சுவாமிகளின் பிரார்த்தனைக்கு இரங்கி யருளி தம் சகுண நாமரூப தரிசனத்தை 1955ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தந்தருளிய ஏறக்குறைய அதே காலத்தில் ஸ்ரீ பகவான் தம்முடைய நிர்க்குண ஆத்ம தரிசனத்தையும் மேற்கண்ட தனிப் பாடலில் பிரார்த்தித்தபடியே ஸ்ரீ சுவாமிகளுக்குத்

தந்தருளினர் என்பது இதன் பிறகு ஸ்ரீ சுவாமிகளிடம் நிலவிய பூரண சாந்தியையும் அமைதியையும் கண்ட அவரது நெருங்கிய அன்பர்களுக்குத் தோன்றியது. ஸ்ரீ சுவாமிகளின் அகமுகத்தில் மிளிர்ந்த பூரண திருப்தியையும், சாந்தியையும், தெளிவையும் கண்ட ஸ்ரீ நடனானந்த] சுவாமிகள் 1960ஆம் ஆண்டு அளவில் தாம் இயற்றிய 'நெஞ்சகக் கண்ணி' என்ற நூலில் உள்ள பாடல் ஒன்றில்,

> "போதமெனும் பெற்றிமையால் பூமாவில் சந்ததமுஞ்
> சாதுஓம் சித்தோப சாந்தியுற்றான் நெஞ்சகமே."

என்று பாடியுள்ளார்.

ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் 'பூமா' என்னும் பரமஞான நிலையை அடைந்ததைக் கூர்ந்த மதிகொண்ட அனைவரும் தெளிவாக அறிந்து கொண்டார்கள் எனினும், ஸ்ரீ சுவாமிகள் தாம் அந் நிலையை அடைந்தது எப்பொழுது என்பது குறித்து நேரடியாக ஒருபோதும் ஒன்றும் கூறவில்லை. அது மட்டுமன்றி, அவரை நன்கறிந்திருந்த அன்பர்கள் யாரும் அவர் அந் நிலையை அடைந்த காலத்தைக் குறித்து ஸ்ரீ சுவாமிகளிடம் கேட்கவு மில்லை. ஏனெனில், "என்னை அறியேன் நான், என்னை அறிந் தேன் நான் என்னல் நகைப்புக்கு இடன் ஆகும்" என்னும் 'உள்ளது நாற்பது' 33வது பாடலில் உள்ள ஸ்ரீ பகவானது அருளுபதேசத்திற் கிணங்க, ஸ்ரீ சுவாமிகளும் தாம் ஆன்ம ஞானத்தை அடைந்ததாக ஒரு போதும் கூறிக்கொள்ள வில்லை யாதலால், எப்போது, எப்படி அடையப்பட்டது போன்ற பேச்சுக்கு அவர் இடங் கொடுக்கவே யில்லை. ஆயினும் ஒரு முறை தம் அன்பர்களுடன் பொதுவாகப் பேசிக்கொண் டிருக்கும்போது, ஸ்ரீ சுவாமிகள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்: "தம்முடைய பக்தர்கள் சிலரது புறமுக வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஸ்ரீ பகவான் ஒருசில சூழ்நிலைகளை உண்டாக்க, அதன் பயனாய்த் தங்களுக்கு மிகவும் நம்பிக்கைக் குரியவர்களாகவும் நெருங்கியவர்களாகவும் இருந்த மக்க ளெல்லாம் தங்களைக் கைவிட்டு விட்டதாகவும், முன்பு தங்களால் மிகவும் நேசித்து மதிக்கப்பட்ட நண்பர்கள் எல்லாரும் தங்களுக் கெதிராகத் தாங்கள் செய்யாத குற்றங்களை யெல்லாம் செய்ததாகக் கூறித் தூற்றுவதாகவும், தங்களை முழுமையாகப் புரிந்துகொண்டு தங்கள்மேல் உண்மையான அன்பு செலுத்து

பவர்கள் இந்த வுலகத்தில் ஒருவருமே யில்லை யென்றும் உணருகின்றனர். இந்த வுலகத்தில் தாங்கள் மிகவும் நேசித்து வந்தவை அனைத்தையும் இழந்துவிட்டது போன்ற தவிப்பு அந்த பக்தர்களுக்கு இவ்வாறு ஏற்பட, அவர்களது மனத்திற்கு அன்புசொரூபமான ஸ்ரீ பகவானை நோக்கிப் பிரார்த்திப்பதையும், அழுவதையும், தம்மை யண்டி வந்தோரை ஏமாற்றுததும் கைவிடாததுமான அந்த எல்லையற்ற அன்பிலேயே நெக்குருகி நிற்பதையும் தவிர வேறு கதியே யில்லை என்றாகிவிடுகிறது. அப்போது தான் அந்த பக்தர்களுடைய அதிதீவிர ஏக்க நிலை யில் ஸ்ரீ பகவான் உள்ளிருந்து வெளிப்பட்டு ஆன்மஞானப் பேரொளியாகப் பிரகாசிக்கின்றார். இப்படிப்பட்ட சகிக்க முடியாத பெரு நஷ்டத்திற்கு ஆளானது போன்ற மனத் தவிப்பு தான் 'கொஞ்சம் பொறு'* என்ற பாடலில் சித்தரிக்கப் பட்டுள்ளது". இவ்வாறு ஸ்ரீ சுவாமிகள் தம் சொந்த அனுபவம் எதையும் குறிப்பிடாது பொதுவாகப் பேசினாலும், 'ஸ்ரீ ரமண வருகை' எழுதப்பட்ட அந்தக் காலத்திலிருந்த தம் மன நிலையைத் தான் குறிப்பிடுகிறார் என்பதை அவருடைய அன்பர்கள் உணர்ந்துகொண்டனர்.

ஸ்ரீ சுவாமிகள் ஆரம்ப காலங்களில் எழுதிய பல பாடல்கள் நமக்குக் கிடைக்க வில்லை யெனினும், ஸ்ரீ பகவானருளால் 'ஸ்ரீ ரமண வருகை' எழுதப்பட்ட நோட்டுப் புத்தகம் பாது காத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டு மன்றி, பல அன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க 1970ஆம் ஆண்டு வாக்கில் 'ஸ்ரீ ரமண வருகை' முழுவதும் ஸ்ரீ சுவாமிகளாலேயே பாடப்பட்டு 90 நிமிட ஒலிநாடாப் பெட்டி (cassette) யில் ஒலிப்பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது. 'ஸ்ரீ ரமண வருகை' யின் மூலக் கையெழுத்துப் பிரதியில் 361 பாடல்களுடன் ஒவ்வொரு பாவினம் மாறும் போதும் இடையில் ஒவ்வொன்று வீதம் மூன்று தனிப்பாடல்களையும் ஸ்ரீ சுவாமிகள் எழுதி யுள்ளார். 100வது பாடலுக்கு அடுத்து 'அல்லும் பகலும்...' என்று தொடங்கும் பாடலையும், 201வது பாடலுக்குப் பின்

---

*இப் பாடலை 'ஸ்ரீ ரமண கீதம்' என்ற நூலில் 54வது பக்கத் திலும், 'சாதனை சாரம்' என்ற நூலில் 128வது பக்கத்திலும் காணலாம்.

'நெஞ்சை நூலாக்கி...' என்ற வெண்பாவையும்* இயற்றி யுள்ளார். இவ் விரு பாடல்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. 306வது பாடலுக்குப் பின்,

"விண்ணுக் கிடவிவ் வியன்மா வுலகை
மண்ணுக் கிடநின் மலர்சே வடியை
உண்ணுக் குடையா ருளமே வியசீ
ரண்ணு மலைவாழ் ரமணு சரணம்."

என்ற பாடலையும் எழுதியுள்ளார்.

உள்ளத்தை உருக்கும் பாடல்களைக் கொண்ட 'ஸ்ரீ ரமண வருகை' என்னும் இந் நூலானது ஸ்ரீ சுவாமிகளின் அதி யுயர்ந்த ரமண பக்திக்குத் தலைசிறந்த பிரமாணமாக விளங்கு வதால், திருவருணை ஸ்ரீ அருணாசலரமண நிலையத்திலமைந் துள்ள ஸ்ரீ சாது ஓம் சுவாமிகளின் சமாதி மேல் ஸ்ரீ பகவா னருளால் எழுப்பப்பட்டுள்ள 'ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் ஞானாலயம்' என்னும் எளிய சிறிய திருக்கோவில் கும்பாபிஷேக நினைவாக 7-12-1987 அன்று இந் நூல் முதன்முறையாக வெளியிடப்பட்டது.

இப் பாடல்கள் யாவும் பொருள் விளங்கிக் கொள்ளத்தக்க விதத்தில் மிகவும் எளிமையாக அமைந்திருந்தாலும், அன்பர்

---

*இந்த நோட்டுப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒரே தேதி 'நெஞ்சை நூலாக்கி' என வரும் தனி வெண்பாவின் கீழ் குறிக்கப்பட்டுள்ள 20-7-55 என்ற தேதி யாகும். இந் நூலின் 361 பாடல்களை எவ்வளவு காலத்திற்கு எழுதி வந்தார் என்பது இப்பொழுது தெரியவில்லை யாயினும், பிற்காலத்தில் ஸ்ரீ சுவாமிகள் ஒருமுறை இது பற்றிக் குறிப்பிடும் போது, தம் கை எழுதக் கூடிய அதே வேகத்தில் தம் உள்ளத்தில் இப் பாக்கள் பொங்கி எழுந்தன என்று சொன்னார். இதிலிருந்தும், இன்னும் இது போன்று அவர் தெரிவித்த சில குறிப்புகளிலிருந்தும் ஸ்ரீ சுவாமிகள் இப் பாடல்க ளனைத்தையும் ஓரிரு நாட்களுக்குள்ளேயே எழுதி முடித்திருக்கலாம் என்பது தெரிய வருகிறது. மேலும், 18-7-1955 அன்று எழுதப்பட்ட 'மனமே இரங்கி வருவாய் ரமணேச னென் கண் மணியே' என்ற பாடலுக்குப் பிறகே ஸ்ரீ சுவாமிகள் 'ஸ்ரீ ரமண வருகை'யை எழுத ஆரம்பித்தார் என்பது தெரிய வருவதால், இப் பாடல்கள் அனைத்தையும் ஜுலை மாதம் 19, 20 ஆகிய இரு நாட்களிலேயே எழுதி முடித்திருக்கிறார் என்பது தெளிவாகிறது.

ஒருவரின் வேண்டுகோளுக் கிணங்க ஸ்ரீசுவாமிகள் இந் நூலின் பாடல்களுக்கு 1984ஆம் ஆண்டு உரை எழுத ஆரம்பித்து, முதல் 227 பாடல்களுக்கு உரை யெழுதினர்; பின்னர் அது முற்றுப் பெறுமலேயே நின்றுவிட்டது. ஸ்ரீ சுவாமிகள் உரை யெழுதும் பொழுது பாடல்களில் அடங்கியுள்ள பலகருத்துக்களை விரிவுபடுத்தி உரை யெழுதியுள்ளதால், பாடல்களி லடங்கி யுள்ள உட்கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள அது பயனுள்ளதா யமைந்திருப்பதைக் கண்டோம். ஆயினும் ஸ்ரீ சுவாமிகளின் ஞானாலயக் கும்பாபிஷேக நினைவாக இந் நூலின் முதற் பதிப்பை வெளியிடும் போது போதிய அவகாச மின்மையால், உரையையும் சேர்த்து வெளியிட இயல வில்லை. ஆகவே, இப்போது மூலத்துடன் உரையையும் சேர்த்து இரண்டாம் பதிப்பாக வெளியிடுகின்றோம்.

ஸ்ரீ சுவாமிகள் நெக்கு நெக்குருகிப் பாடிய இப் பாடல்களைச் சிரத்தையுடன் நாளும் ஓதி சற்குரு ஸ்ரீ ரமண பிரானுடன் சத்திணக்கம் கொண்டு,

"வடிவும் பெயரும் மனமுணர் கின்ற வரையிறை நீ
வடிவும் பெயரும் வனைந்து ரமண மகாகுருவாய்
நொடியும் பிரியா துதவி யிதய(ம்) நுகர வைத்தே
அடியேற் கபய மளித்திட வேண்டு] மறிவுருவே."

"அருளே வலிவலால் ஆழ்ந்தித யத்தில் அமைதியுறற்
கொருபோ திலுமிய லாதெனல் ஈதென் உபாதியியல்பு
உருபே ருடனுனை யுன்னி யொருமை யுறவிழைந்தே
உருகா தெவனரு ளுண்ணுவ னேவுளத் தோய்வதற்கே."*

என இறைஞ்சி யேத்தி அவரருள் பெற்றுய்வோமாக.

ஸ்ரீ அருணாசலரமண நிலையம்,
திருவண்ணாமலை.
16-2-1988
மகாசிவராத்திரி நன்னாள்.

மா. கோவிந்தராஜன்

---

* 'ஸ்ரீ ரமண குருவருளந்தாதி' பாடல்கள் 6, 8.

இந் நூலாசிரிய ரியற்றிய இதர நூல்கள்:

ஸ்ரீ ரமண வழி (முதல்-இரண்டாம் பாகங்கள்)
சாதனை சாரம் (ஸ்ரீ ரமண வழி - மூன்றும் பாகம்)
ஸ்ரீ ரமணோபதேச நூன்மாலை - விளக்கவுரை
உபதேச வுந்தியார் - விளக்கவுரை
குருவாசகக் கோவை - உரை
ஸ்ரீ ரமண கீதம்
ஸ்ரீ ரமண வர்ணங்கள்
ஸ்ரீ அருணாசல வெண்பா
ஸ்ரீ ரமண குருவரு ளந்தாதி
ஸ்ரீ ரமணாக்ஷர மலர் மாலை
ஸ்ரீ ரமண சரிதக் கிளிக் கண்ணி
ஸ்ரீ ரமண சரிதச் சுருக்கம்
பகவத் கீதா சாரம் - உரை

இந் நூல்கள் கிடைக்குமிடம்:

ஸ்ரீ அருணாசலரமண நிலையம்,
11-B, மணக்குள விநாயகர் தெரு,
ஸ்ரீ ரமண நகர்,
திருவண்ணாமலை,
தமிழ்நாடு - 606 603.



ஸ்ரீ ரமண பகவான்

எல்லை யிலாதபே ரின்ப வெழில்வடிவு,
தொல்லமரர் காணாத் துரியச் சுடர்வடிவு,
நல்ல சிவமா நடந்த குருவடிவு,
சொல்ல வொணாத சொரூபமாத் தொக்கதே.

— ஸ்ரீ முருகனார்

ஓம்
நமோ பகவதே ஸ்ரீ அருணாசலரமணாய

ஸ்ரீ ரமண வருகை

(எழுசீர் விருத்தம்)

1. ஓம்நமோ பகவான் ஸ்ரீரம ணாய
உலகமா குருபரா வருக
தானமே யருணா சலனகங் கொண்ட
சற்குரு மூர்த்தியே வருக
ஞானமோ ருருவாய் உடல்கொடு போந்திந்
நானில முற்றவா வருக
மோனவா னரசே வருகஎங் கண்முன்
முதல்வனே ரமணனே வருக.

2. அப்பனே வருக அருளினால் உலக
மடைந்தபே ரமுதமே வருக
செப்பருந் திறலார் தெய்வமே வருக
சிவபிரா னுருவமே வருக
எப்பொழு தடியேன் ஏங்கிநீ வாவென்
றேத்துவே னப்பொழு தெல்லாம்
ஒப்பிநின் னுருவோ டென்னிரு கண்முன்
உத்தமா ரமணனே வருக.

3. தொழுதனன் வருக துயரிலா ஞானச்
சுகமயா வருகநீ வாவென்
றழுதனன் வருக அருணமா மலைவாழ்
வானசஞ் சீவியே வருக
பழுதிலா ருள்ளம் பற்றுமுன் வடிவம்
பார்த்திடக் குழைந்தனன் வருக
முழுதுமாம் பொருளே மோனமே எங்கண்
முன்னிலே ரமணனே வருக.

4. பரமனே வருக பகலிர வற்ற
பகவனே வருகபூ படைக்கும்
பிரமனே மாலே பிடித்தறி யாத
பெருமனைப் பிடித்தவா வருக
உரமுளங் கொளநின் னுடனள வளாவு
மொன்றுதான் வழியதா லென்முன்
வரமனங் கொண்டே வருகநீ யுருவில்
வருகஸ்ரீ ரமணனே வருக.

5. ஐயனே வருக அருணையா னைச
யகத்தனே வருகமெய் யபயக்
கையனே வருக கண்ணினுன் கண்ட
கடவுளே வருக பாழுலக
மையலே யழிக்கு மறிவெனும் விளக்கே
வருகநின் வருகையா லேழைப்
பொய்யனே னகமும் பூரண ஞானம்
பொருந்தவே ரமணனே வருக.

6. சாமிநீ வருக தயாநிதி யாயென்
றன்னையுந் தாங்குவோய் வருக
பூமிமே லென்கண் பொருந்திடக் கண்ட
பூரணத் தெய்வமே வருக
தாமிலா தொன்றுந் தனியிலே எனுமெய்த்
தாணுவே வருகநின் றனக்கே
காமியா யாவுங் களைந்துனே டிருக்கக்
கருணைசெய் ரமணனே வருக.

7. புண்ணியா வருக புதல்வனு யருணைப்
பொருப்பினுட் புகுந்தவா வருக
திண்ணியா வருக சந்நிதித் திறத்தாற்
சிவமயஞ் சேர்ப்பவா வருக
கண்ணினு லுன்னைக் காணவே யென்றுங்
கரவிலா வுருவுடன் வருக
அண்ணலே வருக வகங்குடி கொண்ட
வமலனே ரமணனே வருக.

8. தேவனே வருக திருக்கரங் களையென்
சென்னிமேல் வைத்திட வருக
பாவனு வருக பிறந்ததன் பயனே
பலித்திட வருகபா வலர்கள்
கூவின பாதக் குருபரா வருக
குழந்தையா யெனைக்குடி கொண்டென்
ஜீவனே பிழைக்கத் திருவுளங் கொண்ட
தெய்வமே ரமணனே வருக.

9. அற்புதா வருக வரஹர வண்ணு
மலையனே வருகசெங் கமலப்
பொற்பதா வருக புவியெலாம் போற்றும்
புகழனே வருகமெய் யன்பாங்
கற்பினு ரணையுங் கணவனே வருக
கடையெனைக் கைகொடுத் துய்க்கு
நற்பிதா வருக நயனமே காண
நாதனே ரமணனே வருக.

10. இமையமே லிருக்கை யிழிந்தடி யார்க்கா
விரங்கியே வந்தவா வருக
சமயமே தழையத் தவமெலாம் பெருகத்
தரணிவந் துற்றவா வருக
இமையுமே பிரியா விரக்கமோ டடியா
ரிதயமே லிருப்பவா வருக
ரமணசீர் நாம நாதனே வருக
ரமணனே ரமணனே வருக.

11. கலையெலாங் கனிந்த கண்ணனே வருக
கலைதொடாக் கடவுளே வருக
மலைவிலா ஞான மலையனே வருக
வந்துனை வணங்குவோ ருள்ளப்
புலையெலாம் போக்கும் புனிதனே வருக
புலையனே னகத்திலும் புகுந்த
நிலையனே வருக நின்மலா வருக
நேயனே ரமணனே வருக.

12. அசலனே வருக வமரர்யா ரேனு
மறிந்திடா வகத்தனே வருக
தசமனே வருக தரணிமெய் யென்றே
தயங்கிடு மதிமயக் கான
நசையறு மாறிந் நனவிலே என்முன்
னடந்துநீ வருவதை மகிழ்வால்
விசனமே நீங்கி யிருகணுற் காண
வேண்டினேன் ரமணனே வருக.

13. தெய்வமே வருக திருமகள் வாணி
தேவியா மொருவனே வருக
ஐவகைத் தொழில்செய் யன்னையே வருக
வடியனே னகத்தினு ளணுவும்
பொய்வரா மாறென் புத்தியே தெளியப்
பூரண ஜோதியா முருவிற்
கையகக் கனியாக் கண்ணினுற் காணக்
கடவுளே ரமணனே வருக.

14. தூயனே வருக துப்பறி வுணர்ந்த
துறவியர்க் கரசனே வருக
மாயனே வயனே மயங்கிட நின்றுன்
மதலையே வருகமெய் யகத்துட்
டோயநேர் நின்றுர் சுகத்தனே வருக
தொழுதுனை யண்டியே துதிக்குஞ்
சேயனே னுசை தீரவே கண்முன்
தெய்வமே ரமணனே வருக.

15. அத்தனே வருக வருணமா வசல
வகத்தனே வருகவென் றென்றும்
முத்தனே வருக முருகனே வருக
முழுதுமென் னகத்தினை யழிக்குஞ்
சித்தனே வருக ஜெகத்குரு நாத
தேவனே வருகவென் னுசைப்
பித்தனே வருக விருகணுற் காணும்
பேறருள் ரமணனே வருக.

16. தந்தையே வருக தகவிலாப் போதுந்
தமியனேக் கொண்டவா வருக
வெந்தையே யாயே யென்பவ ரகத்தே
யினித்தபே ரியல்பனே வருக
விந்தையாய்ப் பதினு ருண்டிலே பிரம
வித்தையிற் றேரினேய் வருக
சிந்தையே மகிழக் கண்ணினுற் காணத்
தேடினேன் ரமணனே வருக.

17. கோதிலாய் வருக குருவுருத் தாங்கிக்
கொண்டெனேக் கொண்டவா வருக
வாதிலா தடியார் மனத்தகங் கொள்ளும்
வாழ்க்கையே வருகபே ரின்பச்
சோதியா ருருவிற் றேன்றிநின் பிள்ளை
தொட்டுனே வணங்கிடு மாறிப்
போதிலே கண்ணிற் புலப்பட வருக
பூரணு ரமணனே வருக.

18. சத்தியா வருக சதுர்முகன் மாலுந்
தாவிய நெடுவுருத் தணைலப்
பத்தியா லணைந்த பாவையே வருக
பாடுவா ரின்பமே வருக
புத்தியா லறியப் படாதவா வருக
புகலடிப் பூக்களைக் கண்ணி
லொத்தியே மகிழ வருகநீ யென்முன்
னுருவுடன் ரமணனே வருக.

19 பூரணு வருக புகுந்துனேத் தஞ்சம்
பொருந்துவர் போதமே வருக
நாரணு வருக நரவுடல் தாங்கி
நடந்தவா வருகவென் னுதி
காரணு வருக கருணையாற் பாவங்
கழுவிடுங் கங்கையே வருக
ஆரணு வருக வடியனேன் கண்முன்
னுனந்த ரமணனே வருக.

20. போதனே வருக புராதனு வருக
போக்கிலாய் வரவிலாய் வருக
வேதனே வருக விமலனே வருக
வித்தகா வருகவென் சிரமேற்
பாதனே வருக படிற்றனே னெஞ்சப்
பாவமு மகற்றியங் கமரு
நாதனே வருக நமனறி யாத
ரமணனே ரமணனே வருக.

21. ஆண்டவா வருக அருளினு லடிமை
யாக்குவாய் வருகமெஞ் ஞானத்
தாண்டவா வருக தண்ணருட் கரத்தால்
சத்திய ஞானமென் னுள்ளே
தூண்டவா வென்றே துதிசெயு மேழைத்
துயரற நின்பதம் சிரமேற்
பூண்டவா தீரப் புல்லிடக் கண்முன்
புண்ணியா ரமணனே வருக.

22. அன்பனே வருக அருணனு யகப்பூ
அலர்த்துவோய் வருகஎன் னுசை
இன்பனே வருக இதயனே வருக
இருளறு மிரவியே வருக
'முன்புனே யாசை முடிந்திடக் காண
முடிகிலேன் ஏங்கியே மாந்தேன்'
என்பனே யதனுல் என்னிரு கண்முன்
இரங்கியே ரமணனே வருக.

23. இறைவனே வருக இறையுனே யன்றி
ஏதுமி லாதவா வருக
மறைவளம் பாடும் பாதனே வருக
மாசிலா அடியவ ருளத்தே
உறைவனே வருக உலப்பிலா வின்ப
ஊற்றினுல் உள்ளமும் உயிரும்
நிறைவுற என்கண் ணெதிரிலே தோன்றி
நின்றருள் ரமணனே வருக.

24. உன்னதா வருக உயிர்க்குயி ராம்உள்
ஒளியனே வருகஎன் னூட்டும்
அன்னதா தாவே வருகஎன் வாழ்வின்
ஆசையே வருகஇன் றே‘நான்
என்ன’தா மிரண்டும் அழிப்பவா வருக
எந்தையே வருகநீ யேஎன்
முன்னதா யிருகண் முகந்துனே மாந்த
முருகவிழ் ரமணனே வருக.

25. கருணையே வருக கடவுளர் யார்க்கும்
காதலா வருகஎன் னுளத்துள்
அருணையே வருக அழிவிலா ஞான
வமுதமே வருகநா னென்னும்
இருணையு மறிவா மிரவியே வருக
இலையென்ற வள்ளலே வருக
தருணமே என்கண் தடையறக் காணத்
தந்தையே ரமணனே வருக.

26. அமுதனே வருக அறிவிலா ரிடத்தும்
அருளனே வருகஎன் னெஞ்சக்
குமுதமே மலருங் கோமதி வருக
குமணனே வருகநூற் கூறும்
சமதமா தியெலாஞ் சார்ந்திடா வெனக்கும்
தரிசன மளித்திட வருக
தமதிய லருளால் வருகஎன் கண்முன்
தயவுளாய் ரமணனே வருக.

27. ஆசையே வருக அறிவுளே விளங்கும்
ஆதர வாளனே வருக
காசையே யறியாக் கருத்தனே வருக
கண்ணுளாய் வருகஓங் கார
ஓசையே வருக உனக்கெனை யடிமை
உடையவா வருகஉள் ளோங்கும்
தேசையே யறியாச் சிறியனும் காணத்
தேசுறு ரமணனே வருக.

28. இட்டமே வருக எவரெவ ரெவ்வா
றேங்குவா ரடையவவ் விதமே
திட்டமாய்த் தோன்றும் திருவுளாய் வருக
சின்மயா னந்தமே வருக
அ:ட்டமா முகத்தான் அரும்பெறல் மகவாம்
அன்பனே வருகஎன் கரத்தால்
தொட்டுநான் வணங்கும் தூவுரு வுடனே
துணைவனே ரமணனே வருக.

29. அம்மையே வருக அருளுருக் கொண்ட
அப்பனே வருகதோல் போர்த்த
இம்மையான் கண்ட இறைவனே வருக
என்றும்உன் கையினில் எனையே
பொம்மையாக் கொண்ட புனிதனே வருக
புகல்தரும் பொற்றுமையாய் வருக
செம்மையா யிருகண் தெரிந்திட என்முன்
திருவுரு ரமணனே வருக.

30. ஈசனே வருக இசையினுற் றெழுவார்
இன்பமே வருகஆ ருயிர்க்கோர்
நேசனே வருக நெடிதெழு மசல
நெருப்பனே வருகவா ணிறைந்த
தேசனே வருக சிவசுதா வருக
தேவனே வருகஎன் பாப
நாசனே வருக நயனமே காண
ரமணனே ரமணனே வருக.

31. கண்ணனே வருக கற்றவ ரறியாக்
கல்வியே வருகமெஞ் ஞானத்
திண்ணனே வருக தெய்வமே வருக
சிவசிவா வருகசீ ரோங்கும்
பண்ணனே வருக இருகணுற் காணும்
பரிதியாப் பாவியேன் கண்முன்
அண்ணனே வருக அருளுரு வுடனே
அமரனே ரமணனே வருக.

32. தோன்றலே வருக துணையென நிற்கும்
சோதியே வருகஎன் றென்றும்
பூன்றமே வருக பொய்யிலா நிலையாப்
பொருந்துவோய் வருககர்த் தபத்தைப்
போன்றவ னெனக்கும் புகலளித் தாண்ட
புகழினய் வருகயா னுனையே
ஊன்றியே கண்கள் உவப்புறக் காண
ஒருவனே ரமணனே வருக.

33. தீரனே வருக தெரிந்தவ ருரையாச்
சிவோஹமே வருகபே ரான்ம
வீரனே வருக ஏழையேன் வேண்ட
வினைப்புல னைந்தையும் வெல்லும்
சூரனே வருக சொற்றமிழ்ப் பூவால்
தொடுத்துனக் கடியவர் சாத்தும்
ஆரனே வருக அடியனேன் கண்முன்
அன்பினல் ரமணனே வருக.

34. ஆரியா வருக அடங்கிலா வகத்தை
அடக்குவோய் வருகமெஞ் ஞானச்
சூரியா வருக தொண்டர்கள் உளத்தே
தொடர்ந்தமுன் வாசனை தொடுத்த
போரிலே புகுந்து வெற்றியால் வாகை
புனைபவா வருகநின் னடியேன்
நேரிலே வருக இருகணும் களிக்க
நேயமே ரமணனே வருக.

35. அருளனே வருக அவங்கெட ஞான
வருட்கொடை யருளுவோய் வருக
பொருளெனப் படும்உட் போதமே வருக
புலன்களே அறிவெனப் புகட்டும்
இருளகன் றவர்தம் இதயமே வருக
எம்பெருந் தலைவனே வருக
மருளனே னகமும் மலர்என் கண்முன்
வருகஸ்ரீ ரமணனே வருக.

36. அமரனே வருக அமரர்கள் பணியும்
அடிமல ரிணையனே வருக
திமிரமே களைய வருகஎன் சிந்தை
செயித்திட ஞானவேல் பிடித்த
குமரனே வருக குறித்துனை நினைப்போர்
குறையறக் குறிப்பனே வருக
சமரகன் றுள்ளம் சமம்பெற என்முன்
சாமியே ரமணனே வருக

37. சுந்தரா வருக சுந்தர தனய
தூயனே வருகஎன் மனத்தைத்
தந்திர மாகப் பிடித்தருள் தருமென்
சாகஸத் தலைவனே வருக
மந்திர நாம ரமணவா சகமாம்
மருந்தெனக் களித்தவா வருக
இந்தஎன் கண்கள் இரண்டுமே காண
இன்றிவண் ரமணனே வருக.

38. சோதியே வருக சொரூபமே நிலையாய்
சுகிப்பவா வருகஎன் னகத்தின்
ஆதியே வருக அம்மையு மெனக்கே
அப்பனு மானவா வருக
நீதியே வருக நெறிவிடா தெனையும்
நிறுத்துவோய் வருகஎன் னுளத்தின்
பீதியேயகல இருகணும் பிழைக்கப்
பெருமனே ரமனே வருக.

39. அச்சுதா வருக அருணையில் வலைவை
தடியனைப் பிடித்தவா வருக
சச்சிதா னந்த சகஜமே வருக
தனையறிந் திருப்பவ ருளத்தின்
இச்சையே வருக இருகணுற் கண்டுன்
இணையடி மலர்களை எடுத்தென்
உச்சிமேற் றுங்கி உளத்துட னணைக்க
ஒப்பியே ரமணனே வருக.

40. நின்மலா வருக நித்தியப் பொருளாய்
நிலைத்தவா வருகநா யேனின்
சென்மமே யொழிக்குந் தெய்வமே வருக
திகம்பரா வருகநின் புகழார்
சொன்மலர் தொடுப்போர் சொந்தமே வருக
துதிப்பவர் துணைவனே வருக
நன்மைசேர் ரமண நாமமே வருக
ரமணனே ரமணனே வருக.

41 ஞானமே வருக நாவினுற் சுவைக்கும்
ரஸமெனும் ரமணசீர் நாமப்
பானமே வருக பரம்பொருள் வருக
பக்குவ மெனக்குறப் பலமா (ம்)
மோனமே புகட்டும் மூர்த்தியே வருக
மோக்ஷமே வருகபே ரின்ப
வானமே உனையான் வடிவுடன் காண
வாடினேன் ரமணனே வருக.

42. வள்ளலே வருக மாரிபொய்த் தாலும்
மாறிடா தளிப்பவா வருக
உள்ளமே இடமா யொளித்திருந் தெனையும்
ஓடிடா வாறுடன் கவருங்
கள்ளனே வருக கவிழ்த்தெனை யுருட்டிக்
கடுவிசைக் கிழுத்திடுங் கருணை
வெள்ளமே பெருகி வருகஎன் கண்ணின்
வேட்கையே ரமணனே வருக.

43. மேலவா வருக விடிந்தகம் விளக்கும்
விண்மணி வருகநீ வருக
ஆலவா யெழுந்தண் ணுமலை யடைந்த
அமுதமே வருகபூ மியிலென்
போலவா ஒருவன் புழுங்கிட நீயும்
பொறுப்பது? வருகஅப் போதுன்
பாலவா பெருகப் பார்த்திரு கண்ணும்
பருகிட ரமணனே வருக

44. குருபரா வருக குழந்தையாய் எனைக்கை
கூட்டியே சென்றிட வருக
குருபரா முகமா யிருப்பையோ கருணை
கூர்ந்தினிப் பிறவியை நாடி
கருவரா விடத்திற் கடத்தியென் றனையுங்
கணிப்பையோ விதற்கொரு கரியுன்
உருவரா விடில்நான் உணர்வதெங் ஙனமென்
ஒருவனே ரமணனே வருக.

45. அரசனே வருக அரசர்கட் கரசும்
அடிதொழும் அதிபனே வருக
சிரசனே வருக சிறிதுமே யகந்தைத்
தினவிலா ரகத்திலே விலகாச்
சரசனே வருக தந்தைதாய் வருக
சகமெலாம் பரவிடும் மோன
முரசனே வருக ஏழையேன் கண்கள்
முன்னிலே ரமணனே வருக

46. முழுமையே வருக முதன்முத லெனக்குள்
முளைத்தமெய்க் கடவுளே வருக
செழுமையே வருக தெய்வசம் பத்தோர்
சிறிதெனும் பெறுதவென் ஜென்மப்
புழுமையே நினைந்து புலம்பிநின் றேன்கண்
புலப்பட வந்துநீ நின்றே
'அழுகையேன்? அழாதே!' எனச்சொலி என்முன்
அப்பனே ரமணனே வருக.

47. விளக்கமே வருக வேண்டுமா றெல்லாம்
வியனுரு வெடுப்பவா வருக
அளக்கரி யாத அகண்டமே வருக
அணுவினுள் ளணுவனே வருக
கொளக்குறை யாத அருட்பெருங் குன்றே
வருகஎன் குலதெய்வ மணியே
உளக்கவ லொழிக்க உயர்பரஞ் சோதி
உருவுடன் ரமணனே வருக.

48. அரியனே வருக அக்ஷர மணமார்
ஆரமே வருகமே லெவர்க்கும்
பெரியனே வருக ரமணமெய்ப் பெயரால்
பிழைப்பவர் பெருமையே வருக
கரியமா லயனுங் களைத்திடக் களையாக்
கடுவிசை யாளனே வருக
தெரியவென் கண்முன் திருவுருத் தாங்கி
தேவமா ரமணனே வருக.

49. தோழனே வருக தொலைவிலாய் வருக
தொடக்கமோ டிறிலா ஞான
வேழமே வருக விளங்கனி எனையூண்
விருப்பொடு விழுங்கநீ வருக
ஆழமே யறியா வருட்கட லமுதே
வருக நின் னடியனை யருளால்
வாழவே வைப்போய் வருகஎன் கண்முன்
வடிவுடன் ரமணனே வருக.

50. பண்பனே வருக பலவிதந் திரியாப்
பக்குவ மளிப்பவா வருக
உண்பனென் றணுகி உனக்குநா னுணுய்
ஒழிப்பவா வருகநீ வந்தென்
கண்பனிக் குமிழுன் காலடி யுடைக்கக்
கடவுளே வருகஎன் னுயிராம்
நண்பனே வருக ரமித்தெனை மயக்கும்
ரமணனே ரமணனே வருக.

51. உலகின ரகன்றுர் உண்மையன் பினரென்
றுறுதியா யானுநம் பினபேர்
விலகின ரென்னை வெறுத்தனர் விடுத்தார்
வெம்பினேன் துணையிலா தினியுன்
அலகிலா அன்பும் அருட்குரு வுருவும்
அன்றியோ ராறுத லறியேன்
நிலமிசை என்கண் நிலைபெறக் காண
நேயனே ரமணனே வருக.

52. முன்பிருந் தேவல் முயன்றிடிற் பெரியோர்
மூடமாம் மதியினுற் பிழைகள்
துன்பெழுந் தாலும் அன்பினுற் பொறுப்பர்
துறந்திடா ரெனையெனத் துணிந்தேன்
என்பிழை பொறுக்கும் இயல்பிலா ரெவரும்;
எவ்விட மன்பினைக் காண்பேன்?
அன்பினைச் சுவைப்ப தாரிட மென்றே
அஞ்சினேன் ரமணனே வருக.

53. மழையிலாப் பயிர்போல் வாடிஎன் னுளத்தில்
வலிவிலாப் போதுநான் செய்யும்
பிழையெலாம் பொறுப்பர் பின்பொரு நாளும்
பிழைசெயா வன்மையும் பெய்து
தழையவே செய்வ ரெனச்சர ணடைந்தால்
தள்ளினர் சகத்துள பெரியோர்
அழஅழ நான்வந் தண்டினேன் அபயம்
அளித்திட ரமணனே வருக.

54. கொடுப்பதாக் கூறி பசித்தவன் றனையுட்
கொண்டுபோய் பசியினுற் குலைகள்
நடுக்குறு நாழி காத்திட வைப்பார்
நாவெடுத் தொருகுரல் கேட்டால்
அடிப்பதாச் சீறி யகற்றுவார் வெளியில்
அற்புதம் மனிதரி னழகே
அடுப்பனே இவரை யஞ்சினேன் காண
அருட்குரு ரமணனே வருக.

55. நீந்திட வறியா வெனையிவர் நீந்தும்
நெறியறி வோமெனத் தூக்கி
ஏந்தியே ஆற்றி னிருகரை நடுவில்
இட்டெனை எதுகுறித் திகழ்ந்தோ
போந்தனர் வெறுத்தார் ஐயகோ செல்லும்
போக்கெது? புகலெது? முழுகிச்
சாந்துய ரடைந்தேன் சற்குரு மூர்த்தி
தயவுளாய் ரமணனே வருக.

56. சுபமயந் தருவார் பெரியவ ரிவர்நம்
துணைவரென் றிதுவரை துதித்தும்
அபலமா யானேன் யாவரும் வெறுத்தார்
அதுவுமோர் நன்மையே உன்றன்
சபையிலே யானுஞ் சார்ந்திடத் தானே
தாயெனக் கண்முனே தோன்றி
அபயமே தருவார் யாருனை யன்றி
அஞ்சினேன் ரமணனே வருக,

57. உயிர்களின் உறவாய் உலகினுக் கிறையாய்
ஒருபரம் பொருளுனை எ(ன்)னினும்
அயலெனக் கண்போ லைம்புலன் வழியே
அனுபவித் தன்பினு லணைந்து
செயலுமாம் பக்தி தெரிந்தனை யெனக்குத்
தெரிந்திலை அருவுறு திறத்தை
இயலிதா லுனைக்கண் ணினித்திடக் காண
இச்சைகாண் ரமணனே வருக.

58. உலகமும் உடலும் எனக்கொரு வுருவும்
உண்டெனக் கருதிடும் மடமை
விலகிலா தின்னும் விளங்கு மென்னறிவை
வித்தகா அறிந்துமே யதற்குள்
திலகமாம் பிரமத் திருநெறி பயிலச்
செய்கிறாய்! செய்க!யிங் கென்முன்
மலவுட லுலகும் மறைவரை யுருவில்
வருகஸ்ரீ ரமணனே வருக.

59. விளைத்திடுந் துயர வெங்கன வுலகில்
வெறுப்பொடு விருப்புமேற் கொண்டே
களைத்துநான் வாடுங் காலமெல் லாமென்
கண்முனே நின்னுருக் கண்டால்
வளைத்துறு மயர்வு மடிந்துள மகிழ்வேன்
வருகநீ ரமணமா வடிவில்
பிளைத்தொழு தழுவும் மறப்பையோ என்னைப்
பெற்றவா ரமணனே வருக.

60. நிர்க்குண ப்ரம்ம நிட்டையில் முயன்று
நின்றிட வலிவிலேன் றனையுன்
சற்குணச் சகுண வடிவிலே யன்புத்
தனையளித் தாண்டனை யிதுநாள்
கற்கவே பிரமக் கல்வியை வலிமை
கைக்கொளும் வரையிலும் எனக்கோர்
நற்கதி வடிவும் நாமமும் காண்டல்
ரமணனே ரமணனே வருக.

61. மண்ணுளார்க் கபய மளித்திடும் பெரிய
மதங்களுள் வகைவகை யோதும்
எண்ணிலாத் தெய்வ மூர்த்தியர் பலருள்
என்னுயிர் நாதனே ரமணப்
புண்ணிய உருவும் பெயருமே என்னுட்
புகுந்தது மிகவினிப் புடனே
அண்ணலே யதனுல் அப்பெயர் வடிவோ(டு)
அருள்கொண்டு ரமணனே வருக,

62. பிரமனும் அரியாம் பெயரும்ருத் திரனும்
பிளைப்பிரான் ஐங்கரன் குகனும்
சரஸ்வதி மலராள் தேவியிம் மூவர்
தாயுரு நாமமும் கிருஷ்ண
வரனுரு இராம வடிவமும் நீகொள்
வடிவமே யாயினும் யானுன்
நரவுருப் புனைந்த ரமணமே னியில்தான்
நசையுளேன் ரமணனே வருக

63. நம்பிடக் கருணை நயந்தருள் பரம
நாதனுய் நானுடல் வானுள்
கும்பிடக் கிடைத்த குருவுரு வாயோர்
குறைவிலா ஞானவா ரிதியாய்
செம்பெனைப் பரிசித் தேபரம் பொன்னுய்ச்
செய்திடும் வேதியாய்த் திகழும்
எம்பிரா னன்றே ரமணநீ என்கண்
இன்புற ரமணனே வருக.

64. ஓடியே சுற்றி வருஞ்சிறு பிள்ளை
ஓயவும் ஓடுங்கால் விழாமல்
நாடியே பற்றி நடக்கவும் துணையாம்
நடுவுள தூணென எனக்குப்
பாடியே பரவிப் பணியவும் விருத்தி
பலவிலும் பற்றிநின் றிடவும்
கூடியே ஒய்ந்து குலவவும் நீதான்
குறிப்பொருள் ரமணனே வருக.

65. காண்பவை யுலகிற் கசக்குமென் கண்கள்
காணநின் னுருவமே களிக்கும்
பூண்பவை யணுகப் பொருமலென் னுடலுன்
புணர்ப்பையே நாடுமென் செவியுன்
மாண்பையே பெரிதாய் மாந்துமென் னுவின்
மதுரமோ ரமணநா மமதாம்
தாண்மலர் முகரத் தவிக்குமென் னுசி
தந்தையே ரமணனே வருக.

66. கற்பவர்க் கினிக்குங் காவிய நூல்கள்
கனிரசம் வெறுக்குமென் கருத்தே
முற்பவந் தொலைக்க மூண்டெழுங் கரும
முயற்சியு முனைக்கண்ட முதலாய்
அற்பமாய்த் தோன்றும் அமுதமு துன்பேர்
அழைப்பதே இனிக்கும்;நீ வராநாள்
கற்பமாய்த் தோன்றும் கடவுளே குருவே
கருணையே ரமணனே வருக.

67. பண்டுநின் றேங்கும் பரமனை நாடும்
பக்தர்கள் பவித்திர வடிவில்
கண்டதுண் டோவக் கடவுளை என்றே
கலியிலே மானிடர் கடாவ
'உண்டு;நான் காண்கின் றேனுரு வுடனே
உடையவன் வடிவினை' எனநான்
திண்டிற லோடே செப்பிட வேண்டும்
தெய்வமே ரமணனே வருக.

68. 'அருணையிற் பலகா லடைந்தனை கண்டாய்
ஆயினும் அழைப்பதேன்?' என்றால்
ஒருசில நாட்டான் ஒல்லுமோ கடவுள்
உருக்கொள? ஒவ்வில தன்றோ?
உருவுட னடியேன் உள்ளநாள் வரையில்
உனைவிடா தென்றுமே காணக்
கருணையங் கடலே கருணைசெய் திடுவாய்
கடவுளே ரமணனே வருக.

69. காலமும் இடமும் கடந்தநின் பெருமைக்
களவிலை யாதலால் நீளக்
காலமும் இடமும் அடியர்தங் கண்ணால்
காண்படு கடவுளே யலவோ?
காலமும் இடமும் காணிலா உண்மைக்
கதிஎனக் கருளுநா ளளவும்
கோலமும் குணமும் கொண்டருள் கூர்ந்து
குருபரா ரமணனே வருக.

70. உரலவல் நினைந்திங் குலக்கையாற் குத்தும்
உவமைபோ லுருவுடன் காணக்,
குரவனை நினைந்து கொண்டமு கின்றாய்
'கோ'வெனக் குவலயஞ் சிரித்தால்
அரஹர ரமணா நான்பொறுப் பதுவோ!
ஐயகோ அபயமே தரநீ
நரவுரு பரமா நனியொளி யுடனே
ரமணனே ரமணனே வருக.

71. என்னிருக் கின்ற துலகினில் எனநான்
எண்ணிடா தெண்ணமும் செயலும்
பன்னியே திரிவே னாயினும் கெடாத
படியெனைப் புரந்திடும் பரமன்
பின்னிருந் தருள்கின் றானெனச் செல்வேன்
பீதியால் உனைநினைக் குங்கால்
'முன்னிருக் கின்றேன்!' எனவர வேண்டும்
முருகனே ரமணனே வருக.

72. பெரும்பகை புலத்தார் பிழைவலிந் தென்னைப்
பிடித்திருட் சிறைசெயப் புகுங்கால்
அரும்பிய கண்ணீ ருடன்மன மயர்ந்தே
அருள்வலி வேண்டியே அழுது
திரும்பிநான் கூவு முன்னமே ஆசைத்
தெய்வமே திருவுரு வுடன்நீ
வரும்பெரு வரமே வழங்கிட வேண்டும்
மன்னவா ரமணனே வருக.

73. தனிவழிச் செல்லும் தனையனைக் கள்வர்
தலைவரே யன்றிதன் தந்தை
நனிவலி வுடன்சென் ஞளிலே யணுகார்
நானுமவ் வாறுதொன் னசையாய்
இனிவரும் பகைவ ரிடமயங் காமல்
இகத்தினில் துணிவுட னிருக்கக்
கனிவுட னுருக்கொண் டென்னுட னிருந்து
காத்திட ரமணனே வருக.

74. ஒருகுரு வாகி ஏழையேற் கிரங்கி
உலகில்நான் வாழுநா ளளவும்
உருகுபே ரன்பை ஊட்டிஎன் னுளத்தே
உற்றதொல் வாசனை வடிவாய்ப்
பெருகுமா விடயப் பிடிப்பினை யகற்றிப்
பிள்ளையா யெனைப்பிடி கொண்டே
அருகிருந் தணைப்போ ராருமில் லாமல்
அஞ்சினேன் ரமணனே வருக.

75. சாவலால் வேறோர் தடமிலா வாழ்வில்
தமியனேன் தனிமைகண் டயர்ந்தேன்
மாவலா னுயென் மரணமே தவிர்க்கும்
வள்ளலே வாழுநாள் முழுதும்
காவலா யிருக்குங் கடவுளே என்கண்
காணுமா றடைந்தவ ரருகில்
ஆவலா யோடி அடிதொழற் கிலாமல்
அஞ்சினேன் ரமணனே வருக.

76. மாறுதல் இயல்பாம் மண்ணக வாழ்வில்
மாறிலா தென்னுட னிருந்து
வேறுபுன் னெறியால் விடாதெனேத் தடுத்து
வீட்டுறு நெறிக்குளம் விளக்கும்
வீறுதன் கையில் வைத்தெனே நடத்தும்
வீரனே உனேயன்றி எனக்கிங்(கு)
ஆறுதல் சொல்வோ ராருமில் லாமல்
அஞ்சினேன் ரமணனே வருக.

77. காணவும் தொழவும் கனிமொழி யமுதம்
காதினுற் பருகவும் நாவாற்
பேணவு முன்சீர் பெருமையின் சுவையை
பெயர்ந்திடா மணமெனும் ரமணம்
மாணவே முகர்ந்து மகிழவும் நீயுன்
வடிவிலே வந்துவந் தென்னே
ஆணவ மகன்ற மலரென வாக்கி
யணேக்கவும் ரமணனே வருக.

78. 'வருவனென் தந்தை; வழக்கிலான்; கருணே
வள்ள'லென் றுலகினுக் குரைத்தே
பெருமையே கொள்ளும் பேதையேன் கருத்தும்
பிழைபடா வண்ணமாய் வந்தே
ஒருவன்நீ என்ற னுடனிருந் திடிலென்
,உடல்மனம் உள்ளமும் பனிபோல்
உருகிமெய் யன்பால் உருவழிந் தேக
முற்றிடும் ரமணனே வருக.

79. 'தந்தையோ டிணேந்த தனிச்சுகங் கொண்டேன்
சகத்தவர் தயவினி எனக்கேன்?
பந்தய முரைப்பேன்; பணத்தவர், கற்ற
பண்டிதர், சித்திகள் பலகை
வந்தவர் எவரும் அடைவரோ நான்என்
வள்ளலோ டடைசுக மதுபோல்!'
இந்தவா றுரைத்தென் இன்பமே உன்னே
டிருந்திட ரமணனே வருக.

80. என்றுநான் செய்த இடும்பைதீர் வதுவோ
இவைசெயு மிச்சைவா சனைகள்
சென்றறத் தேய்ந்து தீர்வது மென்றோ
திருவுள மிரங்கிஎன் முன்னே
இன்றுநீ வருத லில்லையேல் என்றால்
இயலுமோ? ஒருவனீ எழுந்தால்
நன்றுநன் றிவையே நாசமாம்; தவறு;
ரமணனே ரமணனே வருக.

81. இட்டிடல் எடுத்தல் எழுவதோ டிருத்தல்
ஏகுதல் இதுசெயல் செயாமல்
விட்டிடல் அருந்தல் விரும்புதல் வெறுத்தல்
வேண்டிய கருமங்கள் இவைபோல்
தொட்டதற் கெல்லாம் நின்னொடு பேசித்
தொடர்புகொண் டணுத்துணை யேனும்
கட்டமில் வாழ்க்கை கண்டுநான் வாழக்
கருணையே ரமணனே வருக.

82. சோரமில் லாத தூய்மனஞ் செயலும்
சொல்லுமே சுபாவமா யடைந்து
வாரமெல் லாமாம் வள்ளலுன் னருள்வாய்
மடுத்தகம் பொங்கிடு மகிழ்வால்
சாரமெல் லாமாம் சற்குரு நினது
சகுணமும் நாமமுந் தழுவி
நேரமெல் லாஞ்சந் நிதியிலே கழிக்க
நேரிலே ரமணனே வருக.

83. உடல்மன மழியா வரைஎனக் கிறையாய்
உற்றவன் நீஅரு ளுடனே
உடலுரு வோடென் னுடனிருந் தகலா
உயர்துணை உதவிட வேண்டும்
திடமிலா தழுவேன் இவ்விதம் கருணை
செய்திடா திருப்பையே லென்மெய்க்
கடவுளே குருவே கைவிடேல் வருக
கருணைசெய் ரமணனே வருக.

84\. புறமுக உலகே புரிகின்ற தல்லால்
புத்தியை யகமுகம் பொருத்தும்
திறமிலே னிதைநீ செய்திலை யென்றால்
சென்மம்நா னெடுத்தது வீணே
புறமுக வுலகின் போக்கினைக் கண்டு
பொள்ளென நடுங்குமென் புத்தி
திறமுற நினது திருவுருக் காணத்
தேடினேன் ரமணனே வருக.

85\. இறந்தவ னாகி இருந்திடுங் கல்வி
எனக்குநீ யளித்திலை யின்னும்
துறந்தவ னென்னும் துகளறுங் கோலம்
தோய்த்தெனைத் துயர்விடா நிலையிற்
சிறந்தவ னுயுட் டேம்பிட வைத்தாய்
செய்கடன் முடிவுசெய் யாமல்
மறந்தவன் போல விருப்பது தகுமோ
வருகநீ ரமணனே வருக.

86\. உற்றவ னுயிங் கெனக்கொரு துணைநீ
உருவுடன் வருவதும் என்னைப்
பெற்றவ னுன்பால் பேசிநான் கவலைப்
பெயர்ந்தினி திருப்பதும் வேண்டும்
மற்றவ ரிதனை யறிந்திட நினக்கு
மனமிலை யாயினுஞ் சரியே
கொற்றவா ஏழைக் குறையறக் கருணை
கூர்ந்திவண் ரமணனே வருக.

87\. கூவியே அழுது கொண்டுனை யழைக்கும்
குழந்தையேன் குலைநடுக் குற்றேன்
ஆவியே பதைப்ப தறிந்திடார் போல
அப்பனே நீயிருப் பதுவோ
பாவியே னளவிற் கருணைநீ செய்யப்
படாதென எண்ணமோ ரமண
தேவியே ரமண தேவனே கருணை
செய்திவண் ரமணனே வருக.

88. உலகினைக் காணும் பொழுதெலா மந்தோ
உயிர்க்கொரே துணைவனு முன்னை
விலகியே யிருப்ப தாகஎன் னெஞ்சம்
வெம்பியுள் விதிர்ப்பதை அறிந்தும்
அலகிலாக் கருணை யாளனுன் பாதம்
அவைகளும் வரமறுத் தனவோ
இலகுநான் துதிப்பார்க் கென்றனை நின்சொல்
ஏற்புற ரமணனே வருக.

89. தருவினிற் கிளைமேல் தாவுமற் கடத்தைத்
தழுவிய மதலைகள் தனைநான்
ஒருமுறை காணில் உடனடி யாயென்
உற்றதா யானநின் னேடு
மருவியிவ் வாறு வாழ்ந்திடும் பேறு
வந்திடா தோவெனக் கண்ணீர்
அருவியி லாழ்வேன் ஐயனே அதனுல்
அருகினில் ரமணனே வருக

90. தும்பினைத் தறித்துத் தாயிடம் செல்லத்
துடித்திடுங் கன்றினைக் கண்டால்
எம்பெருந் தாயா மிறையுனை யடையா
திருப்பதை நினைந்துளங் கொதித்தே
வெம்பினேன் அழுதேன் விரைவினி லன்னுள்
மேவுமுன் னருளினு லென்றே
நம்பினேன் இருந்தேன் நீயறி யாயோ
ரமணனே ரமணனே வருக.

91. தம்பிளை யொன்றைத் தாயகன் றிரவில்
தவிப்புடன் திருவிழாக் காண்போர்
கும்பலிற் றேடிக் கொண்டிருப் பதையான்
குனிப்புடன் கண்டிடில் உடனே
எம்பிரா னிவ்வா றெனையுமே கொளவோர்
இச்சையு முடையனே என்றே
வெம்பியே அழுவேன் வருவையோ என்னை
வேண்டியே ரமணனே வருக.

92. நல்லசீர் கற்பின் நங்கைமுன் செல்லும்
நாதனைத் தொலைவினுற் பிரிந்து
செல்லவே பொறுமல் விசையுட னடந்து
சேர்வதைக் காண்பனேற் கலங்கி
இல்லையோ எனக்கு மிவ்விதந் தொடர்ந்தே
எனையுடை இறையுனைச் சேரும்
நல்லநா ளென்றே யழுவனே பிராண
நாதனே ரமணனே வருக.

93. கடிதமே கொணர்வோன் வரவினைக் காத்துக்
காத்திருந் 'திலை'எனக் கண்டார்
படிதனில் ஏங்கப் பார்ப்பனேல் பலநாள்
பகவனின் வருகையே பார்த்துள்
ஒடியுமென் னுளம்போல் உள்ளனர் இவரென்
றுன்னுவேன் இவ்வித முன்றன்
அடியவ னழுங்கல் அருளினுக் கழகோ
அப்பனே ரமணனே வருக.

94. கவ்விய வாயிற் கன்றுடன் பூனை
காண்பனேல் காண்டொறு மாவல்
எவ்வியே இதுபோல் எனையுமே கவனித்
திடநம திறைவனின் உளமும்
ஒவ்வுமோ வருமோ உடன்பிடித் தேகி
ஊட்டுமோ எனவழு வேனை
ஔவையே குருவே அப்பனே நீதா
னருள்செய்ய ரமணனே வருக

95. தான்பிரிந் தோடும் தாய்ச்சுணங் கன்பால்
தனைச்சுவைத் திருந்தபல் சேய்கள்
தேம்பிடும் போது கண்டுநா னழுது
தேவனே அருணையில் எனைநீ
வான்பெருங் குருவாய் வந்துகண் ணோக்கம்
வைத்தபின் இன்றுநான் மயங்க
ஏன்பிரிந் தோடி விட்டனை என்றே
ஏங்கினேன் ரமணனே வருக.

96\. மரத்துள வளையிற் குஞ்சுகள் ஒலிக்கின்
மாலையில் தாய்வந்த வரவை
தெரித்துளஞ் சிலிர்த்தச் சேய்களின் களிப்பைச்
சிந்தைசெய் திவ்விதம் இறைவா
வரத்தெரி யாதோ வல்லவ னுனக்குன்
வரவலால் மகிழ்விலேன் எனவே
சிரத்திலே கரத்தைச் சேர்த்தழு வேனே
தெய்வமே ரமணனே வருக.

97\. வண்டின வருகை பார்த்திதழ் மலர்ந்து
மணங்கமழ் மலர்களை யடியேன்
கண்டிடிற் றெய்வக் காதலா இதுபோல்
கடைமனம் மலர்வனோ நீயும்
கொண்டெனை நாடி வருவையோ இதுகை
கூடுமோ என்றுகண் பொத்திக்
கொண்டழு கின்றேன் குருபரம் பொருளே
கொற்றவா ரமணனே வருக.

98\. அணைந்திடு முன்னே யடங்குநெய் விளக்கிற்
களிப்பவர் நெய்யினை அளிக்கின்
சுணங்குவ தின்றிச் சுடருதல் கண்டு
துள்ளியென் மனமகிழ்ந் திறைவா
இணைந்திது போலுள் ளேங்கியே அணையும்
இச்சையே னின்பமோ டெழநீ
அணைந்தக மொளிசெய் தருள்வையோ எனவும்
அழைப்பனே ரமணனே வருக.

99\. வெந்தவெங் கல்மேற் புனல்விடும் பொழுது
விரிந்தவை வெள்ளெனக் கரையும்
தந்திரங் கண்ட பொழுதெலா மிறைவா
தனித்தெனைத் தவத்தினுற் சமைத்துச்
சொந்தமா யருள்நீர் தோய்த்தெனை மலர்த்திச்
சொரூபமாம் தூவெளி கரைக்கத்
தந்தையே நீயும் தயவுசெய் யென்றே
தவித்தனன் ரமணனே வருக.

100. வாடிய பயிர்கள் வார்த்தபின் நீரால்
வளைவெலாம் நிமிர்ந்தவை வளியில்
ஆடியே மகிழ்வ தடியனேன் கண்டால்
அப்பொழு தவ்விதம் உனையே
பாடியே யழுது பதைத்திடு மெனக்கும்
பலிக்குமோ நினதரு ளென்றே
நாடியே தொழுவேன் நான்கணுற் காண
ரமணனே ரமணனே வருக.

(அறுசீர் விருத்தம்)

101. வருக ரமண மஹாகுருவே
வருக தெய்வ மணிச்சோதி
வருக அருணு சலனீன்ற
மகனே வருக வலுவிலுனே
வருவித் தருணு சலன்மணந்த
வதுவே வருக மரகதமே
வருக சகுண வடிவினிலென்
வாழ்வே ரமணு வருவாயே.

102. வருக குருவே திருவண்ணு
மலையி னழகே நீவருக
வருக சிவலோ கத்தரசே
வாடாத் தெய்வ மலர்வருக
வருக பரமேஸ் வரவடிவே
மனித கோல மேவருக
வருக என்முன் திருவுருவில்
வருக ரமணு வருவாயே.

103. வருக அண்ணு மலைக்கன்றே
மலையா ஞான மதக்களிறே
வருக புவியும் வானகமும்
வாழ வந்த மாதவமே
வருக தெய்வ மெலாந்திரண்ட
வடிவே வருக மகனென்பால்
வருக அருளார் வடிவோடே
வருக ரமணு வருவாயே.

104. வருக அகில மதையுண்ட
வாயே யார்க்கும் மாண்புருவே
வருக எல்லா வுயிர்க்குள்ளும்
வாழும் மூல வச்சிரமே
வருக அணையா மணிவிளக்காய்
மரணங் கடந்து வயங்குவனே
வருக நினையே வாய்நிரம்ப
வழைப்பேன் ரமணா வருவாயே.

105. வருக நினைப்பு மறப்பையெலாம்
வழுவா தறியும் ஆரறிவே
வருக எல்லா மடங்குங்கால்
வாழ விளங்கும் அற்புதமே
வருக யாரு மறியாத
வனத்துள் வசிக்கும் மகரிஷியே
வருக குருதே வன்வடிவில்
வந்தோய் ரமணா வருவாயே.

106. வருக மாலும் மலரவனும்
வாழ்த்தும் பரமே மனமிரங்கி
வருக ரமண மந்திரமே
மலிந்த வாயார் மனநாவில்
வருக பலகால் வாவென்று
மணித்தாள் கூவு மன்பரிடம்
வருக வடியேன் மனங்கண்ணும்
மகிழ ரமணா வருவாயே.

107. வருக அருணா சலமுதித்த
மரண மொழிக்கும் மாமருந்தே
வருக அருணா சலனரசை
வாங்கி யாளும் இளவரசே
வருக அருணா சலவாவி
மலர்ந்த சிவத்தா மரைமலரே
வருக அருணா சலநிதிக்கோர்
வள்ளால் ரமணா வருவாயே.

108. வருக அருணு சலனத்தினருள்
வழியுங் கங்கை மாநதியே
வருக அருணு சலக்கடலின்
வந்து தித்த வானமுதே
வருக அருணு சலன்அட்டி
வைத்துக் கொடுத்த வருளுணவே
வருக அருணு சலமுடிமேன்
மணியே ரமணு வருவாயே.

109. வருக அருணு சலக்கண்ணன்
வாக்காம் கீதை வான்குயிலே
வருக அருணு சலன்அருளாம்
வலையிற் பிடித்த மான்பெடையே
வருக அருணு சலமுருக்கி
வார்த்த சகுண வடிவழகே
வருக அருணு சலரமண
மயமே ரமணு வருவாயே.

110. வருக அருணு சலனுக்கட்
சரமா மணமா லேவனேந்தோய்
வருக அருணு சலன்மாலை
மாற்றும் பட்ட மகிஷியனே
வருக அருணு சலநாம
மகிமை முழக்கும் மணிமுரசே
வருக அருணு சலன்பாத
மலரே ரமணு வருவாயே.

111. அருணு சலத்தி னருளாலே
அகமும் பறிபோய் அருளாண்டாய்
ஒருநா ளுனக்கே யுணவாகி
உருவற் றழிய உளங்கொண்டேன்
திருநா ளெதுவோ அதுவரையிச்
சிறியே னுளமுந் தேறிடநீ
வருவாய் கண்ணுல் கண்டுனேயே
வாழ்த்த ரமணு வருவாயே.

112. தொல்வந் தடைந்த தூயோர்முன்
தோன்றும் பெருமான் தூய்மையிலேன்
அல்வந் தழிய நீதோன்றி
அருள்வாய் மொழியாம் அமுதமழைச்
சொல்வந் தெளியேன் செவிபாயத்
துயர மழியும் பதந்தொட்டு
நல்வந் தனையான் செய்தருளில்
ரமிக்க ரமண வருவாயே.

113. பேரு ரில்லாப் பெருமானுன்
பிரிய முடைய பழந்தொண்டர்
ஆரூர் நம்பி அழைக்குங்கால்
அவர்முன் றோன்றி அருளிலையோ?
பாரூர் வனவுட் படுபாவிப்
பதரே னெனினும் உனையன்றி
யாரோர் தெய்வ மறிவேன்வந்
தருள்வாய் ரமண வருவாயே.

114. தூது நடந்தாய் சுந்தரர்மெய்த்
தொண்டர் மனையா ளிடையிரவில்;
வாது தொடர்ந்தாய் மணநாளில்;
மணியும் பொன்னும் வழங்கினையே
சூது தொடர்ந்தால் என்னளவில்
துணைவே றில்லேன் தொழலன்றி
ஏது புரிவே னெந்தாய்நெஞ்
சிரங்கி ரமண வருவாயே.

115. பாவச் செயலார் எழுந்துதிரௌ
பதியைத் துயிலே பறிக்குங்கால்
கூவித் துதிக்க உடனேகை
கொடுத்தங் குதவிக் குறைதீர்த்தாய்
பாவக் கடையே னெனினும்புலப்
பகைவ ரிடையே பரிதவித்துக்
கூவிக் குழைகின் றேன்என்முன்
குருவே ரமண வருவாயே.

116. முனியும் முனிவன் பரிவாரம்
முழுதுங் கானில் பசிதீர
நினையும் முன்னே பாஞ்சாலி
நேரே தோன்றி நின்றிருந்த
பனியாம் பருக்கை யுட்கொண்ட
பரமா ஏழைப் பயந்தீர
இனியும் வரலுன் னியல்பன்றோ
என்முன் ரமணா வருவாயே.

117. சேதம் புரிய விரணியனுஞ்
செய்த சதிக்கெல் லாம்பிரக
லாத னிடுக்கண் அகற்றிடவே
அலையில் மலையில் அடுநஞ்சில்
ஏதம் படரா தெழுந்தனையே
எளியேன் மனமும் இன்பமுற
வாதிங் கேனோ வாராயோ
வருவாய் ரமணா வருவாயே.

118. 'எங்கு முளனேல் தூணிதனில்
எனக்கே காட்'டென் றிரணியனும்
பொங்கும் பொழுதே புகல்தந்துன்
புதல்வன் காணப் போர்வெல்லுஞ்
சிங்க வடிவிற் றோன்றினையே
சிறியேன் பகையாஞ் சினங்காமக்
கங்கு லறவே களித்தென்கண்
காண ரமணா வருவாயே.

119. ஒன்றோ சிலவோ அடியார்க்கா
யுருநீ தரித்த சமயங்கள்
அன்றே கணக்கி லடங்காப்பே
ரளவா யினவே; முற்காலம்
என்றோ நடந்த தென்னுதே
இக்கா லத்தும் நின்செய்கை
நன்றே சொல்வேன் உலகறியும்
ரமணா ரமணா வருவாயே.

120. எந்தா யெந்தா யெனவிரந்த
இராம லிங்கர்க் கிரவினிலே
வந்தே எழுப்பி மகனேநீ
வாவென் றழைத்துக் கைதனிலே
இந்தா வென்றென் றீந்தனையே
இதைநீ மறுக்க வியலாதே
தந்தா யெனக்குந் தயைசெய்தால்
தகாதோ ரமணா வருவாயே.

121. கல்லாப் பொழுதக் கருணையிளங்
கனிமுன் றெருகண் ணுடியிலே
எல்லாக் கலையும் பயில்விக்கும்
எழிலா ருருவில் எழுந்தாயே
நல்லார்க் கன்றி வாராத
நாதன் நீதா ணுயினும்நீ
யல்லால் வேறோ ராதரவும்
அறியேன் ரமணா வருவாயே.

122. வெருவுஞ் சிறியாள் விலக்கிடமுன்
வெம்பிக் கானில் வீற்றிருந்த
துருவ னிடமே அழகுருவில்
தோன்றி நின்ற தூமணியே
அருவு மகண்ட மாயினும்நீ
அழுமுன் னடியார்க் காதரவாய்
உருவந் தாங்கல் உண்டேகண்
டுருக ரமணா வருவாயே.

123. உடலின் தந்தை ஒதுக்கிடவும்
உற்று ளிளையாள் ஏசிடவும்
படுமோ என்றப் பாலகன்மேல்
பரிவு கூர்ந்தாய்! உனையன்றித்
தொடவும் பரவித் தொழுதிடவும்
துணைவே றின்றிப் பலராலும்
விடவே பெற்றேன் மிகுகருணை
வேளே ரமணா வருவாயே.

124. கண்முன் னருகில் வீற்றிருந்தாய்
கனிவாய் மொழிந்தாய் போதாமல்
விண்மூன் றளவும் வியாபிக்கும்
விசுவங் காண விஜயனுக்கே
எண்முன் னெழுந்தாய் இறைவா நின்
இரக்கம் பெரிதே! எளியேனே
கண்முன் காண தழுகின்றேன்
கருணா ரமணா வருவாயே.

125. உறவும் நட்பும் பிரியாமல்
உடன்வாழ் பேறும் உடையானாய்
அறமே யுன்னை யடைந்திருந்த
அருச்சு னர்க்கே அருளுருக்கண்
பெறவே காட்டும் பெருங்கருணைப்
பிரானே துணையா யுடனிருப்போர்
அறவே யில்லா அகதியெனக்
காக ரமணா வருவாயே.

126. குருந்தை யடியில் மணிவாக்கைக்
கொண்டு முடிக்கக் குருவாகி
இருந்த உருவே இறைவா நீ
இன்னா விடும்பைக் குணமெல்லாந்
திருந்த முடியா தருட்டுணைக்காய்த்
தேம்பி யழுது திகைத்துள்ளம்
வருந்தும் பாவி மனத்தேன்முன்
வருவாய் ரமணா வருவாயே.

127. தொழுது தொடுத்த சொல்லலங்கல்
தொகுத்தப் புனிதர் சொலச்சொல்ல
எழுதிக் கொடுக்க இசைந்தேமுன்
னெழுந்தாய் உருவில் இரக்கமெனே!
பழுது மனத்தேன் பிழையெல்லாம்
பறிப்பா ரின்றிப் பலகாலும்
அழுது வருந்த வாராத
அருளென்? ரமணா வருவாயே.

128. குதிரை யூர்ந்தாய் நரிபரியாய்க்
கொணர்ந்தாய் அரையன் கொடுத்தவடி
அதிர நலிந்தாய் வைகைக்கோர்
அணையுஞ் செய்தாய் அடிகட்குன்
சதுரை நினைந்தால் யார்தான்நீ
சகுண வடிவம் தாங்காத
புதிய னென்பார் இறைவாகண்
புலர ரமணா வருவாயே.

129. கடந்த வினைபாற் கழிவிரக்கம்
கனியு மருணா கிரிக்கோடி
யடைந்து தாங்கி அழியாமல்
அமர்ந்த நிலையில் அமர்வித்தாய்
உடந்தை யாவார் உனையன்றி
ஒருவ ரில்லேன் உன்னருளால்
நடந்த தெல்லாம் பொய்யன்றே!
ரமணா ரமணா வருவாயே.

130. அருணா கிரியார்க் கருள்நாமம்
அளித்துச் செபிக்க மணிமாலை
தருநல் லாசான் ருனுகிச்
சந்தக் கவிதா சக்தியுநா
வருணா னெனவே பொழிதருமா
வளமுந் தந்தாய் என்முன்னே
கருணை யுருவில் வாராயோ
கடவுள் ரமணா வருவாயே.

131. தம்பற் றொழியத் தரிசன(ம்)நீ
தந்து னன்பர் தனக்காகக்
கம்பத் தினைய னுகவுமே
கடவு ளுருவங் காட்டிலையோ?
நம்பத் தகுமே அதனுல்நீ
நாடு மடியார்க் குருக்கொள்ளும்
செம்பொற் குணத்தான் இன்றென்கண்
தெரிய ரமணா வருவாயே.

132. சேயு மாறு ரெனவிரங்கித்
திருவார் மௌனிச் சிவவடிவில்
தாயு மானப் பெருந்தகைமுன்
தந்தாய் நீவந் தடுத்திலையோ?
ஆயு மாறு லுலகுணையிவ்
வாறென் றென்றும் ஆருருவில்
பாயும் பரமா யறியுமென்கண்
பார்க்க ரமணு வருவாயே.

133. இல்ல முடித்துன் இணைப்புன்னி
இருக்குந் தாயு மானவர்முன்
வல்ல குருமா மௌனியென
மற்று மொருகால் வந்தருளிச்
சொல்ல வரிய சகஜபர
சொரூப நிட்டை தோய்வித்தாய்
அல்ல லறஎன் றனக்குமினி
அருள்வாய் ரமணு வருவாயே.

134. கண்ணு னுன்னைக் கண்டிடநீ
கருணை செய்யா விடில்வாளால்
திண்ணு ருடலைச் சிதைத்தான்மத்
தியாகம் புரிவே னெனவெழுந்த
விண்ணு ரிராம கிருஷ்ணரிடம்
விரைந்து ஜகன்மா தாவென்றே
பெண்ணுய் நின்ருய் பெருந்தாயே
பெருமான் ரமணு வருவாயே.

135. வங்கத் தெழுந்த வான்செல்வர்
வாவென் றழைக்கும் போதெல்லாம்
அங்குத் தாயாய் அடிக்கடிநீ
அருளாற் பேசி அகந்தேற்றிப்
பொங்குற் றனையே உனையல்லால்
போகப் புகவோர் போக்குமிலா
எங்கட் கிறைவா எளியேன்முன்
இரங்கி ரமணு வருவாயே.

136. ‘ஏனங் கேகல்? இறைவனிடம்
இருந்துத் தரவு மெனக்காகில்,
யானங் கயல்நா டடைவே’னென்
றயர்ந்த துறவி யரசுவிவே
கானந் தத்தின் முன்தோன்றிக்
கடலுட் புகுந்தாய்; கண்காண
ஏனிங் கென்முன் வரலரிதோ
இறைவா ரமணு வருவாயே.

137. ஈன வலிவே இளமைமுதல்
இருந்த தந்தோ இறைவா நின்
ஞான வலிவா லன்றியொரு
நாளும் புன்மை நழுவாதே
மோன வலிவாம் போதனையால்
மோக்ஷ மளிக்குங் குருநாதா
தீன னலவோ என்னுளமும்
தேற ரமணு வருவாயே.

138. இல்லத் தறமோ துறவறமோ
எதற்குந் தகுதியில் லேன்மேற்
செல்லத் திசையே தெரியேனென்
சிந்தைத் துய்ரை யாரிடந்தான்
சொல்லிக் கொள்வேன் வாய்விட்டுச்
சொல்முன் னிரங்கித் துகணீக்க
வல்ல பெரியோன் நீஎன்முன்
வருவாய் ரமணு வருவாயே.

139. குலமுங் குணமுங் குறைகொங்கிண்
குடல்கொண் டுற்றேன் குறைதீரும்
பலமு மில்லேன் உனையிளமைப்
பருவ முதலே குறையிரந்து
மலமு மகலும் நிறைவெல்லாம்
வாய்க்கு மெனவே வாழ்கின்றேன்
நலமும் பெறுமா றென்கண்முன்
ரமணு ரமணு வருவாயே.

140. வழியிற் றுணையாய் வந்தெனையுன்
மலர்ச்சீ ரடிக்கே விடுவோராய்
விழியிற் கண்டோர் தமையெல்லாம்
விரும்பி நயந்தேன் அவரெல்லாம்
வழியிற் கைவிட் டகன்றுர்என்
மனநோ வறிய மாட்டாராய்
அழிவிற் கஞ்சு மென்முன்னே
அப்பா ரமணு வருவாயே.

141. நீயே வந்தென் நிலைகண்டு
நெடுநாள் மனநோய் நீக்கியருள்
வாயே யல்லால் இப்பிறவி
வந்தும் வீணும்; மகனன்றே?
தாயே! ரமணத் தயாநிதியே!
தயவா லன்றித் தகவில்லா
நாயேன் றனக்கு முய்வேதோ?
ரமணு ரமணு வருவாயே.

142. 'இன்றே வருவாய் இனித்துயரம்
எல்லாம் போம்இன் றேல்நாளை
யன்றே வருவாய் கைவிடநீ
அணுவும் நினையாய்' என்றேங்கி
நின்றே னன்றி வேறென்ன
நினைப்பே னப்பா? இவ்வேக்கம்
என்றே டகலும்? என்கண்முன்
எழுவாய் ரமணு வருவாயே.

143. ஆவி துடித்தே யரக்கரிடை
அசோகில் உனக்கா யருட்சீதா
தேவி மனம்போல் துடித்தன்றித்
தேவா வரவும் செய்வாயோ?
பாவி மனத்தேன் ஏக்கமெலாம்
பற்று தன்றே? என்றுலும்
சாவின் இதைநான் சகியேன்என்
தலைவா ரமணு வருவாயே.

144. மாலே யுன்றன் வரவிற்காய்
வாடும் யசோதை மனம்போலும்
சேலே வளர்முன் திரௌபதியின்
சித்த மிருந்த திறம்போலும்
சாலத் துடிக்கும் தவமின்னுஞ்
சாரே னென்றே தயவேநின்
கோலக் காட்சி தாவெண்ணம்
கொளிலே? ரமணா வருவாயே.

145. உண்ணப் புலேயீந் துனக்கள்பால்
ஒருநாள் குருதி யுறுமுன்கண்
புண்ணேக் காணப் பொருதானுய்ப்
புலம்பி யாவற் பெருக்கால்தன்
கண்ணேப் பறிக்குந் திருவாளன்
கனிவைப் போலக் கனியாத
எண்ணப் புலேயே னென்செய்வேன்
இறைவா ரமணா வருவாயே.

146. மகவைக் கொன்றும் அமுதூட்ட
வல்லா ரன்பை மாந்தியநின்
முகமுன் பேதை 'வா'வென்று
முறையிட் டாலும் வருவாயோ
தகவைக் காணு தடியார்பால்
தயவு செய்யுந் தாத்தன்றி
வகைமற் றிலேயா னுனேக்காண
வருவாய் ரமணா வருவாயே.

147. தான மாகத் தரிசனம்நீ
தந்தா லன்றித் தகுதியெனக்(கு)
ஆன துண்டோ? அவலமெலாம்
அகலா மனத்தேன்; அறியாயோ!
ஞான குருவே உனேக்கண்முன்
நாடிக் கண்டால் பிறகேதான்
ஈன குணங்கள் எனேயகலும்
இதற்கே ரமணா வருவாயே.

148. 'தங்கச் சட்டி ஏனிலே?நான்
தரமாட் டேன்!போ!' என்பார்போல்
எங்குற் றங்கண் டெனைத்தள்ளி
இகழ்வார் பாற்சென் றென்செய்வேன்
மங்குற் றறிவு மயங்கிடுநாள்
வலிவில் லாமல் வாழ்கின்ற
கங்குற் போதுங் கைகொடுக்கும்
கடவுள் ரமணா வருவாயே.

149. கண்ணில் லாதான் நடக்குங்கால்
கால்பட் டால்யார் கடிவாரே
எண்ணில் லாத பிறவிகளாய்
இருளிற் றிரிவேன் செய்பிழையை
எண்ணி யகன்றால் என்செய்வேன்
இறைவா எனைமன் னிப்பாயே.
கண்ணா லுனைக்கண் டிடவேண்டும்
கடவுள் ரமணா வருவாயே.

150. கடலுங் கடைநாள் ககனத்தார்
கண்டு நடுங்கக் கார்மிடற்றில்
விடமும் பொறுத்தாய் எனக்கேட்டுன்
விரையார் கழலே வினையேன்றன்
மடமும் பொறுக்க வல்லதென
மனங்கொண் டோடி வந்தேன்என்
னிடமுங் கருணை செய்தென்முன்
இன்றே ரமணா வருவாயே.

151. பொல்லாக் கள்ளர் புன்செயலும்
பொறுத்தாய் விளக்கும் பொருத்தியளிச்
சொல்லா லளித்தாய் எனக்கேட்டுன்
துணைசே ரடியே நான்செய்யும்
எல்லாப் பிழையும் பொறுத்தினிமேல்
ஏதும் பிழைநான் இயற்றாத
நல்லா னாக்கும் எனவந்தேன்
ரமணா ரமணா வருவாயே.

152. கொடியாய்ப் பிறவி கொண்டபின்னேர்
கொழுகொம் பின்றேல் உயிர்வாழ
முடியா தன்றோ அடியேனும்
மூல வகந்தை ஒழியாமுன்
துடியா நின்றேன் துணையாய்நீ
தோன்று விடிலென் தொல்வினைகள்
மடியா தந்தோ என்கண்முன்
வருவாய் ரமணா வருவாயே.

153. தனியாய் வாழச் சக்தியிலேன்
தன்மை கண்டாய் தரணியுள்ள
மனிதர் துணையும் உடன்வாழ்வும்
வாய்க்கின் மனமோ வாந்திசெயும்
புனிதா நீயே போந்திங்கென்
புலன்க ளறிய நடமாடித்
தனிமை யகற்றித் தரவேண்டும்
தந்தாய் ரமணா வருவாயே.

154. சச்சங் கத்தார் உனையன்றிச்
சகமேல் யாரோ? தனியான
நிச்சங் கத்தால் உன்னடிக்கே
நேசம் பொருந்தி நிற்பதலால்
எச்சங் கத்தும் ஏகேன்நீ
என்னோ டிருந்து யான்கொண்ட
அச்சங் கெடுப்பாய் கண்முன்வந்
தருள்வாய் ரமணா வருவாயே.

155. கண்ணே குளிரக் கடவுளுனைக்
கனவி லேனுந் தினந்தோறும்
நண்ணேன் நனவில் நீவரிலென்
நயனம் படுமோ? நாடோறும்
உண்ணேக் கில்லேன் உருக்கண்டால்
உள்ளம் பிறமேல் ஓடாமல்
விண்ணேக் குறுமே வேறென்ன
விழைவேன்? ரமணா வருவாயே.

156. பண்ட மெல்லாம் பாரேன் தீப்
பசியு மறப்பேன் பலர்ஏசிக்
கொண்டு சொல்லல் குறியேன்என்
குருவே துயிலேன் உனைக்கண்ணால்
கண்டு கொண்டே னெனிலுலகக்
கனவை மறந்துன் கழிபித்தே
கொண்டு திரிவேன் என்னுசை
குறுக ரமணா வருவாயே.

157. கதிரோ னுதயம் கடுவெயிலும்
காரின் வரவும் கனிகாய்கள்
முதிரும் பருவம் மழைபனியும்
மூடும் பருவம் முதலாய
எதுவுந் தெரியா திறைவா நீ
என்முன் னெழுந்திங் கிருப்பாயேல்
பதியே ஆசைப் பயித்தியமும்
பலிக்க ரமணா வருவாயே.

158. உலகங் கருதேன் உடல்கருதேன்
உயிர்க்கக் கருதேன் உயிருடலை
விலகு மிருக்கும் விதங்கருதேன்
வீடும் பற்று மிரண்டற்றுள்
இலகும் பெருமா னுன்னோடே
இருக்கப் பெற்றே னெனிலின்றே
அலகில் லாத அருளுடையாய்
அப்பா ரமணா வருவாயே.

159. தன்னைப் பெற்ற தாய்தந்தை
சாமி குருவாம் சதுர்வடிவன்
உன்னைப் பற்றிக் கொண்டாற்பின்
உயிரைப் பற்றிக் கவலையிலை
என்னைப் பற்றி உலகத்தார்
எதுவோ கூறி யிகழட்டும்
இன்னே நீவந் திடஆசை
எழுந்தேன் ரமணா வருவாயே.

160. எங்கே திரும்பிப் பார்த்தாலும்
எந்தாய் நீயங் கிருக்கின்ற
சங்கை முதலில் தந்தென்றன்
சழக்க மனதைத் தடைசெய்வாய்
தங்க மனமாய் அதைமாற்றித்
தரவேண் டாவோ? உனைக்கண்டால்
எங்கண் முன்னே இதுகூடும்!
இன்றே ரமணா வருவாயே.

161. எல்லாப் போது முன்னருகில்
இருக்கும் பேறிங் கெனக்காகில்
அல்லால் பாவ மணுகாவாழ்
வடைத லரிதே யதனால்நீ
சொல்லால், அருகில் துணையால்,யான்
தொட்டுன் பாதம் தொழுவதனால்
நல்லா னாக்க வரவேண்டும்
ரமணா ரமணா வருவாயே.

162. காலை எழுந்தால் உனைக்கண்ணால்
காணும் பேறும் இடைவேளை
மாலை இரவு துயில்கண்ணில்
வருமுன் போதும் வந்துறங்கில்
சாலக் கனவில் சற்குருநின்
றன்னைக் காணுந் தனிப்பேறும்
மேலைப் பேறாய் மேவிடஎன்
விருப்பம் ரமணா வருவாயே.

163. தேக மிருக்கும் வரைகண்முன்
ஜெகமு மிருக்கும் வரைநாவில்
தாக மிருக்கும் வரைஉதரத்
தனலு மிருக்கும் வரைபேசும்
மோக மிருக்கும் வரைநீஎன்
முன்னி லிருக்க வரவேண்டும்
ஏக மிருக்க வைத்தால்நான்
எங்கே? ரமணா வருவாயே.

164. கரணம் புத்தி கண்காது
கைகால் தேகாங் கங்களொரு
முரணு மின்றி யுனைத்தொழவே
முடியு மிளமை யிதுமாறி
மரணம் வருமே மூப்பெல்லாம்
வருமே யதன்முன் மனமிரங்கிச்
சரணங் கொடுத்தென் றனைக்காக்கத்
தந்தாய் ரமணு வருவாயே.

165. புத்தி மனத்தைத் தடுத்தெங்கும்
போகா திருக்கப் புரிகின்ற
சக்தி மழுங்கும் முன்னே நின்
றனையே னென்னைச் சரியாக்கி
முக்தி கொடுக்க வேண்டாமோ?
முனையா திருந்தால் மூப்பென்னைக்
கொத்தி விடுமே யதன்முன்னே
குருவே ரமணு வருவாயே.

166. எந்த விதமும் உனைப்பிரியா
திருக்கக் கூவி இறையுருவில்
வந்த வருணு சலத்துடனே
மாரு தென்றும் வாழ்ந்தனையே
உந்தை புரிந்த இரக்கம்போல்
உனையே நாடும் உன்னடியேற்
கெந்தை புரிவாய் என்கண்முன்
இறைவா ரமணு வருவாயே.

167. இடம்நா ளற்ற ஏகமதாய்
இருந்த போதும் எந்தாயுன்
உடல்வாழ் வரையும் உடன்வாழும்
உருவா யிருந்தான் பெருங்கருணைக்
கடலா மருணு சலனந்தக்
கடவுள் மகனே கண்முன்மே
விடலா மெனக்கும் விலக்கல்ல
வேந்தே ரமணு வருவாயே.

168. அண்ட நிறைந்த அருணேசன்
　　ஆசை யுருவை அகலாதாய்
கொண்ட செல்வக் குன்றிலொரு
　　குன்றி யளவு கொடுப்பதற்குச்
சண்டை யிடவோ வேண்டுமுனே
　　'தா'வென் றழுமுன் தருவாயே!
கண்டு களிக்கக் கண்முன்னே
　　கருணா ரமணா வருவாயே.

169. ஆருக் காதற் பெருக்காலே
　　அடைந்த அருணா சலனுருவை
மாறுக் கண்காண் மணவாள
　　வராய் மணந்து மாங்கல்யப்
பேறு ராலும் பெயராமல்
　　பெற்றாய்; காணப் பெரிதழுதும்
வேறு நினைக்க வெண்ணாதே
　　விரைவில் ரமணா வருவாயே.

170. 'மனக்கா தலுமெவ் வாறுளதோ
　　வள்ளல் அதுபோல் வழங்கிடுவான்
எனக்குங் கொடுத்தான் எந்தை;இதை
　　இச்சிக் கின்றாய்! இனிப்போடே
உனக்குங் கொடுத்தேன்; மகிழ்'என்றே
　　உருவோ டென்முன் வருவாயேல்
கனக்கும் பாவச் சுமைகழலும்
　　கண்ணே ரமணா வருவாயே.

171. கடத்திச் சென்று கருணையினால்
　　கண்முன் பிரியாக் காதலனாய்
அடத்திற் செய்தான் உன்னைகுரு
　　அருணா சலநின் னப்பா!நின்
இடத்திற் செய்த தைையப்பா
　　எனக்குஞ் செய்தாய் என்பதைநீ
நடத்திக் காட்டி என்கண்முன்
　　ரமணா ரமணா வருவாயே.

172. மங்கா திருக்குந் திருவண்ணு
மலையைக் காண வருமாறே
அங்கே யழைத்தான் அருணேசன்
அதுபோல் ‘நீவா அரு’கென்றே
எங்கே யழைப்பா யாயினுமென்
இறைவா உடனே எழுந்தோடி
அங்கே வருவேன் இடஞ்சொல்லி
அழைக்க ரமணு வருவாயே.

173. ஆவின் கன்றின் அழைப்பால்தாய்
அணைமா றடியேன் ஆசையுடன்
நாவொன் றிடஸ்ரீ ரமணுய
நமவென் றழைத்தேன் நல்லுடலைச்
சாவென் றென்று சாராமுன்
தளர்வுப் புறுமுன் தயவால்‘நீ
வா’வென் றழைக்க என்கண்முன்
வருவாய் ரமணு வருவாயே.

174. வாழு முடலே மறையவநம்
மரணம் தடுக்க வல்லேனே?
பாழுங் கடந்த பரமாஎன்
பால்நீ வந்தால் பயமின்றி
ஊழுங் கடந்திவ் வுடல்வாழ்வின்
உளவுங் கடந்துன் னுட்கலந்து
வாழும் வகையே பெறுவேனே
வருவாய் ரமணு வருவாயே.

175. பார்க்கப் பேசப் பதமலரில்
படிந்து பணியப் பரம்பொருள்முன்
ஆர்க்கத் துதிக்க அடிக்கடிநான்
அளவ ளாவு மாசைமுற்றும்
தீர்க்கப் பெறுமுன் திருவுருவம்
த்யஜித்தா யருணைத் திருநகரில்
யார்க்கென் குறையை அறிவிப்பேன்
அதனல் ரமணு வருவாயே.

176. அருண சலத்தி லருட்குருவாய்
அமர்ந்த நாளில் அப்பாநின்
அருகா மையிலே பலரிருக்க
அடிமை நாயேன் ஆசையெலாம்
தருமா றரிதே தந்தாலும்
தனியாய்ப் பிறர்தான் சகிப்பாரோ?
வருமா றினியே வசதியுறும்
வருவாய் ரமண வருவாயே.

177. உருவைக் கண்ட துண்மையென
உலகைக் கொள்ளும் உளம்மாறி
அருமைப் பொருளாம் ஆன்மாவே
அல்லால் ஒன்றும் அயலில்லாப்
பெருமை யுணரும் வரைஎன்முன்
பெருமான் உருவோ டெழுந்தருளுங்
குருவைக் கண்டிங் குடன்வாழக்
குறித்தேன் ரமண வருவாயே.

178. கட்டுக் கடங்காக் கருணையுடன்
கண்முன் வருவாய் கடையேனை
விட்டுப் பிரியாய் வினையொன்றும்
விளைக்க என்னை விடமாட்டாய்
அட்டுக் கொடுப்பாய் அருளமுதம்
என்றே யடங்கா ஆசைவலைப்
பட்டுப் பாடிப் பரிதவித்தேன்
பரமே ரமண வருவாயே.

179. கண்முன் னிருப்பாய் செய்தொழிலில்
கைமுன் னிருப்பாய் கனிவால்யான்
உண்முன் னிருப்பாய் அயர்ந்துதுயில்
உறுமுன் னிருப்பாய் உதித்தெண்ணம்
எண்முன் னிருப்பாய் எப்போதும்
என்முன் னிருப்பாய் எனவேங்கிப்
பண்முன் னழைத்தேன் பகவானே
பரிவின் ரமண வருவாயே.

180. வினையைத் தீர்ப்பாய், வேருக்கி
மெய்யைப் பொய்யாய் மிளிர்விப்பாய்,
தனையைக் காப்பாய், தகவெல்லாம்
தருவாய், எல்லாச் சமயத்தும்
அனையைப் போல்வாய், அன்னையிலும்
அரிய கருணை யளிப்பாயென்
றுனையிப் புவியிற் பெறவாசை
உடையேன் ரமணா வருவாயே.

181. தடுமாற் றத்தால் தகாதனவா
தகவா வென்ப தறியாமல்
கடுமாற் றங்கொள் கடையேனைக்
கண்முன் னிருந்து கதிகாட்டி
விடுமாற் றலுளான் நீசெய்யா
விடிலென் செய்வேன்? வினைதோய்ந்த
வடுமாற் றிடநீ மனமிரங்கி
வருவாய் ரமணா வருவாயே.

182. உடைந்த உள்ளம் உறுதியுற
உள்ள பொருளின் உண்மைபெறக்
கடைந்த தீம்பாற் கடலமுதாய்
கருணை யால்நீ யிவ்வுலகில்
அடைந்த உருவைப் பிறகொருகால்
அடைத லரிதோ இதுபோல்முன்
நடந்த திலையோ என்னுசை
ரமணா ரமணா வருவாயே.

183. உடலை நானென் றுணர்போதென்
உடையான் உருவோ டில்லாமல்
விடலோ தகுமிவ் விதமென்னை
வெறுத்தால் இறைவா மிகுகருணைக்
கடலே கடையேன் கரைசேரக்
கடவே னோ?எங் கடைவேனோ?
உடலோ டுருவோ டுனைக்காட்டி
உதவ ரமணா வருவாயே.

184. செய்யத் தகுந்த தெது?செய்யா
திருக்கத் தகுந்த தெதுவென்றே
உய்யத் தகுந்த நெறியையுணர்ந்
தூன்றி நிற்க அறியேன்முன்
கையிற் கனியாய் நீயிருந்து
கடுகும் பிறழாக் கதிகாட்டிச்
'செய்யீ தகல்வா யிது'வென்றே
செப்ப ரமணா வருவாயே.

185. ஒன்றை எண்ண ஒருப்படுமுன்
உயிரே நீஎன் னுள்ளறிந்து
நன்றை நினைக்க நவைநீங்க
நடத்தித் தரவே வேண்டுமலால்
என்றைக் கப்பா யானியற்ற
வியலும் இயலா ததனால்நீ
இன்றைக் கனுகி எனைக்காக்க
இணங்கி ரமணா வருவாயே.

186. புரையைப் புரியப் புகுமுன்னே
புரையா? அலவா? எனப்புரியா
துரைஎண் செயல்செய் துறுவேனை
உறுமுன் னறிமா றுருவோடு
கரைநின் றுரைக்க வரவேண்டும்
கண்கா திவையாற் கண்டுன்னைத்
தரைமேற் புரையாத் தவமாரத்
தயைசெய் ரமணா வருவாயே.

187. 'இதுவோர் குற்றம்! அதுவொன்றும்!
இன்னொன் றுண்டிங் கினிமேலும்
புதுமா றன குறைசெய்தாற்
பொறுப்பே னல்லேன்!' என்றெல்லாம்
எதுவொன் றேனு மியலேன்பால்
இறைவா நீயு மிசைப்பாயோ?
அதுவோ சரி?யா னவைதீர
அருள்வாய் ரமணா வருவாயே.

188. குற்றங் கருதிக் கொள்வாயேல்
கொடியே னுய்தற் குறுகாலம்
மற்றெங் கூழி வரிசையெலாம்
மறைந்து மண்ணுகா தையோ நின்
கொற்றங் கருணை கொண்டென்பால்
குறைவா ராத குணமீயச்
சற்றிங் கெழுந்து வரவேண்டும்
சகுண ரமணு வருவாயே.

189. பதைத்துப் பதைத்துப் பலகாலும்
பாவந் தீரும் பயனின்றேல்
சிதைக்க உடலைச் சிந்திப்பேன்
செயல்வே றறியாச் சிறுமதியால்
இதைக்கண் ணுற்று மிரங்கார்போல்
இன்னும் நீவந் திலையென்றால்
எதைக்கண் ணுற்றெங் கேனிருப்பேன்
இறைவா ரமணு வருவாயே.

190. தினமுந் தினமும் முயன்றாலும்
தீமை விலக்கிச் செயங்கொள்ள
மனமும் உடலும் வலிவில்லை
மாய மொழிக்க வல்லவநீ
இனமும் வருவாய் இவைதீரும்
என்றே யிருக்கு மெளியேன்மேல்
சினமுங் கொண்டு விடுவாயோ
தேவா ரமணு வருவாயே.

191. கோடிப் பிறவி கொண்டாலும்
குறையில் லாத குணவாழ்வைச்
சூடிச் சிறக்க வியலேன்நீ
துணைவந் தன்றித் துயராலே
வாடிக் கெடுவேன் பிழையெல்லாம்
மன்னித் தருளி மகனென்றே
நாடித் தயவால் குருநாத
ரமணு ரமணு வருவாயே.

192. அறமே நிலைத்த பெரியோர்முன்
அப்பா நீவந் ததனாலே
பெறுமோர் பயனென்? பிழைதீரப்
பெரிது மியலாப் பிணியேன்முன்
திறமே பெருகத் திருவுருவில்
தெரிய வந்தால் தீவினைநோய்
மறமே யகலும்; பயனுகும்!
வருவாய் ரமணா வருவாயே.

193. கெட்டுக் கழிந்து கிருமியெனக்
கிடக்கும் பொருளை யருட்கையால்
தொட்டுச் சிறந்த சூரியனாய்ச்
சொலிக்கச் செய்யுஞ் சுயவலிமை
மட்டுக் கடங்கா வகைநிரம்பி
வழியும் பெருமா னேநீஎன்
மட்டுக் கிரங்கா மனமேனோ
வருவாய் ரமணா வருவாயே.

194. புல்லைக் கொண்டு மகாமேரு
புரட்டித் தள்ளும் போராண்மை
வல்லை, நீஎன் மனத்தினையுன்
வசமாய்ச் செய்ய மாட்டாயோ?
எல்லைக் கடங்கா இருநிதியம்
ஈயும் வள்ளல் எனைக்கண்டால்
'இல்லை' கூற எண்ணுவதோ
என்முன் ரமணா வருவாயே.

195. சாரு மடியேன் தட்டறநீ
தயவு செய்யத் தாமதித்தால்
யாரும் சிரிப்பர்! அவமானத்
தழுந்திக் கண்கள் அடங்காத
நீரும் பெருக்க நிலைகுலைவேன்
நீயுஞ் சகித்தால் நெறியாமோ?
தீரும் படியென் பேராசை
தெய்வ ரமணா வருவாயே.

196. ‘கலக்க மொழிக்குங் கண்ணுடையான்
கருணைக் கடவுள் திருவண்ணு
மலைக்க ணிருக்கும் ரமணேசன்
வருவார் பாவ மறச்செய்தான்
நிலைக்க வைத்தான்’ என்றுலகம்
நேரிற் கண்டிங் குரைத்ததைநீ
விலக்க மறுக்க வெண்ணுதே
விரைவாய் ரமணு வருவாயே.

197. கண்டு பேசிக் கடவுளடிக்
கைதொட் டேத்திக் களிப்பதெலாம்
பண்டைக் காலப் பேச்சின்று
பலிக்கா தென்றே பாருள்ளார்
தொண்டை கிழியப் பரிகசிக்கும்
சொல்லைப் பொய்யாய்த் தொலைத்திடஎன்
னண்டைக் கருளால் உருக்கொண்டென்
அப்பா ரமணு வருவாயே.

198. படைக்க வியலா யானுமுடல்
படைத்து வாழப் படுமேல்ஓர்
கடைக்கண் ணசைவால் உலகமெலாங்
கணிக்கும் பெருமான் உருக்கொள்ளத்
தடைக்கென் னுறுநின் தயவுண்டேல்
சகுண வடிவில் சாமியுனைக்
கிடைக்கப் பெறுவேன் அரிதல்ல
கேள்வா ரமணு வருவாயே.

199. ‘வருந்தி யழுமிவ் வறியான்முன்
வந்து தோன்றி யகலாமல்
இருந்து திருத்த வேண்டுமலால்
இவனுக் கினிநோய் வாராத
மருந்து பிறிதொன் றிலை’யென்றுன்
மனமே கருதி வரவேண்டும்
திருந்தி விடுவேன் றிருவருளால்
தெய்வ ரமணு வருவாயே.

200. செத்துக் கெடினுந் தீராத
திரள்வா சனைகள் தீர்வதைநின்
பித்துப் பிடித்தா லன்றிஎதால்
பெறுவேன்? உருவிற் பெருமானை
வைத்துக் கொண்டா லன்றியிது
வருமோ பித்த மதிகரித்துத்
தத்திப் புரள என்கண்முன்
தந்தாய் ரமணு வருவாயே.

201. பகைப்புக் கிடமாம் மனதாலே
பலவா றிழுக்கப் படுவேனைத்
திகைப்புக் கெடநீ ஸ்ரீரமணத்
தெய்வ வடிவில் திருவடியென்
சிகைப்புக் கிடவே செய்வாயேல்
சிறப்பே யன்றிச் சிறிதேனும்
நகைப்புக் கிடமே ததனுலே
ரமணு ரமணு வருவாயே.

(கலி விருத்தம்)

202. வருக ஸ்ரீரம ணுயந மோநம
வருக ஸ்ரீஅரு ணுசல மானவன்
வருக இப்புவி வந்தபெ ருந்தகை
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

203. வருக மானிட தேவ குருவுரு
வருக என்மன வாவற் பெரும்பொருள்
வருக தீவினை மாற்றுந் தவமலை
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

204. வருக வானரு ணுசல வாண்டகை
வருக வானரு ணுசல மைந்தனே
வருக வானரு ணுசல வாசியே
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

205. வருக ஸ்ரீஅரு ணுசல மையலாய்
வருக ஸ்ரீஅரு ணுசல வாழ்வினுய்
வருக ஸ்ரீஅரு ணுசல மன்னனே
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

206. வருக பேரரு ஞ்சல வாரணம்
வருக பேரரு ஞ்சல வள்ளலே
வருக பேரரு ஞ்சல வாரியே
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

207. வருக நீயரு ஞ்சல மந்திரம்
வருக நீயரு ஞ்சல மாதவம்
வருக நீயரு ஞ்சல மானவா
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

208. வருக பொன்னரு ஞ்சல பூங்கழால்
வருக பொன்னரு ஞ்சல பூ।ணை
வருக பொன்னரு ஞ்சல பூமணம்
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

209. வருக தொல்லரு ஞ்சல தோழனே
வருக தொல்லரு ஞ்சல சூரியா
வருக தொல்லரு ஞ்சல தூவெளி
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

210. வருக சீரரு ஞ்சல சித்தனே
வருக சீரரு ஞ்சல தெய்வமே
வருக சீரரு ஞ்சலச் சிங்கமே
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

211. வருக கண்ணரு ஞ்சலக் காதலே
வருக கண்ணரு ஞ்சலக் கண்மணீ
வருக கண்ணரு ஞ்சலக் காந்தமே
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

212. வருக வேஅரு ஞ்சல வேங்கடா
வருக வேஅரு ஞ்சல வித்தையே
வருக வேஅரு ஞ்சல வென்முனே
வருக ஸ்ரீரம ணேச வருகவே.

213. * தனமி லாமலோர் தாயுமி லாமலுண்
அனமி லாமலி ருப்பினு(ம்) நீஎன்றன்
முனமி லாமலி ருத்தல் சகிக்கவே
மனமி லேன்ரம ணேச வருகவே.

*தனம்: பொருட்செல்வம்.

214. அகவி லாசம டைந்தில ரையினும்
செகவி நாசம னம்பட நின்னருள்
முகவி லாசமென் கண்களின் முன்வரின்
மகிழ்வு ளேன்ரம ணேச வருகவே.

215. வாளு மாய்மனம் வாழ்வுகெ டுப்பதை
நாளு முன்னிந லிந்தன னென்முனே
ஆளு நாயக நீவரின் அன்றது
மாளு மேரம ணேச வருகவே.

216. தாழு மிப்பிற வித்தளை தந்தவென்
ஊழு மேபெரி தாயினு முண்முகம்
ஆழு மாறடி யேன்முன(ம்) நீவரின்
வாழு மோரம ணேச வருகவே.

217. தொல்ல வாகெடி னன்றித் துய்ரெலாம்
வெல்ல வாமுடி யும்பெரு வீரன்நீ
யல்ல வாவர வேண்டுமெ னைக்கொளும்
வல்ல வாரம ணேச வருகவே.

218. செலவி லேஒரு திக்கிலும் நின்னருள்
நிலவி லேயுறும் நிட்டை கிடைத்திடில்
நலமி லேனெனி னுங்கரு ணைகரா
வலுவி லேரம ணேச வருகவே.

219. கரண மின்றி கலந்த பெருஞ்சுகம்
சரண மேதரும் தந்தைநீ வந்திடில்;
திரண மாயுல காசைய றும்;பினே
மரண மேன்ரம ணேச வருகவே.

220. பார மேற்குமுன் பாதம லாமலே
சார மேதுமி லாமனஞ் சாய்க்கும்ஆ
தார மேதெனக் கென்மு(ன்)நீ தான்வர
வார மாய்ரம ணேச வருகவே.

221. சிரத்தை யாளரெத் தேவுரு வோடுனை
வரத்து திப்பரோ அவ்விதம் வந்தருட்
கரத்தி னுலவர் கண்சுனை தேக்குமோர்
வரத்த னேரம ணேச வருகவே.

222. இறக்கு மோமன மிப்பிறப் பேய,லால்
பிறக்கு மோவினும்? பேயிதைக் கொன்றேனே
உறக்க ணிக்குமோ உன்னருட் செம்பதம்
மறக்கு மோரம ணேச வருகவே.

223. கான மாய்வளர் காமநெ டும்பகை
ஈன மாயையெ ரித்தரு ளிச்சையால்
ஞான மாகுரு நீவர நாடினேன்
வான வாரம ணேச வருகவே.

224. பார னேகம்ப டுந்துயர் மாற்றவே
போர னேகம்பு ரிந்தருட் போகமே
சேர வேமயக் குஞ்சிவப் பூங்கணை
மார னேரம ணேச வருகவே.

225. தாயு மாயருட் டந்தையு மாயென்முன்
நீயு மேவர, நெஞ்சமுன் னுண்மையை
ஆய வேயத னுலகங் காரமும்
மாய வேரம ணேச வருகவே.

226. கட்டி லாதரு ளுசலக் காதலி
றெட்டி லேதரு மின்பமி ணைந்தனே
தொட்டி லேனுனைத் தோன்றிட வஞ்சமான்
மட்டி லேன்?ரம ணேச வருகவே.

227. கடக்கி லேன்பவம் கண்ணினி லின்றுகண்
டிடப்பெ றேனெனி லேயரு ளுசலன்
றடக்கை யால்அணைத் தன்பு தழுவிய
மடக்கொ டீரம ணேச வருகவே.

228. புயங்க ளென்சிரம் புல்லநீ போந்திடத்
தயங்கி லேயவித் தாரணி கண்டினும்
பயங்கொ ளும்பெரும் பாமரன் வீணிலே
மயங்கு வேன்ரம ணேச வருகவே.

229. நஞ்ச முங்கய வோர்களும் நாதனுன்
தஞ்ச முண்ணத் தயங்கிலர்! என்முனே
அஞ்ச லென்றுற வஞ்சுதி யோ?எ(ன்)ன
வஞ்ச மோரம ணேச வருகவே.

230. நடுவ னேகணில் நன்கிவண் வந்துநீ
விடுவை யேற்கைகு வித்து(ன்)னி ணைகழல்
தொடுவ னென்னகத் தொல்வினை வாசனை
வடுவ றும்ரம ணேச வருகவே.

231. காத லாகிக் கசிந்திடக் கற்றவர்க்
கீத லன்றியெ னக்கு(ம்)நீ யீவதுன்
போத மேயுரு வோடுமுன் போதராய்
மாத வாரம ணேச வருகவே.

232. செப்ப ருந்தமிழ்ச் சேவையர்க் கன்றியும்
தப்பு றுந்தமி ழேனையு மன்பிஞல்
ஒப்பி ஞய்பதம் ஒத்திடக் கண்களில்
அப்ப னேரம ணேச வருகவே.

233. பாத மென்றலை பட்டிடிற் பாவியேன்
ஏதம் வேதனை ஈயுமென் றேஇனும்
சோத னை?மனம் சோர்வது காண்;குரு
நாத னேரம ணேச வருகவே.

234. சுணங்க னன்னநான் தூய்மையில் வாழ்வினேன்
வணங்கக் கண்டுனே வந்துநீ நிற்கிலக்
கணந்தி ருந்திமெய்க் காதலால் வாழ்வருள்
மணங்கொ ளும்ரம ணேச வருகவே.

235. ஆண்பெ ணென்றபே தங்கொள சங்கியம்
பூண்ம னச்சிறைப் பூட்டற நின்னைமுன்
காண்ப தேவழி காணவ ராமலென்
மாண்பி தே?ரம ணேச வருகவே.

236. கலியு ளாழ்மனக் கானெரு மைக்கடா
பலிகொ ளாவிடிற் பாவியென் பண்ணுவேன்?
புலிவி லங்குரி போர்க்கு(ம்)நீ யன்றியார்
வலிவு ளார்ரம ணேச வருகவே.

237. அருகி லேயுரு வாயிருந் தன்னைபோல்
தருகி லாயெனில் தண்ணருள், தொல்வினை
கருகி லேன்கரு ணைக்கட லேமுனம்
வருக நீரம ணேச வருகவே.

238. பரவி ஞலருள் பண்ணுவை! நான்போலா
அரவி னஞ்சின னேனும் கந்தைவா(ழ்)
இரவு நாசமு மெய்துமென் முன்ன(ம்)நின்
வரவி ஞல்ரம ணேச வருகவே.

239. பாடி ஞர்வினை பாழ்படக் கங்கணம்
சூடி ஞய்கணிற் ரேன்றிடு வாயெனத்
தேடி நின்னையென் தீவினை சொல்லியே
வாடி னேன்ரம ணேச வருகவே.

240. போகு மோர்குணப் புன்மையெ லாம்?மனஞ்
சாகு மாறினி சற்குரு வென்முனும்
ஏகு மோ?வென தாசையின் றேநிறை
வாகு மோரம ணேச வருகவே.

241. ஆக மங்கள மேயரு ஞசலா
தேக மோடிவண் சேர்க;வென் றீவினை
வேக முங்கெட வென்னுளம் வென்றிகொள்
வாகை யாய்ரம ணேச வருகவே.

242. அம்பி லாலிய தாயரு ஞசலச்
செம்பி ராஞெடு சேர்ந்த திருவுரு
எம்பெ ருந்துணை யாய்வரு வாயென
நம்பி னேன்ரம ணேச வருகவே.

243. தந்தை யோடரு ஞசல சந்நிதி
வந்த பாதம லர்களென் கண்முனே
இந்த நாள்வர வேண்டுமென் றேங்கினேன்
எந்தை யேரம ணேச வருகவே.

244. வாச னைக்கடல் வற்றிட வற்றிடாப்
பாச முற்றுனைப் பார்த்திட வேண்டுமே
நூச னைத்துந்து டைத்தருள் தூண்டுவாய்
ஈச னேரம ணேச வருகவே.

245. துன்ப மேயொரு நாளுந் தொடர்ந்திடா
அன்பி னுலுனை யண்டுவர் போலவேன்
என்ப வச்சுவை என்சொல்வேன் என்னுயிர்
இன்ப மேரம ணேச வருகவே.

246. சென்று போயின ஜென்மமெ லாம்இருள்
தொன்று தொட்டது மின்னுந் தொலேந்தில
தென்று நீவர லன்றிது போமெனக்
கின்று நீரம ணேச வருகவே.

247. கட்ட மெங்குறு மேநின் கடைக்கணுல்
தொட்ட பின்னெனேத் தொட்டிடத் தோன்றுக
கட்ட மோசுக மோநீ கணிப்பதென்
இட்ட மேரம ணேச வருகவே.

248. அல்லே யேயறி யாவரு ஞுசலத்
தெல்லே யேவிடா நீயலால் ஏழையேன்
சொல்லே யேசெவி கொண்டுமுன் தோன்றுவார்
இல்லே யேரம ணேச வருகவே.

249. உன்மு னேயரு ஞுசலன் ஓகையால்
சொன்மு னேயிருந் தான்எனேச் சொந்தமாய்
தன்மு னேகொளல் தந்தைநின் றன்கடன்
என்மு னேரம ணேச வருகவே.

250. ஆகை யாலக லாவரு ஞுசலச்
சாகை யாய்சகு ணங்கொடெ னேத்தொடல்
மீகை யோ?அல! வேண்டலெ லாந்தரும்
ஈகை யேரம ணேச வருகவே.

251. மரங்க ளேழும ழித்தவ னின்றுரு
நரங்கொ ளுங்குரு நாதன்நீ! என்னிரு
கரங்க ளாற்ஞெடக் கண்ணுனேக் கண்டிட
இரங்கி யேரம ணேச வருகவே,

252. விடத்தி லேபடு வேன்முனம் வந்துநீ
நடத்தி ஞல்அத ஞற்பெறும் ஞானமெய்த்
திடத்தி லேயினித் தேர்ந்துநா ஞேய்வனுன்
இடத்தி லேரம ணேச வருகவே.

253. பொனற்க ழற்பதம் போந்துகாண் போதுதான்
மனக்கு றைகெட வாழ்வுனக் காகுமாம்
உனக்கு நானுண வாகிய பின்புமற்
றெனக்கெ ஞேரம ணேச வருகவே.

254. படாத பாடுறு பாமர நெஞ்சுனைத்
தொடாத தாற்சுகந் தோய்ந்தில தென்னைநீ
விடாது தோன்றிய ருட்சுவை மேல்விருந்
திடாத தேன்ரம ணேச வருகவே.

255. போக மேபுவ னங்கொளும் பொய்வினை
மோக மேகெட முன்னுனைக் காணநீ
தேக மோடுறு வாயெனைச் சின்மய
ஏக மேரம ணேச வருகவே.

256. ஆழ்ந்த றிந்தவ ராரரு ளுசலக்
காந்தை நீவரக் காணுவ தன்றிஏ
மாந்து போவதோ வள்ளல ருட்டிறம் ?
ஏந்த லேரம ணேச வருகவே.

257. இங்கெ ழுந்தரு ளாயெனி லென்மனக்
கங்கு லோய்ந்தகங் காண்பது கூடுமோ
எங்க ளுசையி சைந்திடா தேயொளித்
தெங்கு ளாய்ரம ணேச வருகவே.

258. பழுப்பு றுங்கனும் பாடிட நாதமு
தழுப்பு றுஞ்செவி சாய்த்திலை யோ?மறு
விழிப்பி லாவறி வின்துயில் விட்டெனை
எழுப்ப வேரம ணேச வருகவே.

259. பிணங்கி டந்தவா றென்னுடல் பின்பட
அணங்கு நாதனே டென்றுனை யண்டிடா
துணங்கி னேனெனை யுண்டிட வேயுளம்
இணங்கி யேரம ணேச வருகவே.

260. பார்க்க வேமுடி யுங்குரு பாதமென்
றாக்க மேயுளேன்; உள்ளபே ராசையோ
நீக்க மேயில, தின்றல நீண்டநாள்
ஏக்க மேரம ணேச வருகவே.

261. ஏன்று கொள்பவர் என்னையு மின்றுநின்
போன்ற பேரிலை பொய்யுல கத்திலே
நான்ற விப்பதை நன்கறி வாயெனை
ஈன்ற வாரம ணேச வருகவே.

262. சொச்ச பொன்னெனத் தூய்மையு ளோர்க்கலால்
இச்செ கத்துறுன் ஈசனென் பார்சொலால்
அச்ச மேனும டங்கில தாசைஎன்
இச்சை யேரம ணேச வருகவே.

263. அயலி லாமல கத்திலி ருப்பதால்
மயலெ லாங்கெட வந்திடு மென்றுநான்
பயமி லேன்பக வானருள் பண்ணிட
இயலு மேரம ணேச வருகவே.

264. தனிய னுக்கினே! தந்திரம் நன்றெனே
நனிபி டித்துந சுக்கிய ணைத்தருட்
கனித ரத்தடைக் காவலிங் காருளார்?
இனியெ னும்ரம ணேச வருகவே.

265. மதுமி குஞ்சின வாசையி ருப்பினும்
எதிரி னீவர வேயரு ளெண்ணமொன்
றிதுநி னைக்கிலெ னக்கென நின்றினி
எதுமி கும்?ரம ணேச வருகவே.

266. பாற்க முற்கணுற் பார்க்கநா னீவரின்
நாற்பு றத்தலை நாய்மனம் நாசமாய்த்
தோற்கு மன்றித் தொடர்ந்தினி யும்பிறப்
பேற்கு மோரம ணேச வருகவே.

267. வீட்டி யேதுயர் மேல்விரை வாருனைக்
காட்டி னும்மெவர் கண்ணும் அருட்டுணை
தேட்டி லேன்விதி தீட்டிய வென்றலை
ஏட்டி லேரம ணேச வருகவே.

268. அத்த நின்றுணை யண்டி யிலாமலே
மத்தி லேதயி ராயலை வேனைக்கண்
பொத்தி யாடல் பொருந்துவ தோபொழு
தித்தி லேரம ணேச வருகவே.

269. சச்சித் தின்பளித் தாண்டனை எண்ணிலா
இச்செ கத்துளார்க்(கு) என்செய்வ தென்றுளத்
தச்ச மோடமு மற்பனுன் மட்டுமே
எச்ச மோ?ரம ணேச வருகவே.

270. சேவை நின்று செழித்தவர் தம்மிடம்
போவை யாயினும் 'புன்மை யகற்றவே
தேவை யா'னெனச் செப்பினென் போன்றவர்க்
கீவை யேரம ணேச வருகவே.

271. அரியன் நீயெனி னும்மரு ளைசலா
தெரியு மேயுனைத் தீனருக் காகவே
உரிய னென்றுகண் டுய்யவா என்வினை
எரியு மேரம ணேச வருகவே.

272. ஆறி லாவழி யாயின ராயினும்
வேறி லாமல் விழுங்க விரைந்து நீ
மாறி லாதருள் கின்ற வழக்கினுக்
கீறி லாரம ணேச வருகவே.

273. இட்ட மோடுகண் ணென்முனீ யேவர
மட்டு மேயிசை வாயெனில் மாயையில்
கட்டு மாவகங் கார நெருப்பெனை
எட்டு மோரம ணேச வருகவே.

274. தக்க தோர்துணை தாரணி வாழ்வினில்
மிக்க நீயலால் வேறெவ ரேதகும்
மக்க ளாரு மடிந்தழி வாரதால்
இக்க ணம்ரம ணேச வருகவே.

275. செத்தி டற்குளந் தேசிக நின்னுரு
வத்தி னலலால் மற்றெத னல்வரும்
இத்தி னம்இசை யாவிடில் இன்னும்நாள்
எத்த னைரம ணேச வருகவே.

276. கண்ணி னுனைக் கண்டிடு வேனெனில்
புண்ணி யாபுரை யாவையும் போய்விடும்
எண்ண முற்றுமி தேவழி யென்றுதான்
எண்ணி னேன்ரம ணேச வருகவே.

277. அல்லை யேயறி யாதநின் னாருட்
கெல்லை யேதெளி யேன்முன மேகவும்
வல்லை நீவர வேண்டுமென் றெண்ணமே
இல்லை யோரம ணேச வருகவே.

278. நாட்டு லாம்பொருள் நன்மையன் றென்றவை
தேட்டி லேன்;உனைத் தேடினேன்; நீயுருக்
காட்டி லாயி(ன்)னும்; காணுந் தகைமையும்
ஈட்டி லேன்ரம ணேச வருகவே.

279. முன்செய் தீவினை வாசனை மோகமோ
கொஞ்ச மேனுங் குறைந்தில துன்னருள்
முன்செ யாவிடில் மூடனேன் உய்யவே
றென்செய் வேன்ரம ணேச வருகவே.

280. ஆவ லாயுனைக் காண அருள்செயின்
பாவ மேயறும்; பாவ முறுதமெய்க்
காவ லாயுன் கருத்துபோ லென்றனை
ஏவ நீரம ணேச வருகவே.

281. காம நாச கடைக்கண வேங்கட
ராம நீவரு நாள்திரு நாளெனக்
காமெ னக்குள கந்தைய ழித்திடும்
ஏம னேரம ணேச வருகவே.

282. இப்பி றப்பெனக் கீந்தனை; ஏன்?என
தப்ப னற்பத மார்ந்தரு ளப்பிலே
யுப்பெ னக்கரை வுண்டிட வன்றிவே
றெப்ப யன்?ரம ணேச வருகவே.

283. பேற னேகம் பெறற்குளம் பேறுமேல்
ஆறி லாமல கன்றிடு மையகோ!
மாற நீவிடேல் என்மன வாகன
ஏற னேரம ணேச வருகவே.

284. மகத்த ளுயிரம் வாழ்சுக மன்றுநின்
முகத்தில் மோகன மோன முறுவலே
செகத்தி லேபெறத் தேடினேன் தேகமோ
டிகத்தி லேரம ணேச வருகவே.

285. பந்த வாசனைப் பாழெரி பட்டுயிர்
வெந்து போனவர் வெம்மை யறக்குளிர்
தந்து மெய்யகச் சாந்தி பெருக்கிடும்
இந்து நீரம ணேச வருகவே.

286. அடுக்கு றும்பிற விக்கயர்ந் தேஉளம்
நடுக்கு வேளையிந் நாளில்வந் துற்றுகை
கொடுக்க வும்பவக் கோதறத் தூக்கிமேல்
எடுக்க வும்ரம ணேச வருகவே.

287. சிறக்கு முன்றிருச் சேவடி கண்டிடில்
துறக்கல் மெய்யுறுந் தொல்வினை யாசையால்
பிறக்கும் நெஞ்சு பிழைப்பற வோயும்'நான்'
இறக்கு மேரம ணேச வருகவே.

288. விளைப்ப யிர்க்களை மேவ மெலிந்தவா(று)
உளைப்ப தோ?வர நீயொளித் தாடிலுன்
பிளைப்பு லப்பகை பேர்வலி கண்டயர்ந்
திளைப்ப தோரம ணேச வருகவே.

289. மனச்சி றப்புற நின்னருள் வாய்த்தவர்
எனக்குங் கண்முனி யேகிடி லீனமாய்
நினைத்தி டார்'அரு ணேச னருட்டிறம்'
எனச்சொல் வார்ரம ணேச வருகவே.

290. முதற்ப ரம்பொருள் மூர்த்தியுன் பொன்முகம்
பதக்க முல்பெறப் பற்பல நாட்செலின்
வதக்கு மூப்புசா வந்து வதைக்குமே
இதற்கு ளேரம ணேச வருகவே.

291. சுரச மூகசு கங்களுந் தூமலர்
அரசி னின்பமும் அற்பமென் றுர்பெறும்
கரசு கங்கள் கடைந்து பிழிந்ததோர்
இரச மேரம ணேச வருகவே.

292. கொள்ளு முன்னுருக் கொண்டுகண் கண்டிட
வள்ள லுன்மனம் வந்தில தேலிருள்
துள்ளு மிப்புவி 'தூ'வென என்னையே
எள்ளு மேரம ணேச வருகவே.

293. மகிழ்ந்து நீவரா மையிருள் நாளிலும்
நெகிழ்ந்து டைந்தவென் னெஞ்சுநா நின்னையே
புகழ்ந்து வாழ்த்திப் புலம்பிய தன்றிவே
றிகழ்ந்த தோரம ணேச வருகவே.

294. ‘நசைம யங்குள(ம்) நாயினன், நாம்புவி
மிசையு றும்பொழு தென்செய்தா’ னென்றுநீ
அசைவ தின்றிய மர்ந்தனை யோ?அன்றி
இசைவை யோ?ரம ணேச வருகவே.

295. திருப்ப தஞ்சிரஞ் சேரவென் கண்முனே
ஒருப்ப டாவிடி லுள்ளம்மெய் யுன்னுமோ?
விருப்பு ரைத்தமு வேன்செவி மேற்கொளா
திருப்ப தேன்ரம ணேச வருகவே.

296. தனுந்த ளர்ந்திடுஞ் சன்மமெ டுக்கவே
மனம்மு னைந்திடும், மாறறி யாதவென்
முனும்ப வித்திர மூர்த்தி வராவிடில்
இனும்பொ றேன்ரம ணேச வருகவே.

297. தரந்த குந்தவ னென்றெனைச் சாற்றிலேன்
பரந்த நின்னருட் பண்பினி ரங்கியே
வரந்த ரும்படி வாழ்த்தி வணங்கிநான்
இரந்த னன்ரம ணேச வருகவே.

298. பொலாத வஞ்சனெ னப்புறம் போக்கில்நீ
யலாம லார்வரு வாரெனக் காகவே
எலாம்வ லாயிது போன்முனி யற்றிய
திலாத தோரம ணேச வருகவே.

299. புரண்டி டாதொரு புல்லுமுன் போக்கலால்
மருண்ட ழிந்திட வைப்பினும் நின்னருள்!
திரண்டு வந்திடச் செய்யினும் நின்னருள்!
இரண்டும் நீரம ணேச வருகவே.

300. என்ப ரங்களை ஏற்பது மின்றுதொட்
டன்ப ரெண்களி லாம்படிச் சேர்ப்பதும்
உன்ப ரம்பொறுப் புன்னடிக் கன்றிநான்
என்ப தோ?ரம ணேச வருகவே.

301. காலு மேலுடற் கைதலை கண்புலைத்
தோலு மாயகந் தோற்றுமேல் நின்மகன்
போலு மேயிலை! பொய்யறப் போதரல்
ஏலு மேரம ணேச வருகவே.

302. பொங்கு மாமனப் போதம டங்கநீ
அங்கு சத்தரு ளாலடி யேன்முனே
இங்கெ ழுந்தரு ளிசர்க ளிசனே
எங்கு ரூஉரம ணேச வருகவே.

303. தனிக்கி டக்குமென் றன்பரி தாபம்முள்
நுனிக்க நிந்து'நீ நோயகல்' என்றுநீ
இனிக்க டைக்கணி ருத்திடில் ஏழைவாழ்
வினிக்கு மேரம ணேச வருகவே.

304. ஏம வாசனை யேகெட நின்னருட்
காம வாசனை கட்டடங் காதெழச்
சாம மேயிது; தாமத மேனருள்
நாம மேரம ணேச வருகவே.

305. மாய காலம கன்று விடிந்தருள்
பாய காவலன் உன்னையான் பார்ப்பனோ?
தாய காதயை யேயுரு வாயவென்
நாய காரம ணேச வருகவே.

306. 'குமண னேகொடுத் தான்கொடை? கொல்வினைச்
சுமையெ லாமெடுத் தேன்;கொடுத் தேனெனை;
சுமண மாயெனைக் காண்'எனத் தோன்றுவாய்
ரமண மேரம ணேச வருகவே.

(எழுசீர் விருத்தம்)

307. வருக தேவ தேவ ரமண மான நாமம் வருகவே
வருக தேவ தேவ ஞான மன்ன ரமண வருகவே
வருக தேவ தேவ னருண மலைய ரமண வருகவே
வருக தேவ ரமண தேவ வருக வருக வருகவே.

308. அருண வசல குருவி னடிமை யான ரமணன் வருகவே
அருண வசல போத முண்ட அங்க ணனன் வருகவே
அருண வசல முற்ப வித்த அரும ருந்து வருகவே
அருண வசல சரச வின்ப ரமண வருக வருகவே.

309. அருண வசல வாவி தந்த அக்ஷ யத்தான் வருகவே
அருண வசல கடலெ டுத்த ரமண முத்தம் வருகவே
அருண வசல மன்றி யொன்று மறிகி லாதான் வருகவே
அருண வசல வருள்வ டித்த ரமண வடிவம் வருகவே.

310. அருண வசலங் கிரியன் றுயிர ருந்து மென்றோன் வருகவே
அருண வசலம் வலமு றும்பே ராவ லாளன் வருகவே
அருண வசல கூட மம்ப லத்து ரைத்தோன் வருகவே
அருண வசல மொழியெண் ணுக்கை யான ரமணன்
[வருகவே.

311. அருண வசல வுருவி லருவ றிந்த ஞானி வருகவே
அருண வசல வுலக விதய மமரு மான்மா வருகவே
அருண வசல அமுதி லூறி யமிழுங் கனியே வருகவே
அருண வசல சிவசொ ரூப ரமண வருக வருகவே.

312. அருண வசல வறமு ரைத்த ஐயன் ரமணன் வருகவே
அருண வசல பொருளு ரைத்த ஆதி ரமணன் வருகவே
அருண வசல னின்ப முற்ற அன்னை ரமணன் வருகவே
அருண வசல வீட ணைந்த ரமண வருக வகருவே.

313. அருண வசல முடிய ணிந்த அறிவு மதியம் வருகவே
அருண வசல பந்த முற்ற ழிந்த சிந்தை வருகவே
அருண வசல தென்பு றத்தி னமிர்த கலசம் வருகவே
அருண வசல அன்பெ னும்பே ராசை யாளன் வருகவே.

314. அருண வசல தேவ நகரி னரசர்க் கரசன் வருகவே
அருண வசல நாம மதுர வமிர்த வசனன் வருகவே
அருண வசலம் மனித வடிவி லவத ரித்தோன் வருகவே
அருண வசல மகமென் றோங்கும் ரமண வருக வருகவே.

315. அருண வசல மண்டி வந்த ரமண முகிலும் வருகவே
அருண வசல மமுத முண்ணும் ஆசை வாயன் வருகவே
அருண வசல மெண்ணி மாய்ந்த அடிக ளண்ணல்
[வருகவே
அருண வசல உருவ மான ரமண வருக வருகவே.

316. அருண வசல புதல்வ ஞன அமர நாதன் வருகவே
அருண வசல பெரிய னடியி லமரு மலரும் வருகவே
அருண வசலம் நின்று திக்கும் அருண தேசன் வருகவே
அருண வசல விமல வசல ரமண வசல வருகவே.

317. அருண வசல நாம மாந்தும் அளியி னரசு வருகவே
அருண வசல அமல கமல மதுவி னினிமை வருகவே
அருண வசல கிரண மணியி னழகி னுருவம் வருகவே
அருண வசல ரமண ரமணம் வருக வருக வருகவே.

318. கண்ணி மைக்கு முன்னி ருந்த காய மிங்கு காணுமே
எண்ணி யெண்ணி யிங்கி ருந்து மென்ன செய்ய வியலுமே
புண்ணி யப்பி ரானெ முந்து போந்த லாமற் புக்கிடம்
நண்ணி லேனென் கண்முன் காண ஞான ரமண
[வருகவே.

319. போது போக வேதே காத்ம புத்தி போவ தில்லையே
ஏது செய்வ தாகு மேழை என்வ லத்தி லெந்தையே?
நேதி நேதி யென்ற வுண்மை நீயெ முந்து வந்தலால்
தீது போக லாகு மோகண் தெரிய ரமண வருகவே.

320. மதியி ழந்திவ் வுலக வாழ்வை வாழ வின்னம் வைப்பதோ
பொதியு ழந்த கழுதை யன்ன புனித மின்றி சாவதோ
கதியி ழந்து போகு மாறென் கன்ம மேனும் கடவுளால்
விதிய ழிந்து போக என்முன் விரைவில் ரமண வருகவே.

321. அத்த னேயிங் குருவில் வந்த அருண ஞான வழ்கனே
எத்த னைப்போ தேங்கி யுன்னை யிங்கு காண்ப தறிகிலேன்
சித்த முற்ற புரைகள் தீர தெய்வ மென்முன் திருவுரு
வத்தெ முந்து வருதல் வேண்டும் வருக ரமண வருகவே.

322. நானு நீயு மன்றி யிந்த ஞால மீதி லொன்றுமே
ஊனு மேனு முணர்கி லாத உண்மை யன்பை யூட்டவே
தானு வந்து வந்தென் கண்முன் தந்தை நின்ற போதுதான்
நானு முண்மை பெறுத லாகும் ரமண வருக வருகவே.

323. தூக்க முற்ற சொப்ப னத்தில் தோன்ற வுந்து ணிந்திலே
ஆக்க முற்ற நனவிற் காணு மாசை பூர்த்தி யாகுமோ
ஏக்க முற்ற என்னை நீயி ரக்க மின்றி ஏய்ப்பதோ
காக்க நீயெ முந்தென் கண்முன் காரண ரமண வருகவே.

324. தூல வடிவ மோடு கண்ணில் தோன்றி பண்டு தொழுதவர்
சீல முண்டு வாழ வேநீ செய்த தில்லை யோஇது
கால மல்ல வோம கிழ்ந்து காணக் கருணை செய்யும்நின்
போல வல்ல ராரெ னக்கிப் போது ரமண வருகவே.

325. ஆறு கந்த நீரும் பூவ ருச்ச னைக்கு மனலிலே
நாறு நெய்யி னோம மாநா னுவி தம்செய் பூசைகை
மாறு வேண்டி டாதி ரங்கி வரவி ரங்கும் நீயலால்
வேறு தெய்வ மேது ஞான வீர ரமண வருகவே.

326. நல்ல வர்க்கு வரம ளிக்க நாட்டி லுண்டு மூர்த்திகள்
அல்ல வர்க்கும் நரகு மீவர் அவர்கள் கடமை யன்னதே
புல்ல வர்க்கும் ஞான மீய வேபு னைந்த கங்கணம்
வல்ல வர்க்கும் வல்ல நின்கை வாழும் ரமண வருகவே.

327. நோயி லார்க்கு டல்கொ ழுக்க நூறு வைத்யர் சொல்வரே
பாயி லாக்கை யிட்டு பாதி பட்டு யிர்ப் பதைக்குமென்
மாய வாழ்க்கை கண்டி ரங்கி வருவ தெந்த தெய்வம்நீ
தாயெ னுசான் றந்தை தெய்வம் சர்வம் ரமண வருகவே.

328. என்ன செய்த போதுஞ் சிந்தை என்வ சத்தி லாகிடா
தின்ன மோடி யாடும் விந்தை என்ன சொல்வ தறிகிலேன்
மன்னர் மன்ன னுன ரமண வல்ல மைக்க லால்மனம்
சொன்ன வாற டங்கு மோமெய்ச் சோதி ரமண வருகவே.

329. குணமி லாத வாழ்வி லின்பம் கூடு மோபூங் கொத்திலே
மணமி லாத தென்னில் நல்ல மனிதர் ஆவல் கொள்வரோ
குணமெ னக்குள் ஓங்க நீகு றிக்க வேண்டும் கொஞ்சமும்
எணமி லாதி ருப்பை யோஎன் இறைவ ரமண வருகவே.

330. சேர்க்கை எந்த வாறவ் வாறு சேர்கு ணங்க ளென்பரே
மார்க்க பந்து ரமண ஞான மன்ன நின்ம லர்க்கழற்
பார்க்க வேறு சேர்க்கை பரம பாவ னத்த தேதருள்
வார்க்க வேயெ னக்கி ரங்கி வருக ரமண வருகவே.

331. நெஞ்ச முள்ள நன்மை தீமை நீயெ லாம றிந்துளாய்
தஞ்ச முன்னை யேய டைந்தும் தந்தை நீகண் டின்னமும்
கொஞ்ச மேனும் நெஞ்சி லோங்கும் கோது நீக்க வில்லையே
அஞ்ச லென்று னபய மீவை ஆதி ரமண வருகவே.

332. யாவு நீந டத்து முண்மை யான றிந்த போதிலும்
தாவு நெஞ்ச முள்ள டங்கி சற்று மோய்வ தில்லையே
ஏவு வானெ முந்து நெஞ்சை ஏவி ஞல லாலதைப்
பாவி யேன டக்கி லேன்கண் பார்க்க ரமண வருகவே.

333. நின்னைக் கொண்டேன் நெஞ்சின் மாயம் நீக்க எண்ணி
[நிற்குமென்
றன்னைக் கண்டு நீயி ரங்கி டாமற் றள்ளி விட்டிடில்
என்னைக் கண்டிவ் வுலக மின்னு மெள்ளு மேள னைப்பெறும்
அன்னைக் கின்னும் அதிக மான அன்பு ரமண வருகவே.

334. அச்ச மற்று வாழ வேண்டி லச்ச மற்ற துணைவனை
இச்ச கத்தி லடைய வேண்டு மென்ப ருன்னை துணைவனுய்
நிச்ச யித்தே னேனு மென்னை நீயு மேற்க வேண்டுமே
துச்ச மற்று வாழத் தெய்வத் துணைவ ரமண வருகவே.

335. கால்வி லங்கு நீங்கி லன்றிக் கண்ணி ருந்தும் பயனிலை
மால்வி லங்கெ னக்கு வாய்த்த மனவி லங்கு நீக்குமுன்
மேல்வி ளங்கு ஞானம் வீண்வி யர்த்த மான தையகோ
கால்வி லங்கு நீக்க நீயென் கண்முன் ரமண வருகவே.

336. ஏத முற்றெ லாவி லும்மி குத்த கந்தை யானதற்
போத முற்ற ழிந்து போக பூர ணப்பி ரானருட்
பாத மட்டும் வல்ல தன்றி பாரில் வல்ல துள்ளதோ
நாத னிட்ட மோட ருள்க ரமண ரமண வருகவே.

337. கண்ணில் லாத என்னை யுன்றன் கண்ணி னூற்பி டித்தபின்
மண்ணி லுள்ள மாய மேதும் வந்து சூழ வின்றுநீ
பண்ணி னூலென் பண்ணு வேன்ப தார விந்த மேசரண்
அண்ண லேய னைதை யென்னை யாண்ட ரமண வருகவே.

338. காடு வெட்டி பூமி கொத்தி காவல் வேலி கட்டிமெய்ப்
பாடு பட்டுப் பயிர்வி ளைக்க பலமெ னக்கு ளில்லையே!
கேடு வெட்டி பண்ப டுத்துங் கிரியை நீபு ரிந்தெனை
ஈடு கட்டி வாழ வைக்க எண்ணி ரமண வருகவே.

339. இட்ட தொன்றெ டுத்து ணத்தெ ரிந்தி டாவி ளம்பிளைக்
குட்செ லும்ப டிப்பி சைந்திங் கூட்டு கின்ற அன்னைபோல்
கட்ட மாயி னும்பொ றுத்துக் கைவி டாம லேயெனக்
கட்ட ஞான வமுத ளிக்க அன்னை ரமண வருகவே.

340. எந்த கர்ம மென்று செய்தல் என்று நீக்க லிங்குநான்
எந்த போதி லென்ன பேச லெங்கு மௌன மேகொளல்
எந்த கால மெந்த தேசத் தெந்த வாறி ருத்தலென்
றிந்த பார மேவ கிக்க எந்தை ரமண வருகவே.

341. தீன ராயு னூற்பு ரந்து தீமை தீர்ந்த பேர்களுள்
நானு மொருவ னுகி லென்ன நட்ட மாகிப் போகுமோ
ஏனி னுங்க லக்க முற்ற வென்றன் சிந்தை தீமைபோய்
ஞான மோனம் நண்ண வில்லை நாத ரமண வருகவே.

342. தந்தை நீபல் லூழி காலந் தாம தஞ்செய் தாலுமே
சிந்தை மாயந் தீர்க்க வோர்சஞ் சீவி வேறுென் றில்லையே
பிந்தி செய்ய வல்ல னஃதை முந்தி செய்தல் பெரியதோ
இந்த நாளெ னைப்பு ரக்க என்முன் ரமண வருகவே.

343. என்று செய்வ தேனு முன்னை யின்றி யாரு மில்லையேல்
அன்று செய்யு நீயி ரங்கி யின்று செய்த லரியதோ
ஒன்று சொல்வன் கேட்ட ருள்க வென்று மேநீ [யொன்றுதான்
வென்று தருதல் வேண்டு மென்னை வீர ரமண வருகவே.

344. வேத மோதுன் பாதம் நோக வேதி னம்பு லம்பியென்
னேத மோதி யோதி நெஞ்ச மேங்கி நிற்கு மென்னுடன்
வாத மேது செய்து லாபம் வாய்க்குங் கருணை வைத்துநின்
பாத மேயென் கண்கள் காண பரம ரமண வருகவே.

345. வான வேடு வழிய வேவ ரைந்தென் பாப வகையெலாம்
போன நாள்க ணக்கெ டுக்கில் போக்கெ னக்கு
[நரகில்தான்
ஆன தால்க ணக்கி லாத வருளி னுலெ னைப்புரந்
தீன வாழ்வு தீர்த்த ணைக்க எந்தை ரமண வருகவே.

346. செல்லு நாளெ லாம்ப வஞ்செ ழித்த நாட்க ளாகவே
செல்லு மாறு நீயி ருந்துஞ் செய்வ தோ?என் தீமைநீ
வெல்லு மாறே ரெண்ண மேனு மில்லை யோவி
[னைச்சுவைக்
கல்ல வோநின் வெற்றி செல்லு மாத்ம ரமண வருகவே.

347. முடிவி லாம லென்னு ளோங்கு மூர்க்க வன்மை
[கண்டுநான்
விடியு முன்ன ரோங்கு மிருளின் வேக மீதெ தன்
[றெண்ணிநெஞ்
சொடித லின்றி யுன்னை நம்பி உயிர்த ரித்து வாழ்வுளேன்
அடிய னெண்ண முண்மை யாக்கி யருள ரமண வருகவே.

348. தாழ்ந்த சிந்தை கோடி கோடி தானெ ழுந்த போதிலும்
சூழ்ந்து மாயை வெய்யில் வாட்டும் சூடு கண்ட நாளிலும்
ஆழ்ந்த சிந்தை யாலெ னக்க டைக்க லங்கொ டுத்தநீ
வீழ்ந்து மாய வேவி டாமல் விரைவில் ரமண வருகவே.

349. தப்பெ லாந்தி ரண்டெ ழுந்து தானெ திர்ந்த போதிலும்
அப்ப நீயி ருக்கி றுயென் றச்ச மின்றி வாழ்கிறேன்!
எப்ப டிப்பி ழைப்ப னேயெ லாப்பு றத்தும் பகைவரேல்
இப்ப டிப்ப தைப்ப தாற என்முன் ரமண வருகவே.

350. ஆலை வாய்க்க ரும்பி னுவி யாசை வாய ரைத்துதற்
காலு மாய்க்க வேயெ முந்த கால ஞம கந்தைநின்
*ஓலை வாய்க்கி டந்த செய்தி உணரு மாகி லேயினி
மேலை யாட்சி விட்டி றக்கும் வேங்கை ரமண வருகவே.

351. வந்த தேக மெந்த நாளில் மாயு மோவெ னக்குழைந்
தந்த ராத்ம னைக்கு றித்துள் ளாமு மன்பர் பக்திநீ
தந்தி டாத தால கந்தை தானெ முந்து வாழ்வதால்
சொந்த நாத னேநீ என்முன் தோன்றி ரமண வருகவே.

352. உலக வாழ்வி லேபி றந்து டற்ற ரித்து வாழுநாள்
பலகழிந்து போன தேபு தீத சிந்தை போனதோ?
விலகி லாதி ருந்த தீமை வீழ்த்த நீவி ரைந்துவந்
திலகு வாயென் கண்கள் காண இறைவ ரமண வருகவே.

353. ஒருவ னீயெ னக்கு வந்திங் குதவ எண்ண முள்ளதேல்
வருவ தென்ன போவ தென்ன வாயி னும்ம னங்கொளேன்
தருவ னைந்த பேர்பி னேத ரித்தி ரங்கொ ளாரெனை
குருவ னைந்து கொள்ள வடிவு கொண்டு ரமண வருகவே.

354. பக்தி யில்லை தீமை யும்ப டிந்த தில்லை பாவமோ
செத்த தில்லை நானெ தென்று தெரிய வில்லை எவ்விதம்
முக்தி யுள்ள தென்றிவ் வாறு முறைசொ லித்தி னந்தினம்
புத்தி ரன்பு லம்ப வோபொ றுப்பை ரமண வருகவே.

355. விண்ணி ருந்த சூரி யன்வி ளங்கி டாத வீணனுன்
கண்ணி ருந்தி லாத வன்க டைக்க ணித்தெ னக்கருட்
கண்ண ளிக்க வேண்டும் நீக ளங்க மற்று வாழவே
உண்ணி றைந்த ஜோதி யாகி யுண்மை ரமண வருகவே.

356. பாவம் யாவு மேபி சைந்து பண்ணி வைத்த பாவையோ
தாவ தத்து ருக்கி வார்த்த சார மோள தோயிந்நான்!
ஆவ தொன்றி லாது பாழி லாழ வோபி றந்துளேன்
நீவ ராம லுய்வெவ் வாறு நேரும் ரமண வருகவே.

---

* ஓலையாவது: "புலி வாயிற் பட்டது எவ்வாறு திரும்பாதோ, அவ்வாறே குருவி னருட்பார்வையிற் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப்படுவரேயன்றி யொருக்காலும் கைவிடப்படார்" என்ற செய்தி ஓலை.

357. வாயி ருந்து தீய சொல்ம னத்தி ருந்து வஞ்சமிக்
காய மூடி ருந்து பாவ கன்ம மேசெய் காரியம்!
தாயி ருந்தும் பட்டி னித்த விக்கும் பிள்ளை யுள்ளதோ
நீயி ருந்தும் நானி தோ?நி னைந்து ரமண வருகவே.

358. அஞ்சி யஞ்சி வாழ்வில் உன்றன் அன்ப னுன்னைக் கூவியே
கெஞ்சிக் கெஞ்சிச் சொல்லுஞ் சொல்லை கேட்ப துன்ற [னிச்சையோ
தஞ்ச மென்று வந்த வென்னுள் சட்டெ னப்பு குந்தினி
அஞ்ச லென்றி டாத தேனெ னுத்ம ரமண வருகவே.

359. மானி டர்க்கு ளேயி தோர்வ ழக்க மன்றி வானருட்
கோனி டத்து முள்ள தோகு ழந்தை யேங்கிக் 'கோ'வெனத்
தான ரற்றி யழுத பின்பு தான ளிப்ப தென்பதே!
நானி னிப்பொ றேனி ரங்கி நாத ரமண வருகவே.

360. உடல ளித்தொ ருன மின்றி உண்ண உணவ ளித்துடுத்
திடவ ளித்து னைத்து திக்க விச்சை நாவ ளித்தநீ
விடம னத்தை நாச மாக வேய ழிக்க வில்லையேல்
உடல ளித்தும் நன்மை யென்ன வுண்டு ரமண வருகவே.

361. பார்த்து னைப்ப ழிப்ப டிந்த பாவ சிந்தை மாறிநான்
ஆர்த்து னைத்து தித்து பாத மள்ளி சென்னி மீதிலே
சேர்த்த ணைத்து னின்ப தாரை தேக மெங்கும் தோயவே
மூர்த்தி கொண்டு நீயெ னக்கு முன்னில் ரமண வருகவே.

ஸ்ரீ ரமண வருகை முற்றிற்று

ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்து

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசலரமணாய

ஸ்ரீ ரமண வருகை

உரை

1. ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணா! உலக மகா குருவே, அருணாசலத்தையே வாசஸ்தானமாகக் கொண்டவரே, சற்குரு மூர்த்தியே, ஆன்ம ஞானமே உடல்கொண்டு உலகத்தில் நடமாடியவரே, மோனகாச அரசனே, என் கண்முன் வருவீராக

2. என் அப்பனே, பெருங்கருணையால் இவ் வுலகில் உரு வெடுத்து வந்த அமுதப் பெருந்தகையே, சொல்ல முடியாத பெருஞ் சக்திமான்களின் தெய்வமே, சிவபிரானது மானிட வுருவமே, எவ்வெப்போதெல்லாம் நான் ஏங்கி 'நீ வருவாயாக' என்று கூப்பிடுவேனோ அப்பொழுதெல்லாம் நீயும் சம்மதித்து உன் ரமண திருவுருவத்தோடு என் இரு கண்களின் முன்னே, ஏ! ரமணோத்தமனே! நீ வருவாயாக.

3. உன்னையே தொழுகின்றேன், வருக; துன்பமே யில்லாத ஞானச்சுகமயனே நீ வருக; நீ வரவேண்டும் என்று அழுது நிற்கின்றேன், வருக; அருணாசலத்தில் வாழ்வுகொண்ட சஞ்சீவி மருந்தே வருக; குற்றமற்ற மெய்யடியார்களின் உள்ளத்தால் இறுகப் பற்றிக்கொள்ளப்படும் உன் திருவுரு வைப் பார்க்கக் குழைந்து நிற்கின்றேன், வருக; முழுமுதற் பொருளே, மோன சொரூபமே, என் கண்முன்னே ரமணா வருவாயாக.

4. பரமாத்மனே வருக; பகலிரவு என்ற கால பேதங் கடந்த பகவானே வருக; உலகைப் படைக்கும் பிரம்மாவும் (ரக்ஷிக்கும்) விஷ்ணுவும் எட்டிப் பிடிக்க முடியாத அருணாசல பெருமானே (அன்பால்) பிடித்துக்கொண்டவனே வருக; என் மனம் ஞான பலமடைய உன்னுடன் அளவாளவும் சத்சங்கம் ஒன்றுதான் வழி, அல்லவா? ஆகையால் என்முன் எழுந் தருளி வர மனங் கொண்டு நீ வருக; சகுண வடிவிலேயே ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

5. ஐயனே வருவாயாக; அருணாசலனிடம் பேராசை கொண்ட இதயத்தானே வருக; உண்மையான அபயம் தரும் அபயஹஸ்தனே வருக; நான் என் கண்ணாலே கண்டுகொண்ட கடவுளே வருக; பாழான உலக மயக்க இருளை அழிக்கும் ஆன்ம ஞானமாகிய விளக்கே வருக; ரமண பிரானே, நின் வருகையால் ஏழையும் பொய்யனுமான என் உள்ளமும் பூரண ஞானம் பெறுமாறு நீ வருவாயாக.

6. ஸ்வாமி வருக; தயாநிதியா யிருந்து என்னையுந் தாங்குபவனே வருக; இவ் வுலகில் நான் என் கண்களால் நன்றாகக் கண்டுகொண்ட பரிபூரணத் தெய்வமே வருக; 'தன்னைத் தவிர எந்த ஒரு பொருளும் தனியான ஒரு அன்னியப் பொருளே யல்ல' என்று விளங்கும் ஸ்தாணுவே (ஸர்வ ஆதாரப் பொருளே) வருக; உன்மீது மட்டுமே ஆசைப் பைத்தியம் பிடித்தவனைப் (உடல் முதல் மற்ற) எல்லாவற்றையுங் களைந்துவிட்டு எப்போதும் உன்னோடு ஐக்கியம் உற்றிருக்கு மாறு அருள் செய்யும் ரமண பிரானே வருக.

7. புண்ணிய சொரூபனே வருக; அருணமலையின் புதல்வனாக (குகனாக) அவ் வண்ணாமலையின் குகையில் எழுந் தருளி யிருப்பவனே வருக; திட ஞானியே வருக; தனது சந்நிதிச் சக்தியாலேயே அடியார்களைச் சிவமயமாக்குபவனே வருக; உன்னை எப்போதும் கண்ணினால் நான் கண்டிருக்கும் படி மறையாத உருவத்துடன் வருக; என் தலைவனே வருக; என் உள்ளத்திற் குடிகொண்ட பரிசுத்தப் பொருளே வருக.

8. ஸ்ரீ ரமண தேவனே வருக; உனது திருவருட் கரங்களை என் தலைமேல் வைத்து ஆசீர்வதிக்க வருக; புனிதமானவனே வருக; நான் பிறந்த பிறவிப் பயனாகிய முக்தி சித்திக்கும்படி நீ வருக; பெரும் புலவர்களால் துதிக்கப்பட்ட திருப்பாதங்களை யுடைய குருபரனே வருக; என்னை உன் குழந்தையாக உன் பிடிப்பினுள் அடக்கி வைத்துக்கொண்டு, என் ஜீவன் பாழி லழியாமல் ஆன்ம சொரூபமாய் பிழைக்கும்படித் திரு வுளங் கொண்டிருக்கும் என் தெய்வமே, ரமணனே வருவாயாக.

9. அற்புதமான மஹிமையுடையவனே வருக; அரஹர அண்ணாமலைப் பெருமானே வருக; சிவந்த பொற்றாமரை மலர்

போன்ற திருவடிகளை உடையவனே வருக; உலக மெல்லா வற்றாலும் போற்றப்படும் ஞானப் புகழுடையோனே வருக; உண்மையான பக்தி என்னும் கற்புடைய அடியார்களால் ஏக குரு பக்தியால் அணைந்துகொள்ளப்படும் ஆத்மநாதனே வருக; எல்லோரிலுங் கடையவனாகிய என்னையும் அருட்கரம் கொடுத்து உய்விப்போனாகிய என் நல்ல தந்தையே வருக; ரமண நாதனே என் கண்களாற் காண வருவாயாக.

10. கைலாய கிரியின்மேல் வசிப்பதை விட்டு அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக கீழே இறங்கி அருணாசலத்துக்கு வந்தமர்ந்த சாக்ஷாத் சிவபிரானான ரமணபிரானே வருக; மதங்கள் எல்லாம் தழைத்தோங்கவும் மக்களிடம் தவவுணர்வு பெருகவும் இவ் வுலகில் வந்து அவதரித்த இறைவனே வருக; தன் அடியவர்களது இதயத்தில் நொடிப்போதுங்கூட நீங்காமல் கருணையோடு எழுந்தருளி யிருப்பவனே வருக; 'ஸ்ரீ ரமணன்' என்ற சிறப்புமிக்க நாமரூபக் கடவுளே வருக; ரமண பகவனே, ரமண பிரானே வருக.

11. எல்லாக் கலைஞானங்களு முடையவனே வருக; எந்தக் கலையாலும் எய்தமுடியாத சிறப்புடைய கடவுளே வருக; மலைப்பில்லாத ஞான மலையே வருக; உன்னை வந்து வணங்கும் அடியார்களுடைய மனத்தின் சிறுமைகளை யெல்லாம் போக்கும் பரிசுத்தனே வருக; புலையனாகிய என் உள்ளத்திலும் நிலையாகப் புகுந்தவனே வருக; மும்மலமுமற்றவனே வருக; என் அன்புக் குரிய ரமண பிரானே வருக.

12. சலனமற்றவனே வருக; தேவர்கள் யாராலும் அறிந்து கொள்ள முடியாத ('நான்' என்னும்) இதய வடிவினனே வருக; பத்தாமவனாக எப்போதும் இழக்கப்படாமல் விளங்கிக்கொண்டிருப்பவனே வருக; இவ் வுலக வாழ்வு மெய் யென்று துலங்கும் (உலகின்மேல் சத்திய புத்தியால் விளையும்) மனமயக்கமான உலகாசை எனக்கு அற்றுப் போகும்படி, இந்த நனவிலேயே நீ என் கண்முன் நடந்து வந்து தெளிவுபடுத்துவதை நான் இரு கண்ணாலும் கண்டு எல்லாக் கவலைகளும் நீங்கியிருக்க விரும்புகின்றேன்; ரமண பிரானே வருக.

13. எனக்கு எல்லாத் தெய்வமுமானவனே வருக; லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி ஆகிய மூன்று தேவிகளும் ஒரே உருவமாக

எனக்குக் கிடைத்தவனே வருக; சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோதனம், அநுக்ரஹம் ஆகிய பஞ்சகிருத்தியங்களையும் புரியும் ஜகன்மாதாவே வருக; உன் அடியவனாகிய என் உள்ளத்தில் அணுமாத்திரங் கூட பொய்மை புகாதவாறு என் புத்தி தெளிவுபட்டிருக்க, பரிபூரண ஞான ஜோதி வடிவில், உள்ளங்கை நெல்லிக்கனி போல் ஸ்பஷ்டமாக என் கண்ணினால் நான் உன்னைக் காணும்படி ரமணக் கடவுளே வருக.

14. பரிசுத்தனே வருக; ஆன்ம அறிவு பெற்ற துறவிகளுக்கெல்லாம் அரசனே வருக; பிரம்ம விஷ்ணுக்கள் தன்னை அளவிட முடியாதபடி உயர்ந்து நின்ற அருணாசலனின் அருமை மகனே வருக; சத்திய ஆன்மாவில் நன்றாக மூழ்கியிருப்போரின் சுகமயனே வருக; உன்னிடம் வந்து உன்னையே வணங்கி உன்னையே துதிக்கும் உன் பிள்ளையாகிய என் ஆசை தீர, என் கண்முன், ஹே ரமணத் தெய்வமே, எழுந்தருள்வாயாக.

15. அப்பா வருக; அருணாசலத்தின் இதயமே வருக; என்றென்றும் முக்த புருஷனான நித்ய முக்தனே வருக; முருகப் பெருமானே வருக; என் அகந்தையை முற்றிலும் அழிக்க வல்ல ஞான சித்தனே வருக; உலக மகா குருதேவனே வருக; என் ஆசைப் பைத்தியத்தின் பெருங் குறிக்கோளே வருக; என் இரு கண்களாலும் நான் காணுமாறு பேரருளுடன் ரமண பிரானே வருக.

16. தந்தையே வருக; நான் தகுதியில்லாதவனாக இருக்கும் நிலையிலும் என்னை உன் அடியவனாக ஏற்றுக்கொண்டவா வருக; 'என் தாயே, என் தந்தையே' என்றுன்னை உரிமையோடு அழைப்பவரது உள்ளத்தே பேரானந்தத்தை அருளும் இயல்புடையவனே வருக; மிக அற்புதமாக உனது பதினாறாமாண்டிலேயே மிக உயர்ந்த பிரம்ம வித்தையை அனுபவ சித்தமாக அடைந்தவனே வருக; என் கண்ணினால் உன்னைக் கண்டு என் மனம் மகிழ உன்னைத் தேடுகின்றேன், ரமண பிரானே வருக.

17. குற்றமற்றவனே வருக; குரு வடிவெடுத்து வந்து என்னை ஆட்கொண்டவனே வருக; அடியவர்கள் உன்னைத் தம் உள்ளத்திற் கொண்டு வாழ யாதொரு வழக்கும் செய்யாது அருள்பவனே வருக; நீ பேரானந்த ஜோதி வடிவில் தோன்றவும்,

உன் பிள்ளையாகிய நான் உன் திருவடிகளைத் தொட்டு வணங்கவும் இப்போதே என் கண்ணில் புலப்படுமாறு வருக; பரிபூரணா, ரமணா வருக.

18. மெய்ப்பொருளோனே வருக; பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி காண முயன்றும் இயலாது மிக நீண்டுயர்ந்த அக்கினி மலையைப் பக்தியால் அணைந்து பிடித்துத் தழுவிக்கொண்ட அருட் கன்னிகையே வருக; உன்னைத் துதிப்போரின் இன்பமே வருக; (மனம்) புத்தியால் அறியமுடியாத கடவுளே வருக; அடியார்கட்கு அடைக்கலந் தரும் உனது திருவடி மலர்களைக் கண்ணில் ஒத்திக்கொண்டு நான் மகிழும்படி வருக; ரமண பிரானே நீ என் முன்னிலையில் சகுண ரூபத்தோடேயே வந்தருள்க.

19. பரிபூரணனே வருக; உன்னைத் தஞ்சம் புகுந்தவர்களது ஞான வடிவனே வருக; ஸ்ரீமந் நாராயணனே மனித உடல் தாங்கி நடந்து வந்தவனே வருக; என் மூல காரணனா தலைவனே வருக; தனது அவ்வியாஜ கருணையால் என் பாவங்களை யெல்லாம் கழுவிச் சுத்தப்படுத்தும் அருட்கங்கையே வருக; வேத சொரூபனே வருக; உன் அடியவனான என் கண்முன் ஆனந்த ரமண மூர்த்தியே எழுந்தருளி வருக.

20. ஞானியே வருக; மிகப் பழமையானவனே வருக; போக்கு வரவற்றவனே வருக; வேத சொரூபனே வருக; மும்மலமுமற்றவனே வருக; எல்லாமறிந்தவனே வருக; என் தலைமேல் தன் னிரு பாதங்களையும் எப்போதும் வைத்திருப்பவனே வருக; கொடிய பாவியாகிய என் நெஞ்சப் பர்வமெல்லாம் நீக்கி என் உள்ளத்தில் அமரும் தலைவனே வருக; மரண மென்பதே யறியாத ரமண பிரானே, ரமண சற்குருவே நீ வருக.

21 ஆண்டவனே வருக; (தகுதியற்றவன் நான் எனினும்) என்னை உன் திருவருள் பலத்தால் உனக்கு ஓர் உண்மையான அடியவனாக ஆக்குபவனே வருக; மெய்ஞ்ஞானத் தாண்டவமிடுபவனே வருக; 'உனது குளிர்ந்த அருட்கரத்தால் தொட்டு மெய்ஞ்ஞானத்தை என் உள்ளத்தில் தூண்டுதற்கு வந்தருள்க' என்று துதித்து வேண்டி நிற்கும் ஏழையேனின் சகல துன்பங்களும் நீங்கும்படி உன் திருவடிகளை என் தலைமேற் சூட்டிக்கொண்டு, என்னாசை தீர உன்னை அடையும்படி

என் கண் முன்னே, ஹே! புண்ணிய ரமண சொரூபனே வருவாயாக.

22. அன்புருவமே வருக; ஞான சூரியனு யிருந்து என் உள்ளக் கமலத்தை மலர்விப்பவனே வருக; எனக்கு மிகவும் ஆசையான இன்ப வடிவினனே வருக; என் இதயமே வருக; இருளகற்றும் சூரியனே வருக; 'நீ உடல் தாங்கி நின்ற காலத்தில் என் ஆசை தீர உன்னைக் காண முடியாதபடி ஏமாந்து போனதால் ஏங்கி நிற்கிறேனே' என்று அழுகின்றேன். அதனுல் என் இரு கண்முன் இரக்கத்தோடு ரமண பிரானே வருக.

23. இறைவனே வருக; உன்னைத் தவிர வேறு கடவுளரே இல்லாதவனே வருக; நான்மறைகளாலும் தன் திருவடிகளைத் துதிக்கப் பெற்றவனே வருக; சிறிதும் குற்றமே யில்லாத நல்ல அடியவர்கள் உள்ளத்தே வசிப்பவனே வருக; அழிவற்ற இன்ப ஊற்றுப் பெருக்கால் என் உள்ளமும் உயிரும் நிறையும்படி என் கண் முன்னே தோன்றி நின்று அருள்புரிபவனே வருக; ரமண பிரானே வருக.

24. பரம்பொருளே வருக; என் உயிருக்கும் உயிராக உள்ளத்தே ஒளிரும் ஒளிமயனே வருக; என்னை ஊட்டி வளர்க்கும் அன்ன தாதாவே வருக; என் வாழ்வில் நான் கொண்டுள்ள ஒரே ஒரு பெரும் ஆவற்பொருளே வருக; இப்போதே 'நான்', 'எனது' என்னும் அகந்தை மமதை இரண்டையும் ஒழிப்பவனே வருக; என் தந்தையே வருக; அழகனுன ரமணனே. நீயே என் னிரு கண்களின் முன்னே வரவும், அத் திருக்காட்சியை நான் கண்டு மகிழவும் வருக.

25. கருணை வடிவமே வருக; எல்லா தெய்வங்களாலும் விரும்பப்படுபவனே வருக; என் உள்ளத்தில் உள்ள அருணையம் பதியே வருக; அழிவற்ற ஞானமிர்தமே வருக; 'நான்' என்னும் அகந்தை இருள் அழியும்படி எழுந்தருளும் ஞான சூரியனே வருக; அடியார் விருப்பங்களை 'இல்லை' என்று சொல்லாது வழங்கி யருளும் வள்ளலே வருக; இச்சமயமே என் கண் உன்னைக் காண யாதொரு தடையுமில்லாமல் உன்னைக் காணும்படி (தக்க திவ்ய திருஷ்டி தந்து) என் ரமணத் தந்தையே நீ வருக.

26. அழிவற்றவனே வருக; அறிவிலிகளிடத்துங் கூட அருளுடையவனே வருக; என் உள்ளமாகிய குமுதமலர் மலரும்படி எழுந்தருளும் பூரணச் சந்திரனே வருக; அருட் கொடையிற் சிறந்த குமணனே வருக; சாஸ்திரங்களிற் சொல்லப் பட்ட சமம், தமம் முதலிய ஷட்க சம்பத்திகளோடு பொருந்தி யிராத எனக்கும் தரிசனம் தர வருக; உனது அவ்வியாஜ கருணை இயல்பால் எழுந்தருளி வருக; ரமண பிரானே வருக.

27. என் ஆசைப் பொருளே வருக; என் அறிவிற்குள் பெரிய ஞான ஆதரவாளனாக விளங்குபவனே வருக; குற்றமற்ற மனத்தினனே வருக; ஞான சிகாமணியே வருக; ஓங்கார ஓசை வடிவினனே வருக; என்னைத் தனக்கு அடிமையாக உடையவனே வருக; உள்ளத்தினுள்ளே பிரகாசிக்கும் ஞான தேஜஸையே அறியாத சிறியவனாகிய நானும் காணும்படியாக, மஹா தேஜஸ்வியான ரமண பிரானே வருக.

28. என் இஷ்ட தெய்வமே வருக; யார் யார் எவ்வெந் நாம ரூபத்துடன் கண்டு அடைய விரும்புவார்களோ அவர்களுக்கு அவ்வித நாமரூபத்தில் நன்றாகக் காட்சி தரும் அருளுடைய வனே வருக; சின்மயானந்தனே வருக; எட்டு முகங்களையுடைய அருணாசலன் அருமை மகனே, என் அன்புக் கடவுளே வருக; என் கைகளால் நான் உன்னைத் தொட்டு வணங்கத் தக்க தூய உருவத்துடன், என் துணைவனே, ரமண பிரானே வருக.

29 என் அம்மையே வருக; அருளே உருவெடுத்து வந்த என் அப்பனே வருக; நான் உடலெடுத்த இப் பிறவியில் கண்ணாற் கண்ட கடவுளே வருக; எப்போதும் உன் கைப் பிடிக்குள் வைத்து ஆட்டும் பொம்மையாக என்னைக் கைக் கொண்டுள்ள புனிதனே வருக; மிகப் பொறுமையோடு (என் குறைகளை யெல்லாம் மன்னித்து) எனக்கு அடைக்கலம் தரு பவனே வருக; ஸ்ரீ ரமண நாமரூபம் மிகவும் நன்றாகத் தெரியுமாறு என் இரு கண்களின் முன் எழுந்தருளி வருக.

30. ஈச்வரா வருக; இசையோடு உன்னைத் துதிப்பவரது இன்பமே வருக; என் உயிருக்கு உயிரான நேசமே வருக; (பிரமன் திருமால் முன்னிலையில்) நீண்டு வளர்ந்த அக்கினி மலையே வருக; ஆகாயம் முழுதும் அளாவிய தேஜஸை உடைய வனே வருக; சிவகுமாரனே வருக; தேவதேவனே வருக; என்

பாபங்களை யெல்லாம் நாசம் செய்பவனே வருக; என் கண்கள் காணும்படி ரமணனே, ரமணேசனே வருவாயாக.

31. கண்ணு வருக; சாஸ்திரங்களை மட்டும் கற்று அனுபவமற்ற படிப்பாளிகள் அறிய முடியாத ஆன்மக் கல்வி வடிவினனே வருக; திடமான மெய்ஞ்ஞானியே வருக; தெய்வமே வருக; சிவசிவா வருக; அழகு மிகுந்த தமிழ்ப் பாக்களாற் பாடப்பெற்ற தலைவனே வருக; பாவியாகிய என் இரு கண்களாலும் காணக்கூடிய சூரியனுக வருக; அண்ணனே வருக; அருளே வடிவமாகக் கொண்ட அமரர் பெருமானே, ரமண பிரானே வருக.

32. ஞான ராஜனே வருக; எனக்கு எல்லா விதத்தும் துணையாக நிற்கும் பரஞ்ஜோதியே வருக; முக்காலமும் பரிபூரணனுனவனே வருக; பொய்யில்லாத மெய்ந்நிலையாக என்னைச் சேர்பவனே வருக; கழுதையைப் போன்ற இழிவுடையவனுகிய எனக்கும் அடைக்கலம் அளித்து ஆட்கொண்ட அரிய புகழை யுடையவனே வருக; என் இரு கண்களும் உன்னையே ஊன்றி மகிழ்வோடு காணும்படி ஒப்பற்ற ரமண பிரானே எழுந்தருளி வருக.

33. மஹா தீரனே வருக; மெய்ப்பொருளை அனுபவித்துணர்ந்தோரது அனுபவமாகிய சிவோஹமே வருக; பரமாத்ம வீரனே வருக; ஏழையாகிய வலிவிலாத நான் உன்னிடம் வேண்டிக்கொள்வதால் என் பஞ்சேந்திரியங்களையும் எனக்காக வென்று தரும் சூரனே வருக; தமிழ்ப் பாமலரால் உனதடியவர்கள் தொடுத்து உனக்குச் சாற்றும் பாமாலைகளை அணிந்தவனே வருக; அன்பினுல் மனமிரங்கி அடியவனுகிய என் கண்முன் ரமண பிரானே வருக.

34. ஆரியனே வருக; அடங்காத மனத்தை யெல்லாம் அடக்கும் ஆற்றலுடையவனே வருக; மெய்ஞ்ஞான சூரியனே வருக; உன் அடியவர்களது உள்ளத்தில் பல முற்பிறவிகளாகத் தொடர்ந்து இருந்து வரும் வாசனைகளெல்லாம் (அவர்கள் முன்னேறுதபடி) போர் தொடுக்குங்கால், அந்தப் போர்க்களத்தில் புகுந்து உன் தொண்டர்களுக்காக அவ் வாசனைகளை வென்று வெற்றி வாகை மாலை சூடுபவனே வருக; உன்

அடியவனான என் முன் பிரத்தியக்ஷமாக வருக; என் இரண்டு கண்களும் மகிழும்படி என் அன்பான ரமண பிரானே வருக.

35. அருளாளனே வருக; என் கீழ்மை யெல்லாம் அழியுமாறு அருட்கொடை வழங்குபவனே வருக; மெய்ப்பொருள் என்று கூறப்படும் உள் அறிவே வருக; புலன்கள் அறியும் புற அறிவுகளையே மெய்யறிவு என்று நம்ப வைக்கும் அஞ்ஞானமாம் மாயை இருள் அற்றவர்களது இதயமே வருக; எனது பெருந்தலைவனே வருக; மருள் நிறைந்த மனத்தினனான என் இதயமும் ஞானத்தால் மலரும்படி என் இரு கண்களின் முன்னே ஸ்ரீ ரமண பிரானே வருக, வருக.

36. அழிவற்றவனே வருக; அமரர் எனப்படும் தேவர்கள் வந்து பணியும் இரு திருவடி மலர்களை யுடையவனே வருக; என் அஞ்ஞான இருளை அகற்ற வருக; என் சிந்தை அடக்கி அழித்து வெற்றிகொள்ள என்றே ஆத்மஞான வேலைத் தாங்கியுள்ள குமார சுவாமியே வருக; உன்னைத் தியானிப்போரது குறைகளெல்லாம் நீங்கும்படி அருட்குறிப் புடையவனே வருக; என் உள்ளத்தில் நடக்கும் தேவாசுர யுத்தம் முடிந்து புத்தி சம (சமாதி) நிலை யடைய ரமண பிரானே, என் சுவாமியே என் முன் வருக.

37. அழகனே வருக; சுந்தரமையர் புதல்வனான பரிசுத்தனே வருக; என் கொடிய மனத்தையும் தந்திரமாக உன் வசப்படுத்தி அருள் செய்து வரும் தெய்வீக சாகஸம் உடைய குருநாதனே வருக; மந்திர வாசகமான ரமண நாம மருந்தை நான் அருந்தும்படி அளித்தவனே வருக; எனது இவ் விரு கண்களாலுமே நான் உன்னைக் காணும்படி இன்றே இங்கேயே ரமண பிரானே வருக.

38. ஞான ஜோதியே வருக; ஆன்ம சொரூபத்திலேயே ஸ்திரமாய் சுகித்திருப்பவனே வருக; என் இருப்புக்கு மூலமானவனே வருக; எனக்குத் தாயும் தந்தையும் ஆனவனே வருக; பாரபட்சமற்ற நீதியின் வடிவமே வருக; நன்னெறி தவறாது என்னைக் காத்து நிறுத்தி வைப்பவனே வருக; என் உள்ளத்தில் (கைவிட்டு விடுவாயோ என்று) வீணாக அடிக்கடி எழுகின்ற பயம் நீங்குமாறும் என் இரண்டு கண்களும் ஜீவன் — தேஜஸ் — பெறும்படியும் ரமண பெருமானே வருவீராக.

39. அழிவற்றவனே (விஷ்ணுவே) வருக; அருள் வலை வைத்து அடியேனை அருணாசலத்திற் பிடித்தவனே வருக; சச்சிதானந்த சகஜாத்ம சொரூபனே வருக; தன்னை யறிந்து ஆன்மாவிலேயே நிஷ்டை யுற்றிருந்து வரும் ஞானிகளின் இச்சைப் பொருளே வருக; உன்னை என் இரு கண்களாலும் நான் கண்டு உன் திருவடி மலர்களை எடுத்து என் கண்களில் ஒத்திக்கொள்ளவும், அவைகளை என் தலைமேல் தாங்கிக் கொள்ளவும், உள்ளத்துடன் அணைத்துக்கொள்ளவும் சம்மதித்து ரமண பிரானே வருவீராக.

40. மும்மலமுமற்ற பரிசுத்தனே வருக; அழியாத என்றுமுள்ள ஆன்மாவாய் நிலைபெற்றவனே வருக; நாயாகிய இவ்வடியேனின் இனிவரும் பிறப்பை யெல்லாம் ஒழிக்கும் கடவுளே வருக; திக்குகளையே ஆடையா யுடையவனே — மஹாநிர்வாணியே — வருக; உன் அருட்புகழைத் தாங்கி நிற்கும் பாமாலைகளைத் தொடுத் தணிவிப்போரின் உரிமையாளனே வருக; துதிப்பவர்களின் பரம துணைவனே வருக; எல்லா நலன்களையும் தரும் ரமண நாமமே வருக; ரமண பகவானே, ரமண சற்குருவே வருக.

41. பிரம்ம ஞான சொரூபமே வருக; நாவினுற் சுவைக்கக் கிடைத்த மதுர ரசமாம் ரமண சீர் நாமமாகிய அருட்பானமே (குடிநீரே) வருக; பரம்பொருளே வருக; எனக்கு உயர்ந்த பக்குவம் உண்டாக்கத் தக்க பெரிய சக்தியான மோனத்தை அருளிப் போதிக்கும் குருமூர்த்தியே வருக; மோக்ஷ சொரூபமே வருக; பேரின்ப ஆகாசமே, உன்னை நான் ஓர் உருவுடன் காண ஆசைப்பட்டு வாடுகின்றேன், ரமண பிரானே வருக.

42. அருள் வள்ளலே வருக; வானம் மழை தராமல் ஏமாற்றினுலும், அதுபோல அருள் தர ஏமாற்றுமல் அருள்மழை பொழிபவனே வருக; என் உள்ளத்தையே நீ ஒளிந்துகொண்டிருக்கும் இடமாக வைத்துக்கொண்டு (ஒளிந்திருந்து) என்னை (என் மனத்தை) உன்னை விட்டுப் புற முகத்தில் ஓடிவிடாதபடி அப்போதைக்கப்போதும் கவர்ந்து பிடித்துக்கொள்ளும் அருள் திருடனே வருக; என்னை உருட்டிக் கவிழ்த்து மிக விரைவாக இழுத்துச் செல்லும் கருணை (கங்கா) பிரவாகமே நீ பெருகி வருக; என் கண்களின் தீராத ஆசையே வருக; ரமண பிரானே வருக.

43. (மும்மூர்த்திகட்கும்) மேலானவனே வருக; புத்தியின் அஞ்ஞான இருள் விடிந்து 'நான்' என்னும் ஆன்ம சொரூபத்தை விளக்கி வைக்கும் ஞான சூரியனே வருக; சற்குருவே நீ வருக; மதுரையில் தோன்றி அண்ணுமலையை வந்தடைந்த ஞான அமிர்தமே வருக; இவ் வுலகில் என் போல ஒருவன் உன்னைக் கெஞ்சி ஏங்கி மனம் புழுங்குவது சரியோ? நீ வந்தருள்க; அப்போது உன் திருவடிகளில் மெய்யன்பு பெருக்கெடுக்குமாறு நான் உன்னை இரு கண்ணுலும் பார்த்துப் பருகிடுமாறு ரமண பிரானே வருக.

44. குருபரனே வருக; என்னை உன் குழந்தையாகக் கையைப் பிடித்து உன்னுடன் கூட்டிச் செல்ல வருக; குருநாதா, நீ பராமுகமாக இருக்கலாமா? எனக்கு இனி மறுபிறவி வராத ஆன்ம ஞான நிலையில் என்னைக் கொண்டு சேர்த்துவிட நீ கருணை கூர்ந்து தீர்மானிப்பாயா? 'ஆம்' எனில், இதற்கு ஒரு அடையாளமாக உன் திருவுருவோடு இப்போது எனக்குக் காட்சி தராவிட்டால் நான் எப்படி அறிவது? ஒப்பற்ற என் தலைவா, ரமண பிரானே வருக.

45. ஞான ராஜனே வருக; அரசர்கட் கெல்லாம் அரசனுக விளங்கும் சக்கரவர்த்திகளும் வந்து உனது திருவடியில் வணங்கி நிற்க, அவர்கட்கும் தலைவனுனவனே வருக; (நர, தேவ, மும்மூர்த்திகளுக்கும்) தலைவனே வருக; துளிகூட அகந்தையின் அடையாளமே இல்லாதவர்களின் உள்ளத்தில் நீங்காமல் எப்போதும் அருள் விளையாட்டு நடத்துபவனே வருக; என் தாயும் தந்தையுமானவனே வருக; உலகமெலாம் பரவும் ஞானப் புகழ் முரசொலியை உடையவனே வருக; ஏழையடியவனுன என் இரு கண்களுக்கு முன்னுல் எழுந்தருளி, ரமண பிரானே வருக.

46. பரிபூரணனே வருக; எனக்கு முதன்முதலாக உள்ளத்திலுதித்த சத்தியக் கடவுளே வருக; சத்தியம் செழித்த ஒருவனே வருக; ஒரு சிறிது கூட தெய்வீக சம்பத்தைப் பிறவியிலேயே பெற்றிராத என் கீழான ஜன்மத்தின் குறைபாடுகளை நினைந்து நினைந்து உன்பாற் புலம்பி அழுது ஏங்கி நிற்கின்ற என் கண்களுக்கு முன் நீ வந்து தோன்றி, 'ஏன் அழுகிருய்? அழாதே!' என்று அபய வசனம் கூறி, என் அப்பனே, ரமண பிரானே, நீ வந்தருள்க.

47. தாமே சுயமாய், எப்பொருளையும் விட தெளிவாய் விளங்கும் 'நான்' என்னும் ஆன்ம விளக்கமே வருக; எப்படிப் பட்ட ஆச்சரியமான உருவத்தையும் எடுத்துக்கொள்ள வல்லவனே வருக; அளவிட முடியாத அகண்ட மகத்துருவனே வருக; அணுவிற்குள்ளும் மிகச் சிறிய அணுவுருவனே வருக; அடியார்கள் எவ்வளவு அள்ளிக்கொண்டு போனாலும் குறையாத வாறு மலைபோன்று குவிந்து கிடக்கும் அருளை யுடையவனே வருக; என் குலதெய்வ மணியே வருக; உயர்ந்த ஆன்ம பரஞ் ஜோதி வடிவுடன் ரமண பிரானே வருக.

48. பிரம்ம விஷ்ணுக்களுக்கும் அடைவதற் கரியவனாய் எழுந்தவனே வருக; அக்ஷரங்களால் அருணாசலனுக்குச் சாற்றப் பட்ட அக்ஷரமணம் நிறைந்த மாலை வடிவனே வருக; எவருக்கும் தலைவனே வருக; 'ரமண' என்னும் உன் திருநாமத்தையே தாரகமாகக் கொண்டு பிழைக்கும் அடியவர்களின் ஏக பக்திப் பெருமையே வருக; பிரம்ம விஷ்ணுக்கள் தாம் அடைய பெரு முயற்சி செய்தும் தோல்வியுற்றுக் களைத்துப் போகுமாறு நின்ற அருணாசலனை அடைந்து களைக்காத (பிரமாதமற்ற) பெரு முயற்சியால் பக்தியின் மிகுந்த வேகத்தை யுடையவனே வருக; ரமண மாதேவனே, என் கண்களுக்குத் தெரியும் படி திருவுருவுடன் வருக.

49. என் உயிர்க்குப் பல பிறவிகளாகத் தொடர்ந்து தோழமை தந்து வருபவனே வருக; சிறிதும் தூரத்தில் இல்லாமல் (எனக்கு மிக நெருக்கமா) யுள்ளவனே வருக; ஆதியந்த மற்ற ஞான யானையே வருக; (யானை) ஒரு விளாம் பழத்தை விழுங்கு வது போல என்னை விருப்பமோடு விழுங்கக் கருதி நீ வருக; அளவிட்டறிய முடியாத ஆழமுடைய அருட்பெருங் கடலிற் கடைந்தெடுத்த ஞான வமுதமே வருக; உன் அடியவனாகிய என்னை உன் திருவருளால் ஆன்ம சொரூபமாக வாழ வைப்பவனே வருக; என் கண்முன் உன் திருவுருவத்துடன் ரமண பிரானே வந்தருள்க.

50. ஞானப் பண்பே வடிவானவனே வருக; என் மனம் பல விதத்தில் ஓடித் திரியாமல் உன் பாதங்களிலேயே நிலை நிற்கத் தக்க பக்குவத்தை அளிப்பவனே வருக; 'நான் பேரமு தாகிய உன்னை உண்ண வேண்டும்' என்று விருப்பத்தோடு

உன்னை அணுகவே. உனக்கு நான் உணவாக உண்ணப்பட்டு ஒழிந்து போகச் செய்பவனே வருக; கடவுளே, ரமண பிரானே, நீ வந்து தோன்றி, உனக்காக அழுது என் கண்களிற் பொங்கும் கண்ணீர்க் குமிழிகளை உன் திருவடி தருவதால் உடைத்து விடுபவனே வருக; என் ஆன்மாவாகிய நண்பனே வருக; என்னை ரமித்து மயக்கும் ரமண பிரானே வருக.

51. என்மீது உண்மையான அன்புள்ளவர்கள் என்று நான் உறுதியாக இதுவரை நம்பியிருந்த உலகினர் யாவரும் இப்போது என்னை விட்டகன்று விட்டனர்; என்னை வெறுத்து விட்டனர். அதனால் ஏமாற்ற மடைந்து துணை இன்றி வெம்பி நிற்கின்றேன். இனி எனக்கு உனது அளவற்ற அன்பும் அருட்குரு வடிவமும் தவிர வேறு எங்கும் எந்த ஆதரவும் இல்லை. ஆகையால், இவ் வுலகில் என் கண்கள் நிலையாகக் காணும்படி என் அன்பு ரமணனே வந்தருள்க.

52. பெரியோர் திருமுன் சென்று அவர்களது குற்றேவல் களைச் செய்துவரின், தப்பித் தவறி அறியாமையால் நாம் ஏதேனும் பிழைகள் செய்தாலும், கருணையால் நம்மை க்ஷமித் தருள்வரே யன்றி விலக்கிவிட மாட்டார் என்று நம்பினேன்; ஆனால் என் பிழையைப் பொறுத்துக்கொள்ளும் இயல்புடை யோர் யாருமிலர் என்றறிந்தேன். இனி எங்கு சென்று அன்பைக் காண்பது என்று ஏங்கினேன். யாரிடம் சென்றால் மெய்யன் பைச் சுவைக்க முடியும் என்று ஏமாந்து அஞ்சி நிற்கிறேன். ஆகையால் எனக்கு அன்போடு அருள ரமண பிரானே வருக.

53. மழையைக் காணாத பயிரைப் போல அருளைக் காணா அற்ப மனத்தால் வாடி வலிவற்றிருந்த போது, 'நான் என் சுபாவப்படி செய்யும் பிழைகளை யெல்லாம் பொறுப்பார்கள்' என்றும், 'பிறகு எந்நாளும் எப்பிழையுமே செய்யாதபடி மன வலிமையையும் எனக்குக் கொடுத்து நான் ஆன்மீக வழியிற் செழிப்படையச் செய்வார்கள்' என்றும் வந்து உலகத்திலுள்ள சிலரைச் சரணமடைந்தேன். ஆயினும் அவர்கள் என்னைத் தள்ளிவிட்டனர். இப்போது நானோ துக்கம் மேலிட்டு அழு தழுது புலம்பிக்கொண்டே ரமண பிரானே, உன்னை அபயம் என்று அண்டினேன். எனக்கு அபயம் அளிக்க எழுந்தருளி வருக.

54. பசித்து வந்து உணவு யாசித்த ஒருவனை, பிக்ஷை யிடுவதாகக் கூறி தன் இல்முன் அழைத்துச் சென்று, பிறகு பசிமீறி இதயம் நடுக்கும் வரையில் உணவிடாமல் காத்திருக்க வைப்பார்கள். (நேரமாயிற்றே, பசிக்கிறதே என்று) நாவெடுத்து ஒரு குரல் மறுபடியும் பிக்ஷை கேட்டால், அடிப்பதாகக் கோபித்துச் சீறி 'வெளியே போ' என்று விரட்டுவர். மனிதப் பெரியோர்களின் அழகு இப்படி அற்புதமானது போலும்! இனி இப்படிப் பட்டவர்களை அணுகவே மாட்டேன்; அருட்குருவான ரமண பிரானே, நீயே எழுந்தருளி வருக.

55 நீந்தத் தெரியாத என்னை இன்னோர் தமக்கு நீந்தத் தெரியும் என்று கூறிக்கொண்டு, என்னைத் தூக்கிக் கையிலேந்திக்கொண்டு ஆற்றிலிறங்கி, ஆற்றின் இரு கரைகளுக்கும் இடைப்பட்ட நடு ஆற்று வெள்ளத்தில் விட்டுவிட்டு, ஏதோ ஒரு குற்றத்தை என்மீது சுமத்திவிட்டு (நட்டாற்றில் விட்டுப்) போயினர்; என்மீது வெறுப்பும் கொண்டனர். அந்தோ, இப்போது எனக்குப் போக்கு எங்கே, புகல் எங்கே? நீரில் முழுகிச் சாகும் துயர நிலையை யடைந்திருக்கின்றேன். சற்குரு ரமண மூர்த்தியே, தயை யுள்ளவனே, நீயே வந்து என்னைத் தாங்கிக் காப்பாற்றுக.

56. 'சுபமயமான மோக்ஷத்தை இன்னோர் தருவர்; இவர் பெரியோர்; நமக்குச் சிறந்த வழித்துணை' என்று நம்பி இது வரை நான் துதித்தும், பயனற்றவனானேன். எல்லோரும் என்னை வெறுத்தனர். இதுவும் ஒரு நன்மைக்கே போலும். அதாவது, உன் திருவருட் சந்நிதியிலே நான் வாழ்வதற்கே போலும். தாய் போன்ற கருணையுடன் என் கண்முன் தோன்றி எனக்கு அபயம் தருவோர் உன்னை யன்றி வேறு யார் உளர்? (யாருமில்லை.) அந்தோ, அஞ்சினேன். ரமண பகவனே நீ வந்தருள்க.

57. பரம்பொருளே நீ சகல உயிர்களுக்கும் உண்மையான உறவினனாகவும், இவ் வுலகங்களுக் கெல்லாம் தலைவனாக வும் உள்ளத்தே இருந்தாலும், உன்னை எனக்கு வேறாக வெளியிலிருக்கும் கடவுளாய், கண் முதலிய பஞ்சேந்திரியங்களாற் கண்டு அனுபவித்து அடைந்து அன்பு செய்யும் துவித பக்தி நிலையைத் தான் எனக்கு இதுவரை நீ கற்பித்திருக்கிறாய். உன் உருவற்ற ஆன்ம சொரூப நிட்டையாகிய உபாசனையை

எனக்குக் கற்பிக்க வில்லையே. என் நிலைமை இப்படிப்பட்டதா யிருப்பதால், உன்னை என் இரு கண்களும் இனிக்கும்படி துவிதமாய்க் காணவே எனக்கு ஆசை ஏற்பட்டுள்ளது. ரமண பிரானே வருக.

58. வித்தகனே, எனக்கு ஓர் உடலுருவமும் அதனால் உலகத் தோற்றமும் உண்டு என்று நினைத்துக்கொள்ளும் என் அறிவின்மை இன்னும் நீங்கவில்லை என்பதை நீ யறிந்துங் கூட, அம் மயக்க அறிவு நீங்குவதற்குள் மிகச் சிறந்த — திலகம் போன்ற — பிரம்மஞான நெறியை எனக்குப் பயிற்சி யளிக்கிறாய்! சரி செய்தருள்க! ஆனால் என் கண்முன் எனக்கு ஒரு மல உடலுருவமும் உலகமும் இருப்பது ஞானத்தால் மறைந்து போகும் வரையில், நீயும் உன் ரமண நாமரூபத்தில் எனக்குக் காட்சி தந்தருள வந்தருள்க.

59. கொடிய துயர நெருப்பை விளைவிக்கும் இவ் வுலகில் நான் விருப்பு வெறுப்புகளை மேற்கொண்டு களைப்புற்று வாடும் போதெல்லாம் என் கண்ணெதிரே உனது திருவுருவைக் காணப் பெற்றால், மனத்தைப் பீடிக்கும் அயர்ச்சி நீங்கி மகிழ்ச்சி ஏற்படும். அதனால் ஸ்ரீ ரமண மா வடிவில் வருவாயாக. என்னைப் பெற்றவனே, உன் பிள்ளையாகிய நான் தொழுது அழுதுங்கூட நீ வர மறுப்பாயோ! ரமண பிரானே வருக.

60. முயற்சி செய்து நிர்க்குண பிரம்ம நிஷ்டையில் நிலை பெற வலிவில்லாத என்னை சத்பொருளாகிய உனது சகுண ஸ்வரூபத்தில் பக்தி செய்யும் அன்புத் தளையைப் புகட்டி இது வரை ஆட்கொண்டாய். எனவே பிரம்ம நிஷ்டையாகிய கல்வியை நான் அனுபவமாகக் கற்றுக் கொள்ளும் வரையிலும், எனக்கு ஒரு நற்கதி எது வென்றால், உனது சகுண நாம ரூபத்தைக் கண்டு வாழ்வதே யல்லவா? அதனால் ரமண பிரானே, ரமண பிரானே வருக வருக.

61. உலக மக்கட்கு உய்வருள வந்த பற்பல மதங்களி லும் பற்பலவாக ஓதப்படும் கணக்கற்ற கடவுளுருவங்களி லெல்லாம், என் உயிரின் நாதனே, புண்ணிய புருஷனை ஸ்ரீ ரமண வடிவமும் பெயருமே எனக்கு மிக இனிப்போடு என் உள்ளம் ஏற்றுக்கொண்டுள்ளது. தலைவனே, அதனால் நீ ஸ்ரீ ரமணத் திருநாமரூபத்தோடேயே அருள்கொண்டு வந்தருள்க.

62. பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் (சிவன்) பிள்ளைப் பெருமானாகிய விநாயகர், சுப்ரமண்யர், தாயுருவான சரஸ்வதி, லக்ஷ்மி, தேவியும், புருஷோத்தமனான கிருஷ்ணன், ராமன் ஆகிய தேவதேவியர்களது நாமரூப மெல்லாம் நீ எடுத்துக் கொள்ளும் நாமரூபங்களே யாயினும், நீ வந்து தோன்றிய ரமணத் திருநாமரூபத்தில் தான் எனக்கு மிகுந்த ஆவலுண் டாகிறது. அதனால் ஸ்ரீ ரமண பிரானே, நீ இவ் வடிவிலேயே எழுந்தருள்வாயாக.

63. ரமண, நீ அன்போடு அருட் கருணை காட்டுவாய் என்று நான் நம்பிக்கை வைக்கத் தகுந்த பரம நாதனாகவும், என் உடல் வாழ்ந்திருக்கும் நாள் முழுவதும் வீழ்ந்து வணங்கி நான் கும்பிடக் கிடைத்த என் சற்குருவாகவும், குறைவற்ற ஞான சாகரமாகவும், களிம்பு நிறைந்த செம்பாகிய என்னைத் தீண்டி பரம பவித்திரமான தங்கமாகச் செய்யக்கூடிய ஸ்பரிச வேதியாகவும் திகழ்கின்ற எம்பெருமானன்றோ நீ! ஆதலால் என் கண்கள் களிக்க வந்தருள்வாயாக.

64. ஒரு சிறு பிள்ளைக்கு அவன் பிடித்துக்கொண்டு சுற்றிச் சுற்றி ஓடி விளையாடுவதற்கும், களைத்துப் போனால் பற்றிக்கொண்டு நின்று ஓய்வெடுப்பதற்கும் ஒரு தூண் நடுவிலே துணையாக இருப்பது போல, நான் பாடிப் பணியவும், சகல மனோவாக்குக்காய விருத்திகளிலும் பற்றுக் கோடாகச் சார்ந்து நிற்கவும், விருத்திகள் ஓய்ந்த போது ஏகமாய் ஒன்றி மகிழ்வதற்கும் பொருந்தி நிற்கும் ஆதார வஸ்துவான ரமண பிரானே வருக.

65. உலகிலுள்ள எந்த அழகிய பொருள்களையும் காண என் கண்கள் கசப்பவையாய், உனது திருவுருவத்தைக் காணவே களிப்படைகின்றன. என் உடலவயவங்களோ எவ்வித ஆபரண மாலையாதிகளையும் பூண விரும்பாமல் உன் திருவடி களைச் சேரவே விரும்பும். என் காதுகளோ உன் மகிமைகளையே விரும்பிக் கேட்கின்றன. என் நாவோ ரமண நாமத்தையே இனித்துச் சுவைக்கும். என் நாசியோ உன் திருவடி மலரை நுகரவே விரும்பும். ஆகையால் ரமண பிரானே வருக.

66. கற்போருக்குச் சொல்நயங் காட்டிச் சுவை யூட்டி இனிக்க வைக்கும் காவியங்களின் சுவை என் புத்திக்குக்

கசப்பாக இருக்கின்றது. உன்னைத் தரிசித்த நாள் முதற் கொண்டு, யாக யஜ்ஞாதி கர்மங்களைச் செய்து, அதன் பயனுப் பூர்வ பாவங்களைப் போக்கிக்கொள்வதற்காக கர்மங் களில் முயலும் ஊக்கமும், பயனற்ற அற்பமானவையாய்த் தோன்றுகின்றன. உன் திருநாமத்தைக் கூறி அழுது அழுது அழைப்பதே எனக்கு இனியதாகி விட்டது. நீ வந்து தரி சனம் தராத நாள் ஒவ்வொன்றும் ஒரு கற்ப (சதுர் யுகங்கள்) காலமாகத் தோன்றுகிறது. கடவுளே, குருவே, கருணையே வடிவான ரமணனே வருக.

67. அனாதி காலமாகச் சிறப்புடன் விளங்கும் கடவுளை நாடும் பக்தர்கள் அவருடைய புனிதமான திருவுருவத்தில் இந்தக் கலியுகத்தில் யாராவது கண்டதுண்டோ என்று மக்கள் உதாசீனமாகக் கேட்கும் போது, நான் திடமாக அவர் களிடம் 'கண்டது உண்டு; நானும் கடவுளது திருவுருவத்தைக் கண்டுகொண்டே யிருக்கிறேன்' என்று தைரியமாகக் கூற வேண்டும். அதனுல் தெய்வமே, ரமண பிரானே வருக.

68. நீ தான் அருணசலத்தில் என் திருவுரு தரிசனத் தைப் பலமுறை பெற்றிருக்கிருயே, அப்படியிருந்தும் மீண்டும் ஏன் அழைக்கிருய்?' என்று கேட்கின்ருயா? கடவுள் உருக் கொள்வது என்பது ஒருசில நாட்களுக்கு மட்டுந் தான் கூடிய காரியமா? ஒழிவின்றி எப்போது வேண்டுமாயினும் உருக் கொள்ளக் கூடிய காரியமே யல்லவா? ஆதலால் கடவுளே, கருணையங் கடலே, அடியேன் தேக வுருவுடனிருக்கும் நாள் வரையிலும், உன்னை விடாமல் தரிசித்துக்கொண் டிருக்கும்படி ரமண பிரானே, நீ கருணை கூர்ந்து வருவாயாக.

69. காலதேசக் கட்டுப்பாட்டைக் கடந்த உன் அருட் பெருமைக்கு அளவே யில்லை யல்லவா? அதனுல் நீ எக்காலத்திலும் எவ்விடத்திலும் உன் அடியவர்களது கண்களாற் காணப்படக் கூடிய கடவுள் தான் அல்லவா? நான் காலமும் இடமும் கடந்த பேருண்மை நிலையை அடையும்படி நீ யருளும் நாள் வரையில், குருபரா, ரமணனே, நீ அருள் கூர்ந்து சகுண கோலம் மேற்கொண்டு வருவாயாக.

70. 'இல்லாத அவலை இருப்பதாய் நினைத்துக்கொண்டு வெறும் உரலை உலக்கையாற் குத்திக்கொண் டிருக்கும் ஒருவனைப் போல, உருவுடன் காணப்படாமல் (மறைந்து

போன) சற்குருவை நினைத்து அழுதுகொண்டிருக்கிறாயே, ஓகோ, இது வென்ன அறிவீனம்' என்று இவ் வுலகத்தார் என்னைப் பரிகசித்துச் சிரிக்கவும், அரஹர ரமணா, அதை நான் கேட்டுப் பொறுத்துக்கொண்டிருப்பதா? அந்தோ, எனக்கு அபயம் தருவதற்குப் பரம்பொருளாகிய நீ தெய்வீக ஒளி மிகுந்த மனித கோலத்தோடு ரமண பிரானே, ரமண பிரானே வந்தருள்க.

71. 'இந்த உலக சுகங்களில் என்ன நன்மை யிருக்கின்றது! ஒன்று மில்லையே' என்று விவேகித்தறியாமல் உலக காரியங்களையே எண்ணியும் செய்தும் திரும்பத் திரும்ப பிரவிருத்திப்பேன். ஆயினும், 'நான் கெட்டுப் போகாதபடி என்னைக் காப்பாற்றும் பரமன் என்பின் இருந்து அருளிக் கொண்டே யிருக்கின்றான்' என்ற நம்பிக்கையோடேயே வாழ்ந்து வருகின்றேன். எச் சமயத்திலாவது தீமை வருமோ என்று நான் அஞ்சி உன்னை நினைத்தால், நீ உடனே 'இதோ உன் முன் நான் துணைக்கு வந்து நிற்கின்றேன்' என்று அபயம் கூறி வர வேண்டும். அழகான வடிவனே, ரமணனே வருக.

72. ஐம்புலன்களாகிய பெரும் பகைவர்கள் என்னை வலிந்து பாவச் செயல்களைச் செய்யும்படி அஞ்ஞான இருட் சிறையில் பிடித்திழுத்துப் போடும்போது, கண்ணீர் துளிர்க்க, மனம் அயர்ந்து, அழுது, 'உன் அருட்சக்தி வந்து எனக்கு உதவ வேண்டும்' என்று கூவி உன்பால் திரும்பி வேண்டும் போது, என் ஆசைத் தெய்வமே, அதற்கு முன்பே நீ திருவுருவுடன் எழுந்தருளி என்முன் வந்து உதவும் வரம் வேண்டும். ரமணேசனே, இவ் வரம் தர உடனே வருக.

73. சிறுவனாகிய ஒரு மகன் வழியில் தனியாகச் சென்றால் தான், கள்வர்கள் அவனைத் தாக்க முடியுமே தவிர, மிகுந்த வலிமையுடைய தன் தந்தையுடன் அவ் வழிச் செல்லும் போது திருடர்கள் அருகே வரவே மாட்டார்கள், அல்லவா? அது போல, நானும் இனி மேலெழுந்து வரும் பண்டை வாசனைகளாகிய ஐம்புலப் பகைவர்களிடம் மயங்கி ஏமாறாதபடி இவ் வாழ்வில் தைரியமோடு வாழ, ரமண பிரானே, நீ உள்ளம் கனிந்து உருக்கொண்டு வந்து எப்போதும் என்னுடன் இருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். அதற்கென வருக.

74. உலகில் உடல்கொண்டு ஏழையாகிய நான் வாழும் நாள் வரை என்மேல் இரக்கப்பட்டு ஒப்பற்ற குருவாகத் தானும் உருவுடன் இருந்துகொண்டு, உள்ளம் உருகும் பேரன்பை எனக்கு ஊட்டி, என் உள்ளத்தில் பழைய வாசனைகள் வடிவாக இருந்து பெருகும் விஷய ஆசைகளை அகற்ற, என்னைத் தன் பிள்ளையாய் தன் அருட்பிடிக்குளிட்டு என்னை அருகிலேயே அணைத்து வளர்ப்போர் யாருமில்லாமல் நான் அஞ்சி நிற்கின்றேன். ரமண பிரானே வருக.

75. சாவைத் தவிர வேறு வழியில்லாததான இவ் வாழ்வில் உன் பிள்ளையாகிய நான் தனித்திருப்பதை அறிந்து அயர்ந்து போகின்றேன். மகா சக்தி வாய்ந்த சற்குருவாய் ஒருவரை, என் சாவை நீக்கித் தரக்கூடிய ஒரு கருணை வள்ளலை, என் உடல்வாழ்நாள் முழுவதும் எனக்குக் காவலாக இருக்கும் ஓர் கடவுளை, என் இரு கண்களும் காணும் வண்ணம் அடைந்து, ஆவலோடு ஓடி அவரது திருவடிகளில் விழுந்து வணங்குவதற்குக் கிடைக்காமல் இப் போது பயந்து நிற்கின்றேன். ரமண பிரானே வருக.

76. சதா மாறிக்கொண்டே யிருக்கும் இயல்பையே யுடைய இப் பூவுலக வாழ்வில் சிறிதும் மாறாமல் என்னுடன் துணையாக இருந்து, மற்ற அற்பமான வழிகளில் நான் சென்று விடாதபடி அவ்வப்போது தடுத்து, மோக்ஷ வழியிற் செல்ல என் உள்ளத்தைத் திசை திருப்பும் அருட்சக்தியைத் தன் கைவசம் வைத்துக்கொண்டு நடத்தி வரும் ஞான வீரனே! உன்னைத் தவிர எனக்கு ஆறுதல் கூற வல்லவர் யாரு மில்லாமல் அஞ்சி நிற்கின்றேன். ஸ்ரீ ரமண பிரானே வருக.

77. ஸ்ரீ ரமண பிரானே, உன்னை நான் எப்போதும் காணவும், வணங்கவும், உனது மதுர மொழியமுதத்தை என் காதுகளாற் பருகவும், உன் சீர் அருட் பெருமையின் ருசியை என் நாவாற் புகழ்ந்து பாடவும், ஒருமுறை அனுபவித்தால் பிறகு எப்போதுமே நீங்காத சத்வாசனை யுடையதான உனது ரமணம் என்னும் சிவயோகானு பவத்தை நுகர்ந்து மகிழவும், இதற்காக நீ உன் சகுண வடிவில் எப்போதும் என்னுடன் வந்திருந்து என்னை ஆணவமற்ற பக்த மலராக ஆக்கி அணைத்துக்கொள்ளவும் வருக, வருக.

78. ‘என் தந்தையாகிய கடவுள் நிச்சயமாக வருவார்; அதற்குத் தடையே சொல்ல மாட்டார்; அவர் கருணை வள்ளல்’ என்று அடிக்கடி உலகினரின் முன் பந்தயம் கூறிப் பெருமை கொள்ளுகிறேன். பேதையாகிய எனது இக் கருத்தும் நம்பிக்கையும் பிழைபட்டுப் போகாதபடி ஒப்பற்றவனாகிய நீ யொருவன் வந்து எப்போதும் என்னுடன் இருந்து விடு வாயாகில், என் உடலும், மனமும், இதயமும் (உயிரும்) பனி போல பக்தியால் உருவழிந்து உன்னோடு இரண்டறக் கலந்து விடும். இதற்கே ஸ்ரீ ரமண பிரானே வருக.

79. ‘என் ஆருயிர்க்குத் தந்தையாகிய ஸ்ரீ ரமண பகவா னுடன் சேர்ந்து வாழும் ஒப்பற்ற பேரானந்தத்தைப் பெறுகின்றேன். இனி இந்த உலகத்திலுள்ள எவருடைய தயவும் எனக்கு எதற்காகத் தேவை? இது நிச்சயம் என்பது குறித்து நான் பந்தயம் உரைக்கின்றேன்; எந்தப் பணக் காரரோ, கற்றறிந்த எந்தப் பண்டிதரோ, பற்பல சித்திகள் கைவரப்பெற்ற வேறு எவருமோ நான் என் வள்ளற் பெருமானாகிய பகவானுடன் அடையும் ஆத்ம சுகத்தைப் போன்று சுகம் அனுபவிக்கக் கூடியவரோ? இல்லை!’ இவ்வாறு நான் பெருமிதத்தோடு கூறி, என் இன்ப ரமணனாகிய உன்னுடன் இருக்க அருள் கூர்ந்து வருக.

80. நான் இத்தனைப் பிறவிகளாகச் செய்த பாபங்கள் எல்லாம் எப்போது ஒழிவதோ? இப் பாப கர்மங்களாற் சேர்க்கப்பட்ட ஆசைகளாகிய வாசனைகள் முழுவதும் அடியேனொழிவது எப்பொழுதோ? இன்று நீ திருவுளமிரங்கி வரவில்லையென்றால், என்னால் இவைகளைச் செய்ய முடியுமோ? ஆனால் நீ ஒருவன் மட்டும் எழுந்தருளி வந்தால், இவைக ளெல்லாம் நன்று நன்று உடனே அழிந்து போகும்; சிறிதும் தவறாது. ஆதலால் ரமண பிரானே, ரமண பெருமானே வருக, வருக.

81. ஸ்ரீ ரமணேசனே, (என் வாழ்நாளில் நான் செய்யும் காரியங்களாகிய) ஒரு பொருளை கீழே வைத்தல் அல்லது எடுத்தல், எழுந்து நிற்றல் அல்லது உட்கார்ந்திருத்தல், எங்காவது செல்வது (அல்லது செல்லாமல் இருப்பது), ஒன்றைச் செய்தல் அல்லது செய்யாமல் விட்டு விடுதல், சாப்பிடுதல், விரும்புதல், வெறுத்தல் இவை போன்ற பல

கர்மங்களில் தொட்டதற் கெல்லாம் உன்னோடு பேசி, நின் உத்தரவு கேட்டு நடக்கும் தொடர்புகொண்டு, அதனால் பாபச் செயலற்று அணுவளவும் கஷ்டமில்லாத நல்வாழ்வு நான் பொருந்தி வாழ நீ கருணை செய்து எழுந்து வருக.

82. கள்ளங் கபடமில்லாத பரிசுத்தமான மனமும், செயலும், வாக்கும் இயல்பாகவே நான் பெற்று, அன்பே வடிவாம் வள்ளலான உன் அருளைப் பருகி உள்ளம் பொங்கும் பேரானந்தத்தால், சகல தெய்வங்களின் சாரமும் தானேயான சற்குருவே உனது திருவடிவத்தையும் திருநாமத்தையுமே தழுவிக் கொண்டவனாய் உன் சந்நிதியிலேயே என் நேரம் முழுவதையும் கழித்து வாழ ஸ்ரீ ரமண பிரானே நீ பிரத்தியக்ஷமாய் எழுந்தருளிவருவாயாக.

83. எனக்கு உடலும் மனமும் அழியாமல் இருக்கும் காலம் வரையிலும், எனக்குக் கடவுளாக வந்துற்ற நீயும் உடலுருவத்தோடு எழுந்தருளி என்னுடனிருந்து சிறந்த துணைபுரிய வேண்டும். இவ்வாறு ஞானத் திடமில்லாமல் அழுகின்றேன். நீ கருணை புரியா திருப்பாயோ? என் உண்மையான கடவுளே, குருவே, என்னைக் கைவிடாதே, வருக; தயவு செய்து ரமண பிரானே வருக.

84. புத்தியினால் வெளியுலகை அறிந்துகொள்ளத் தான் எனக்கு முடிகிறதே தவிர, புத்தியை உண்முகமாகத் திருப்பி நிறுத்த எனக்கு சக்தி யில்லை. என் புத்தியை உண்முகப்படும்படி நீ உன் அருட்சக்தியால் செய்து தராவிட்டால், நான் இப் பிறவி எடுத்தது வீணாகிவிடுமே. வெளியுலகத்தாரின் பயனற்ற ஆடம்பர அஞ்ஞான வாழ்வுப் போக்கைக் கண்டு என் மனம் மிகவும் திடுக்கிட்டு நடுங்குகின்றது. அது உண்முகத்தில் திறமையாகத் திரும்பி நிற்க நான் உன் திருவுருவத்தை நேரில் கண்டால் தான் ஆகும். எனவே உன் திருவுருவ தரிசனத்தைத் தேடுகிறேன்; ரமண பிரானே வருக.

85. உலகப் பிரவிருத்திகளில் ஓர் இறந்த பிணத்திற்குச் சமானமாக இருந்து வாழும் ஞானக் கல்வியை நீ இன்னும் எனக்குக் கொடுக்க வில்லையே. 'நான் ஓர் துறவி' என்று உலகோர் காணும்படி குற்றமற்ற துவராடையை எனக்கு

உடுத்தி; ஆனால் உள்ளத்தில் 'உன்னைப் பிரிந்திருப்பதால் ஏற்பட்ட மிகுந்த துயரநிலையிலும் அகமுக வறிவற்ற மடமையிலும் மிகச் சிறந்தவன்' என்ற நிலையில் உள்ளே அழுது கொண்டே யிருக்கும்படி என்னை வைத்துள்ளாய். நீ ஆரம்பித்த இத் திருவருள் கடமையை முற்றும் செய்து முடிக்காமல், மறந்து விட்டது போல் நீ யிருக்கிறாயே, இது தகுமோ? ஸ்ரீ ரமண பிரானே நீ வருக வருக.

86 எனக்கு மிக உற்ற ஒரேயொரு துணைவனான நீ திருவுருவுடன் என்னிடம் வருவதும், என் தந்தையாகிய உன்னிடம் பேசி நான் கவலையற்றிருப்பதும் வேண்டும். மற்றவர்கள் இதை அறியக் கூடாது என்று நீ கருதினாலும் சரி; அப்படியே யாகட்டும். இறைவ, ஸ்ரீ ரமண பிரானே, என் குற்றங் குறைக ளெல்லாம் ஒழியும்படி நீ கருணை கூர்ந்து இங்கு வருவாயாக.

87. கூவி அழுது உன்னை அழைத்துக்கொண் டிருக்கும் உன் குழந்தையாகிய நான் மிகவும் பயமடைந்து உள்ளம் நடுங்கிக்கொண் டிருக்கின்றேன். நின்னைக் காணாததால் என் உயிர் பதைபதைக்கின்றது. அப்பனே, நீ இதை யறியாதவர் போல சும்மா இருக்கலாமா? பாவியாகிய என்னிடம் கருணை காட்டக் கூடாது என்று எண்ணி விட்டாயோ? எனக்கு சகல தேவதேவியருமான ஸ்ரீ ரமண பிரானே, கருணை கூர்ந்து இங்கு வருவாயாக.

88. உலகில் நடக்கும் நிகழ்ச்சிகள் எவ்வொன்றை நான் பார்த்தாலும், அப்போதெல்லாம் 'அந்தோ, என் உயிர்க்கு ஒரேயொரு துணையாக இருக்கும் உன்னை விட்டு வெகுதூரம் விலகி யிருக்கிறேனே' என்று நினைத்து என் மனம் வெம்பி, உள்ளே நடுங்குவதை நீ யறிந்திருந்தும், அளவற்ற கருணையாளனாகிய உனது திருவடிகள் என்னிடம் வந்து தரிசனம் தர மறுக்கின்றனவோ? 'என்னைத் துதிப்பவர்க்கு நான் எளிதில் அடையப்படுபவன்' என்று கூறினாயே, அந்த உன் வாக்குக்குப் பொருந்த ஸ்ரீ ரமணனே வந்தருள்க.

(முன் பாட்டிற் கூறப்பட்ட உலக நிகழ்ச்சிகளிற் சில பின் வருவன:)

89. மரக் கிளைகளில் தாவும் குரங்குகளையும், அவற்றின் வயிற்றை அக் குரங்குகளின் குட்டிகள் இறுகத் தழுவிக் கொண்டு தாயுடன் நெருங்கி, விடாப் பிடியாய் இருப்பதையும் நான் ஒருமுறை காண்பேனாயின், 'இது போல என் உற்ற தாயான உன்னோடு எப்போதும் ஒட்டிக் கட்டிக் கிடந்து வாழும் பாக்கியம் எனக்கு வாய்க்காதா?' என்று எண்ணி, அழுது, கண்ணீர்ப் பெருக்கில் மூழ்குவேன். அதனால், ஐயனே நீ என் அருகினில் வரமாட்டாயா? ஸ்ரீ ரமண பிரானே வருக.

90. கட்டுத்தறியை அறுத்துக்கொண்டு தன் தாய்ப் பசுவிடம் ஓடுவதற்காகத் துடித்துக்கொண்டிருக்கும் ஓர் பசுங் கன்றை நான் காண்பேனாகில், எனது அருட் பெருந் தாயான இறைவனே, உன்னை வந்தடையாது உலகாசைகளாகிய கட்டுக்குள் அகப்பட்டுக் கிடப்பதை நினைத்து உள்ளம் கொதித்து வெம்பினேன், அழுதேன். உன் திருவருளால் எனக்கு அந்த நல்ல நாள் மிக சீக்கிரம் வரும் என்று நம்பினேன். அதனால் கட்டினைப் பொறுத்துக்கொண்டிருந் தேன். இதை யெல்லாம் நீ யறியாயோ? ரமணனே ரமணனே, விரைவில் வந்தருள்க.

91. இரவில் திருவிழாவைக் காண மக்கள் கூடியிருக்கும் கும்பலில் ஓர் தாய் காணாமற்போன தன் பிள்ளையைத் தேடிக் கொண்டிருப்பதை நான் நன்றாய் ஊன்றிக் கவனிப்பேனாயின், உடனே 'அந்தோ, என் பெருமானாகிய ரமணன் (இந்தத் தாய் தன் பிள்ளையைத் தேடிப் பிடிப்பதைப் போல) என் மேலும் வாஞ்சையோடு (உலக மயக்க இருளிற் காணாமற் போன) என்னையும் மீட்டுச் செல்ல விரும்பி வருவாரோ' என்று வெம்புவேன், அழுவேன். நீ என்னை மீட்க வேண்டிக் கவலை கொண்டு வருவாயாக.

92. நல்ல சிறந்த கற்புடைய நங்கை யொருத்தி தனக்கு முன்னே புனைகவண்டி நிலையத்திற்கு வெகு தூரத்திற் சென்று கொண்டிருக்கும் தன் கணவனை வேகமாக நடந்து சென்று அடைவதை நான் காண நேருமானால், உடனே என் கண்கள் கலங்கி 'அந்தோ, இது போலவே என் இறைவனாகிய உன்னைத் தொடர்ந்து விரைவாகச் சென்றடையும் ஓர் நல்ல நாள் எனக்கும் இல்லையோ?' என்று எண்ணி அழுவேன். பிராண நாதனான ஸ்ரீ ரமணேசா வருக.

93. (முக்கியமான நற்செய்தியைக் கடிதம் மூலம் அறிய விரும்பி நிற்போர்) கடிதம் கொண்டு வரும் தபால்காரனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டே காத்து நிற்க, அவன் வந்தவுடன் 'உங்களுக்குக் கடிதம் ஒன்று மில்லை' எனக் கூறிச் செல்ல, அவர்கள் ஏங்கிப்போய் வீட்டுக்குள் திரும்புவதை நான் பார்க்க நேரும் போது, 'பகவானே, உனது வருகைக் காகப் பல நாள் காத்திருந்து, தாங்கள் வராத ஒவ்வொரு நாளும் ஏங்கி ஏமார்ந்து உள்ளம் உடைந்து நிற்கும் என்னைப் போல் இவர்களும் ஏமாறுகிறார்கள்' என்று நினைப்பேன். உன் அடியவனாகிய நான் இவ்வாறு வருந்துதல் உன் திருவருட்கு அழகாகுமா? அப்பனே, ரமண பிரானே வருக.

94. வாயில் தன் குட்டியைக் கவ்விக்கொண்டு போகும் தாய்ப் பூனையை நான் காண நேரும் போதெல்லாம், ஆவல் மேலிட்டவனாய் 'இதைப் போல என்னையும் கவனித்துக் காப்பாற்ற என் இறைவனும் உள்ளம் சம்மதிப்பாரா? வருவாரா? தன்னுடன் என்னைப் பிடித்தழைத்துச் சென்று ஞானமுதம் ஊட்டுவாரா?' என்று அழுவேன். தாயே! தந்தையே! குருவே! ரமண பிரானே! எனக்கு அருள் செய்ய நீ வருவாயாக.

95. பல நாய்க் குட்டிகள் ஒரே தாயிடம் பால் குடித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென அவைகளை விட்டுவிட்டு ஓடிப் போகவே அக் குட்டிகளெல்லாம் தேம்பிக் கத்தும் போது நான் அவற்றைப் பார்க்க நேர்ந்தால், 'தேவனே, நீ முன்பு ஒரு நாள் அருணாசலத்தில் மிகுந்த கருணையால் சற்குருவாக வந்து என்மீது உன் திருவருட் பார்வையை வைத்து ஆண்டு கொண்டபின், இப்போது நான் மயங்கி வருந்தும்படி விட்டு விட்டு என்னைப் பிரிந்து ஏன் (தேகத்தை விட்டு) மறைந்து விட்டாய்?' என்று அழுதுகொண்டே ஏங்கி நிற்கின்றேன். ரமண பிரானே வருக.

96. மாலை நேரத்தில் மரங்களிலுள்ள வளைகளில் (பொந்து களில்) பறவைக் குஞ்சுகள் 'கீ, கீ' என்று சேர்ந்து சப்தமிடும் போது, 'ஓகோ! தாய்ப் பறவை பகல் முழுவதும் இரை தேடி விட்டு தத்தம் கூடுகளுக்குத் திரும்பி விட்டது போலும்' என்று தெரிந்து நான் உள்ளம் சிலிர்த்து, அக் குஞ்சுகளின் மகிழ்ச்சியை நினைத்து 'இறைவா, எல்லாம் வல்லவனாகிய

உனக்கு என் உள்ளமும் களிப்புறும்படி இது போல் வந்து தரிசனம் அளிக்கத் தெரியாதோ? உன் வரவைத் தவிர வேறு மகிழ்வு இல்லையே!' என்று முறையிட்டு சிரமேல் கரங்கூப்பிக் கொண்டு அழுவேன். தெய்வமே, ரமணனே வருவாயாக.

97. இதழ்களை மலர்த்திக்கொண்டு, நறுமணம் கமழ்ந்து கொண்டு வண்டுகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மலர்களை நான் காணும் போதெல்லாம், 'தெய்வக் காதலா! இம் மலர்களைப் போல நானும் என் கீழ்மையான குணமுடைய மனம் திருந்தி சுத்த சத்துவ குணமாகிய மணம் நிறைந்து இதயம் மலர்ந்து உன் வரவை எதிர்பார்த்திருப்பேனோ? நீயும் என்னை நாடி வருவாயோ, இந்த ரமண வருகை கைகூடுமோ?' என்று புலம்பி துயரம் தாங்காமல் கண்களைப் பொத்திக்கொண்டு அழுகின்றேன். சற்குருவாகி வந்த பரம் பொருளே, இறைவா, ரமண பிரானே வருக.

98. நெய் தீர்ந்து போன விளக்கு ஒன்று சுவாலை யின்றி முற்றும் அணைந்து போகும் தருணத்தில் யாராவது அதற்கு நெய் விடுவோர் நெய்யை இட்டால் சுவாலை மங்காமல் உடனே மேலே எழுந்து சுடர் விட்டு ஓங்குவதை நான் கண்டால், உடனே மன மகிழ்ந்து துள்ளி எழுந்து, 'இறைவா! உன் வருகைக்காக உள்ளம் ஏங்கி ஏங்கி வரவர உன் இச்சையாகிய பக்தி குறைந்து கொண்டே போகும். அடியேன் பேரின்பத்தோடு உள்ளம் குதூகலித்து எழும்படி நீ இதயத்தில் எழுந்தருளி ஞான ஒளி தருவாயா?' என்று கூவி அழைக்கின்றேன்; ரமண பிரானே வருவாயாக.

99. வெந்து போன சுண்ணும்புக் கற்களின் மேல் நீரை விடும்போது, அவை கடினத் தன்மை நெகிழ்ந்து விரிந்து வெள்ளை வெளேரெனக் கரைந்து போகும்படி மக்கள் செய்யும் தந்திரத்தை நான் பார்க்கும் போதெல்லாம், 'இறைவா! இவ்வாறு என்னை உலகோரிடமிருந்து தனியாக்கித் தவம் என்னும் அக்கினியாற் வேக வைத்துப் பக்குவமாக்கி, கருணையோடு உன் திருவருளாகிய நீர் வார்த்து நனைத்து, உள்ளத்தை மலர்த்தி, ஆன்ம சொரூபமாகிய துரியத் தூவெளியில் உருவறக் கரைக்க, என் தந்தையே, நீயும் தயவு செய்வாயாக!' என்று துதித்துத் தவிக்கின்றேன், ரமண பிரானே வருக.

100. நீரில்லாமல் வாடிக் கிடக்கும் பயிர்கள் தண்ணீர் பாய்ச்சிய வுடன், அதனால் சக்தி பெற்று வளர்ந்து தொங்கிய நிலைமாறி நிமிர்ந்து, வீசும் காற்றில் ஆடி மகிழ்வதை அடியேன் காண்பேனாகில், அப்போது 'உன்னையே துதித்துப் பாடி அழுது உன் வரவுக்காகப் பதைத்துக் கிடக்கும் எனக்கும் இது போல உன் திருவருள் கிடைக்குமோ' என்று எண்ணி உன்னை நாடித் தொழுவேன்; ஆகையால் நான் என் கண்களால் காணும்படி ஸ்ரீ ரமணப் பெருமானே, ரமண பிரானே வந்தருள்க.

* * *

101. ஸ்ரீ ரமண மஹா குருவே வருக; தெய்வ மணிச் சோதியே வருக; ஸ்ரீ அருணாசலன் ஈன்றெடுத்த மகனே வருக, வருக; ஸ்ரீ அருணாசலன் உன்னைப் பலவந்தமாகப் பிடித்து வரவழைத்து மணந்துகொண்ட மணமகளே வருக; மரகதமே வருக; என் வாழ்வே, ரமணா, நீ சகுண வடிவில் என் முன் வருக.

102. சற்குருவே வருக; திருவண்ணாமலையின் உண்மை யான அழகுப் பொருளே நீ வருக; சிவலோகத்து அரசனே வருக; என்றுமே வாடாத தெய்வ மலரே வருக; சாக்ஷாத் பரமேசுவர சொரூபமே மனித கோலத்தில் வந்தவனே வருக, வருக; ஸ்ரீ ரமணா நீ என் கண்முன் திருவுருவத்தோடு வருக, வருக, வருவாயாக.

103. அண்ணாமலையின் ஞான இளங்கன்றே வருக; மலைப்பற்ற ஞான மதயானையே வருக; இவ் வுலகமும் வானு லகமும் வாழ்வடையும்படி வந்தவதரித்த மாதவமே வருக; சகல தெய்வங்களும் திரண்டு ஓர் உருவம் எடுத்துக்கொண்ட வடிவமே வருக; உன் பிள்ளையாகிய என்னிடம் வருக; அருள் நிறைந்த திருவுருவுடன் ஸ்ரீ ரமண பிரானே வருக.

104. இப் பொய்த் தோற்றமாகிய சகலப் பிரபஞ்சங் களையும் பிரம்ம ஞானமாகிய வாயால் விழுங்குபவனே வருக; எல்லாரையும் விடச் சிறந்த மகிமை யுடைய வடிவமே வருக; சகல உயிர்களுக்குள்ளும் ஆன்மாவாக வாழும் மூலப் பொருளான வைரமே வருக; மரணத்தையும் தாண்டி நின்று என்றும் அணையாத ஆன்ம ஞானமாய் விளங்கும் அருள்

விளக்கே வருக; ஸ்ரீ ரமணப் பெருமானே, உன்னையே என் வாய் நிரம்ப அழைப்பேன்; நீ வருக, வருக.

105. நான் நினைப்பவற்றையும் மறப்பவற்றையும் ஒன்று கூட விடாமல் சாக்ஷியாக அறிந்துகொண்டிருக்கும் பேரறிவே வருக; இந்தப் பிரபஞ்சத் தோற்றமெல்லாம் அடங்கி மறையும் பிரளயத்திலும் 'நான் இருக்கிறேன்' என்ற சத்சித் சொரூபமாக இருந்து விளங்கும் அற்புதமான பொருளே வருக; மனிதரோ தேவர்களோ யாரும் அறியாத வனமாகிய இதயத்தில் வசிக்கும் மஹரிஷியே வருக; என் சற்குருதேவன் வடிவத்தில் நான் காண ஒருமுறை வந்தவனே, மற்றொரு முறையும் வருவாயாக.

106. பிரம்ம விஷ்ணுக்கள் போற்றும் பரமனே வருக, மனமிரங்கி வருக; 'நீ வருக' என்று ஸ்ரீ ரமண நாம மந்திரங் கூறுகின்ற நாவாலும் மனத்தாலும் பலமுறையும் உன் அருட் பாதங்களை வாழ்த்தும் அன்பர்களிடம் வருக; உன் அடிபய வணங்கிய என் மனமும் கண்ணும் மகிழும்படி ஸ்ரீ ரமண பிரானே வருவாய்.

107. அருணாசலத்தில் முளைத்த மரணமொழிக்கும் தெய்வ மருந்தே வருக; அருணாசலனது அருளாட்சியை வாங்கி அரசாளும் இளவரசே வருக; அருணாசல தடாகத்தில் மலர்ந்திருக்கும் சிவத் தாமரை மலரே வருக; அருணாசலனது அருட்செல்வத்தை வாரி வழங்கும் வள்ளலே, ரமண பிரானே வருவாயாக.

108. அருணாசலத்தினின்றும் வழிந்து ஓடிப் பெருகி வரும் மகா நதியாகிய அருட் கங்கையே வருக; அருணாசலம் என்னும் பாற்கடலிற் கடைந் தெடுத்த அருளமுதமே வருக; அருணாசலனுகிய தெய்வத்தாய் சமைத்துக் கொடுத்த அருளமுதமே வருக; அருணாசல முடியாக விளங்கும் ஞான மணியே, ரமண பிரானே வருக.

109. 'அருணாசலம்' என்ற கண்ணபிரானின் கீதா வாக்கியமான (உபதேசங்களைக் கூவி யருளும்) ஞானக் குயிலே வருக; அருணாசலன் தன் அருள் வலையிட்டுப் பிடித்துக் கொண்ட பெண்மானே வருக; அருணாசலத்தையே உருக்கி வார்த்த அழகான சகுண வடிவத் தெய்வமே வருக; அருணாசலப் பேரின்ப மயமேயாகிய ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

110. அருணாசல வரனுக்கு அக்ஷரமணமாலை புனைந்து சூட்டி மணந்த வதுவே வருக; அருணாசலனுடன் திருமண மாலை மாற்றிக் கொண்ட அருணாசலச் சக்கரவர்த்தியின் பட்ட மகிஷியே வருக; அருணாசலத் திருநாமத்தின் மகிமையை உலக மெங்கும் பறைசாற்றி முழக்கும் அழகிய முரசமே வருக; அருணாசலனின் திருப்பாதங்களில் எப்போதும் வீற்றிருக்கும் ஞான மலரே, ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

111. அருணாசலனுடைய திருவருளாலே நீ அகந்தை அழியப் பெற்று, அருணாசலனின் அருளாட்சியை யேற்று நடத்தலானாய். அத்தகைய உனக்கு நான் எப்படியாவது என்றாவது ஒருநாள் அகந்தை யழிந்தவனாய் உணவாகி 'நான்' அற்றொழியத் தீர்மானித்துள்ளேன்; ஆனால் அந்தத் திருநாள் என்றோ அறியேன். அந்த நாள் வரும்வரையில் அற்பனாகிய என் உள்ளம் தேறுத லடையும்படியும், கண்ணாற் கண்டு நான் உன்னைத் துதித்திருக்கும்படியும் ஸ்ரீ ரமணா நீ எழுந்தருளி வருவாயாக.

112. முற்காலத்தில் உன் அடியவர்களாகி உன்னை வந்தடைந்த பரிசுத்த உள்ளமுடைய மேலோர்களின் முன்னே, பெருமானே, நீ உருக்கொண்டு தோன்றி யிருக்கின்றாய். நானோ பரிசுத்த உள்ளம் இல்லாதவன் ஆயினும், நீ வந்து தோன்றி என் இருளடைந்த புத்தி ஒழியவும், உனது திருவாயிலிருந்து அருள் மொழியாக அமிர்தச் சொற்கள் என் காதுகளில் மழையாகப் பொழியவும், துன்பம் தீர்க்கும் உன் திருவடிகளை நான் தொட்டு நன்கு வணங்கவும், உன் திருவருளிலேயே ரமித்து மகிழவும் ரமண பிரானே நீ வருவாயாக

113. நாமரூபமோ காலதேசமோ இல்லாத — அவற்றைக் கடந்த — ஞான சொரூபனான பெருமான் நீயே யாகினும், உன் அன்புக்கு உரிமையான திருவாரூர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் பழைய அடியார் கூப்பிட்ட போதெல்லாம், அவர் முன் நாமரூபத்துடன் தோன்றி நீ அருள் செய்ய வில்லையா? நானோ இவ் வுலகிலுள்ள சகல ஜந்துக்களிலும் கடைப்பட்ட படுபாவியாகிய அற்பனே யானாலும், உன்னைத் தவிர வேறோர் தெய்வத்தை நாடியவனில்லையே. அதனால் ஸ்ரீ ரமணா நீயே வந்தருள்வாயாக.

114. நீ முன்பு உன் மெய்த் தொண்டரான சுந்தரரது மனையாளான பரவை நாச்சியாரிடம் ஓரிரவு தூது நடந்தாயே. அதற்கு முன்பே சுந்தரரது திருமணத்தன்று 'நீ என் னடிமை' என்று ஓலை காட்டி வாது செய்ய வந்தாயே! பிறகு சுந்தரரது இல்லற வாழ்க்கையில் தேவையுற்ற போதெல்லாம், நெல்லும் பொன்னும் கொடுத்தருளினாயே. என் அளவில் மட்டும் நாம ரூபத்தோடு வந்து தரிசனம் தராமல் சூது செய்வாயாகில், உன்னைத் தவிர வேறு துணையில்லாத நான் என்ன செய்வேன்? என் தந்தையே, ரமணா, நீ மனமிரங்கி வந்தருள்வாயாக.

115. பாவச் செயல்களையே புரியும் கௌரவர்கள் எழுந்து வந்து அரச சடையில் திரௌபதியைத் துகிலுரியும் போது, அவள் 'கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று கூவித் துதிக்கவே, நீ உடனே கரங் கொடுத்து உதவி திரௌபதியின் துகில் வளரச் செய்து, அவளது குறையை நீக்கினாயே! நான் பாவிகளுள் மிக இழிந்த பாவி யாயினும், ஐம்புலப் பகைவரிடம் அகப்பட்டுத் துன்பப் படுத்தப்பட்டு உன்னையே துணைக்கு வரவேண்டு மென்று கூவிக் குழைந்து அழுகின்றேன். என் முன்னே குருவே, ரமணா, வருவாயாக.

116. (முன்பு ஒரு நாள்) கோபத்தில் வல்லவரான துருவாச மகரிஷியும் அவரது பரிவாரங்களான ஆயிரவரும் காட்டில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த போதே, அவர்களது பசி முழுவதும் நீங்கும்படி நீ, பாஞ்சாலி நினைத்த வுடனேயே, அவள் முன் (கிருஷ்ணனாய்த்) தோன்றி பாண்டவர்கள் உண்டு மிஞ்சியிருந்த ஒரு சிறு பருக்கை சாதத்தை உட்கொண்டு திருப்தியடைந்த பரமனாயிற்றே! ஏழையாகிய என் பயமும் தீரும்படி இப்போது எழுந்தருளி வருவதும் உன் இயல்பு தானே? அதனால் என் முன் ஸ்ரீ ரமண பிரானே வந்தருள்க.

117. இரணியன் பிரகலாதனை அழிக்க வேண்டிச் செய்த சதிகளி லெல்லாம் பிரகலாதனது துன்பத்தைத் தீர்க்க வேண்டி, கடலாலும் மலையாலும் விஷத்தினாலும் அவனுக்குக் கேடுண்டாகாதபடி நீ எழுந்தருளிக் காப்பாற்றினாயே! எளிய வனாகிய என் மனமும் (மேற்கூறிய ஆசைகளாகிய நரகத் துன் பங்களினின்றும்) காப்பாற்றப் படுவதற்கு ஏன் சம்மதிக்காமல் வாது செய்கின்றாய்? ஸ்ரீ ரமண பிரானே வருக, வருவாயாக.

118. இரணியன் பிரகலாதனைக் கோபித்து, 'உன் நாராயணன் எங்கும் உள்ளவன் என்றால், இந்தத் தூணிலும் அவன் இருப்பதைக் காட்டு' என்று தூணை வாளால் வெட்டவே, உன் அருட் புதல்வனாகிய பிரகலாதன் காணும்படி, போரில் வெற்றி பெறும் சிங்க வடிவத்தில் தோன்றினாயே! சிறியவனும் எனது பெரிய பகைவர்களான காமம், குரோதம் முதலிய இருள் கெடும்படி இப்போதே என் கண்கள் மகிழ்ந்து உன்னைக் காணும்படி ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

119. நீ உன் அடியவர்களுக்காகத் திருவுருத் தாங்கியது ஒரு தடவைதானா? அல்லது சில தடவைதானா? அல்ல, அல்ல. அவை கணக்கிலடங்காத் தடவைகள் ஆகுமே! அவை யெல்லாம் முற்காலத்தில் எப்போதோ நடந்தவை என்று கூறி ஏமாற்ற நினையாதே. இக் காலத்திலும் நீ (நின் பெருங் கருணையால்) அப்படியே நடத்தி வருகிறாய்! அவற்றை யெல்லாம் உலகம் நன்கறியும். நானும் நன்றாக எடுத்துக்காட்ட முடியும்! ஆகையால் (என்னை வஞ்சிக்காமல்) ரமணா, ரமண பிரானே, நீ வருவாயாக.

120. உன்னிடம் 'எந்தாய், எந்தாய்' என்று பாடி வேண்டி நின்ற ஸ்ரீ இராமலிங்க அடிகளிடம் ஓர் இரவில் நீ நேரே வந்து, தூங்கிக்கொண்டிருந்த அவரை 'மகனே நீ வா' என்றழைத்தெழுப்பி, அவர் கையில் 'இந்தா' என்று ஏதோ ஒன்றை அளித் தருளினாயே! இதை நீ மறுக்க முடியுமா? முடியாதே! என் தந்தையே, அது போல் எனக்கும் தயவு செய்தால் தகாதோ? (தகும்.) எனவே ரமண பிரானே வருவாயாக.

121. அந்த கருணை நிறைந்த இளங்கனியாகத் திகழ்ந்த இராமலிங்கர் பள்ளியிற் போய்க் கல்வி கற்காத இளமையில் அவர் முன் ஓர் கண்ணாடியில் தோன்றி, எல்லாக் கலைகளையும் கற்பிக்கும் அழகு மிகுந்த முருகனது வடிவில் நின்றாயே! அவரைப் போன்ற நல்லவர்களைத் தவிர, மற்றவர்கட்குத் தரிசனம் தர எழுந்தருளாத புனிதமான குருநாதன் நீ என்றாலும், உன்னைத் தவிர எனக்கு வேறோர் ஆதரவு யாருமில்லை யல்லவா? அதனால் ரமண பிரானே நீ வருவாயாக.

122. சிற்றன்னை கோபித்துத் தன்னைத் தன் தந்தை மடியிலிருந்து விலக்கித் தள்ளினதால் ஏங்கி யழுதுகொண்டு கானகத்திற் சென்று தவமிருந்த துருவனிடம் நீ அழகான திருமாலுருவில் தோன்றி நிற்க வில்லையா? ஓ, தூமணியே! நீ அகண்ட ஞான சொரூபனுயினும், உன்னை அழுது வேண்டும் உன் அடியார்கட்காக ஆதரவோடு திருவுருத் தாங்கி வருவதும் உண்டல்லவா? நான் உன்னைக் கண்டு உளமுருகும்படி ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

123. துருவனின் உடற் றந்தை 'அவனை ஒதுக்கி விடவும், இளையாளாக வந்து சேர்ந்த சிற்றன்னையும் ஏசவும் படுமோ' என்று அந்தப் பாலகன் மேல் நீ பரிவு கூர்ந்தாய், அல்லவா? நானோ உன்னைத் தவிர பாதங்களைத் தொட்டுத் துதித்து வணங்க வேறு யாருமின்றி எல்லாராலும் துணையின்றிக் கைவிடப்பட்டேன். மிகுந்த கருணை யுடைய தலைவனே, ஸ்ரீ ரமணு, வருவாயாக.

124. இறைவா, நீ முன்பு அர்ச்சுனனது கண் முன்னு லேயே அருகிலேயே எப்போதும் இருந்து வந்தாய்! அவ் வடிய வனோடு பேசி அளவளாவினுய்! அதுவும் போதாதென்று, அவன் விரும்பி நினைத்த வுடனேயே, மூவுலகையும் வியாபித்துக்கொண்ட பெரிய விசுவரூபம் எடுத்து அவன் காணும்படி எழுந்தருளினுய். ஆகா! உன் கருணைதான் என்னே! ஆனல் எளியவனுகிய நானோ என் கண்முன் உன்னைக் காணுமையால் அழுகின்றேன். கருணைக் கடலே, ஸ்ரீ ரமணு, வருவாயாக.

125. தர்ம சொரூபி, அர்ச்சுனன் உறவினனுகவும் நண்பனுகவும் உன்னை விட்டுப் பிரியாமல் உன் அருகிலேயே எப்போதும் வாழ்ந்திருக்கும் பாக்கியம் பெற்றவனு யிருந்தான். அவனுக்கு உன் அருளவதார சொரூபமும் விசுவரூபமும் காட்டிய பெருங் கருணைப் பிரானல்லவா நீ? ஆனல் நானோ துணையாக யாரும் அருகிலில்லாமல் அகதியாக நிற்கிறேன். எனக்காக ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

126. அன்று குருந்தை மரத்தடியில் மாணிக்கவாசகரை ஆட்கொண்டு அருள் செய்து முடிக்க சற்குரு வடிவில் எழுந்தருளி யிருந்த இறைவனே, நான் கொடிய கெட்ட குணங்களை விட்டுத் திருந்த முடியாமல் உன் அருள் துணை

வேண்டி தேம்பி, அழுது, திகைத்து உள்ளம் வருந்தி நிற்கும் பாவ மன முடையவன். என் முன்னும் ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

127. அன்று அப் புனிதரான மாணிக்கவாசகர் உன்னைத் தொழுது பலகால் துதித்திருந்த சொல் மாலையாகிய திரு வாசகம் முழுவதையும் அவர் ஓர் இரவில் தொகுத்துச் சொல்லி வர, அதை முற்றும் எழுதிப் பிரதி செய்ய இணங்கி முன்பு ஓர் அந்தண வடிவில் எழுந்தருளினாய், அல்லவா? அவ் வடியார் மேல் உனக்கெழுந்த கருணை தான் என்னே! குற்றமுள்ள மனத்தினனான நான் என் பிழைகளை யெல்லாம் நீக்கித் தருவார் யாருமின்றி பல முறையும் அழுது வருந்தி நிற்கிறேனே! ஆனால் நீயோ உருக்கொண்டு எழுந்தருளாத அருட் செய்கை (அருளின்மை) என்னே விந்தை? ரமணா வருவாயாக.

128. நீ குதிரை வியாபாரி வடிவு கொண்டு குதிரை ஏறி வந்தாய்! நரிகளை யெல்லாம் குதிரைகளாக மாற்றிக்கொண்டு வந்தாய்! அதன் பின் பிட்டுக்கு மண் சுமந்த போது, அரிமர்த்தன பாண்டிய ராஜன் கோபித்துப் பிரம்பாலடிக்க வருந்தி அந்த அடியை ஏற்றுக் கொண்டாய்! கரை புரண்டு வந்த வைகை நதிக்கு ஓர் அணையும் கட்டினாய்! ஆகா, மணி வாசகர்க்காக நீ திருவிளையாடல் ஆடிய சாமர்த்தியத்தை நினைத்துப் பார்த்தால், யார் தான் உன்னை 'சகுண வடிவம் எடுக்காத ஒருவன் இவன்' என்று குறை கூற முடியும்? இறைவா, ரமணா, அதனால் என் கண்கள் காண எழுந்தருள் வாயாக.

129. கடந்த காலத்தில் அருணகிரியார் செய்த கேடான வினைகளுக்காக வருந்தி கோபுரத்திலிருந்து விழுந்த போது, அவருக்காக நீ முன்பு சென்று அவரைத் தாங்கிக் காப்பாற்றி ஞானானுபவ மளித்து சமாதியில் நிலைத்தவராய் அவரை அமர் வித்தா யல்லவா? நானோ உன்னைத் தவிர எனக்கு உதவும் பெரியோர் யாருமில்லாதவன். மேற்கூறியவாறு அன்று நடந்த தெல்லாம் பொய்யல்லவே! உண்மை யன்றோ! அது போலவே, எனக்கும் அருள் செய்ய ஸ்ரீ ரமணா வருவாயாக.

130. அருணகிரியார்க்கு 'சரவணபவாய நம:' என்ற உனது அருள் நாமத்தை குருவாகி நின்று உபதேசித்து, ஜெபிப்பதற்காக மணிமாலையும் கொடுத்து, சந்தத் தமிழ்க் கவிதா சக்தியும் மழை போற் பொழிய நா வளமும் தந்தா யல்லவா? அத்தகைய நீ என் முன்னே கருணை நிறைந்த ஸ்ரீ ரமண வடிவில் வர மாட்டாயா? ரமணக் கடவுளே வருவாயாக.

131. தத்தமது உலகப் பற்றுக்கள் ஒழியுமாறு நீ முன்பு உன் அன்பர்களாகிய அரசன் முதல் பல்லோர்க்கும் கம்பத் திளையனுராகத் தூணில் முருக தரிசனம் தந்தாயல்லவா? இது அனைவரும் உன்னைத் தரிசித்ததால் நன்றாக நம்பக் கூடிய அருட்செய லன்றோ? இதிலிருந்து நீ உன்னை நாடும் அடியவர் கட்காக திருவுருப் புனைந்து எழுந்தருளும் கருணை வள்ளல் என்பது தெரிகிறதே. அதனால் இன்று என் இரு கண்களும் காணும்படி ஸ்ரீ ரமண பெருமானே வருவாயாக.

132. என் தந்தையே, அன்று தாயுமானவரை உனது சொந்த மகனுகக் கருதி இரங்கி, சிவயோகியாகிய மௌன குரு வடிவில் அந்தத் தாயுமானப் பெருந்தகையின் முன் நீ எழுந்தருள வில்லையா? இந் நிகழ்ச்சியை உலகம் ஆராய்ந்து பார்க்குமானுல், இவ்வாறு என்றென்றும் நீ உன் அடியார் கட்காக திருவுரு வெடுக்க முனைந்து நிற்கும் பரம்பொருளாகவே கண்டு கொள்ளும். அதனுல் என் கண்களாலும் நான் பார்க்கும்படி ரமண பிரானே வருவாயாக.

133. உன் சொற்படி இல்லறம் செய்து முடித்து, பிறகு உன்னை அடைவதற்காகக் காத்திருந்த தாயுமானவர் முன் நீ மகாசக்திமானுன மௌனகுரு என்ற வடிவில் மீண்டும் ஒருமுறை எழுந்தருளி, சொல்லற்கரிய சகஜ பரசொரூப நிஷ்டையில் அவர் தோயுமாறு அருள் செய்தாய். எல்லாத் துன்பமும் நீங்கும்படி நீ எனக்கும் அருள் செய்ய ஸ்ரீ ரமணு வருவாயாக.

134. மகாத்மாவான ஸ்ரீ இராமகிருஷ்ணர் அன்று தன் கண்களாற் காணும்படி நீ கருணையோடு எழுந்தருளா விட்டால், வாளாயுதத்தால் தன் உயிரைப் போக்கிக்கொள்ளுவதாக எழுந்த போது, உடனே ஜகன்மாதாவான காளி சொரூபத்தில் தோன்றி நின்றுயே. ஹே மகா மாதாவே, பெருமான் ஸ்ரீ ரமணு, வருவாயாக.

135. வங்காளத்திற் பிறந்திருந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர் என்னும் ஞானச் செல்வர் உன்னை 'வா' என்று கூப்பிட்ட போதெல்லாம், நீ அவரிடம் தாயாகிய ஜகன்மாதாவாக அடிக்கடித் தோன்றி, அவருடன் பேசி, அவருள்ளத்தைக் குளிர வைத்தருளினையே. உன்னைத் தவிர வேறு போக்கிடமோ புகலிடமோ இல்லாத என் போன்றவர்களின் இறைவனே, எளியவனாகிய என் முன்னும் இரக்கங் கொண்டு வந்தருள் வாயாக.

136. 'நான் இறைவனிடமிருந்து உத்தரவு வந்தாலன்றி, எதற்காக அயல் நாட்டுக்குப் போக வேண்டும்?' என்று கருதி அயர்ந்திருந்த துறவியரசாகிய விவேகானந்தரின் முன் நீ ஸ்ரீ இராமகிருஷ்ணராகத் தோன்றி 'வா' என்று கூறிக் கடலினுள் நடந்து சென்று மறைந்தா யல்லவா? அவ்வாறே என் இரு கண்களும் காணும்படி என் முன் வருவதும் உனக்கு அரிய காரியமாகுமா? இறைவா, ரமணா வருவாயாக.

137. என் இளமைப் பருவ முதல் அற்பமான ஆசைகள் நிறைந்த மன வலிமையே என்னிடம் குடிகொண் டிருந்தது. அந்தோ, இறைவா, நீ அருளும் ஞானசக்தியாலன்றி அந்தப் புன்மை ஒருகாலும் என்னை விட்டுப் போகாதல்லவா? மௌன போதனையின் வலிவாலே மோக்ஷ மளிக்கும் சற்குரு நாதனே, நான் யாதொரு சக்தியுமற்ற தீனன் அல்லவா? என் உள்ளமும் குற்றம் நீங்கி ஞானத் தேற்றம் அடைய ஸ்ரீ ரமண பிரானே நீ வருவாயாக.

138. நான் இல்லறத்திற்கோ துறவறத்திற்கோ ஏதொன் றுக்கும் தகுதியற்றவன். இனிமேற்கொண்டு எப்படி எத் திசையில் செல்வது என்று ஒரு வழியு மறியாதவன். இந் நிலையிலிருக்கும் என் மனத் துயரை நான் யாரிடந் தான் சொல்லிக்கொள்வேன்? ஆனால் நீயோ அடியார்கள் தம் வாய் விட்டுத் தத்தம் துயரங்களைச் சொல்லிக்கொள்வதற்கு முன்பே அவர்கள்பால் கருணை கூர்ந்து, அவர்களது துயரம் அறிந்து, அவர்களது குற்றங்களை நீக்க வல்ல பெருங்கருணை வள்ளல் அன்றோ? ஆகையால் என் கண்முன் வருவாயாக, ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

139. நற்குணமோ நற்குலமோ இல்லாத ஓர் பிறப்பை எடுத்துள்ளேன். குணக் கேடுகளைப் போக்கிக்கொள்ளக் கூடிய தபோபலமும் என்னிட மில்லை. என் இளமைப் பருவத்திலேயே உன்னை யடைந்து, என் குறைகளைச் சொல்லி துதித்தால் தீய குண மெல்லாம் தீரும் என்றும், நற்குண சம்பத்தெல்லாம் நிறையும் என்றும் கருதி உன்னைத் துதித்து வாழ்ந்து வருகின்றேன். அதனால் எல்லா நலன்களும் உண்டாகும்படி ஸ்ரீ ரமணா, ஸ்ரீ ரமண பிரானே, நீ என் கண்முன் வருவாயாக.

140 நான் உன்னை நோக்கி முன்னேறி வரும் வழியில் வழித்துணையாக என் கண்ணால் கண்டவர்களை யெல்லாம் விரும்பி, அன்பு செய்து கெஞ்சினேன். ஆனால் அவர்களெல்லாம் நான் உன்னை யடைவதற்காகக் கொண்டுள்ள ஏக்கம் முதலிய மன வேதனையை அறிய முடியாதவர்களாய் வழியிலேயே என்னைக் கைவிட்டுப் போய் விட்டனர். ஆகையால் 'இப் பிறவி உன்னை யடையாமல் வீணாக அழிந்து போய்விடக் கூடாதே' என்று அஞ்சி நிற்கும் என் முன், அப்பா ரமணா, நீ வருவாயாக.

141. உன் காரணமில்லாக் கருணையால் நீயாகவே என்னிடம் வந்து எனது கதியற்ற தீன நிலையைப் பார்த்து நெடுநாளாக வருந்தும் என் மனப் பிணியை நீக்கி யருளினாலன்றி, இந்த நல்ல மானிடப் பிறவி எனக்குக் கிடைத்துங் கூட பயனற்றதாகி விடுமே. நான் உன் மகனல்லவா? என் தாயே, ரமண வடிவங் கொண்ட தயாநிதியே! இவ்வாறு நீ செய்யும் அவ்வியாஜ கருணையினால் தான் நான் உய்வடைய வேண்டுமே தவிர, தகுதியில்லாத நாயாகிய எனக்கு வேறு வழியே யில்லை. அதனால் ரமணா, ஸ்ரீ ரமணா, வருவாயாக.

142 'நீ இன்றைக்கு வந்துவிடுவாய்; என் துயரமெல்லாம் இனிமேல் ஒழிந்து விடும்; இன்றைக்கு இல்லையென்றாலும், நாளைக்காவது நிச்சயமாக வந்து தரிசனம் தருவாய்; என்னைக் கைவிட நீ அணுவளவு கூடக் கருதமாட்டாய்' என்று நினைத்து நினைத்து தினமும் ஏங்கி நிற்பதைத் தவிர, என் அப்பாவே, நான் வேறு என்ன செய்ய முடியும்? எனது இந்த ஏக்கம் என்றோடு முடிவுறும்? என் கண்களின் முன், ரமணா, எழுந்தருளி வருவாயாக.

143. அரக்கர்களிடையே அகப்பட்டு இலங்கையில் அசோக மரத்தடியில் சீதாதேவி சிறைப்பட்டு, உன் வருகைக்காக ஆவி துடித்தது போல், அவ்வளவு துடிப்பு எனக்கு ஏற்பட்டாலன்றி, ஹே தேவா, நீ வருவாயோ? பாவியாகிய என் மனத்திலுள்ள கடவுள் ஏக்க மெல்லாம் கொஞ்சங் கூடப் போதியதல்ல வல்லவா? இருந்தாலும், மரணத் துயரத்தைப் போன்ற உன் இப் பிரிவுத் துயரை நான் சகிக்க முடிய வில்லையே! என் தலைவனே, ஸ்ரீ ரமணா, நீ வருவாயாக.

144. (கானகத்தில் மாடு மேய்க்கச் சென்று விட்டு) மாலையில் நீ வரும் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த யசோதா தேவியின் மனத்தைப் போலவும், துச்சாதனன் துகிலுரியும் போது சேலை வளர்வதற்கு முன் அந் நல்லாளாகிய திரௌபதிக்கு இருந்த கிருஷ்ண ப்ரேமை போலவும், உனக்காக மிகவும் துடிதுடித்து அழைக்கும் பக்தித் தவம் எனக்கு இன்னும் உண்டாக வில்லை என்று நீ நினைத்ததனாலோ, உன் அருட் சொரூபக் காட்சியை இன்னும் தர மாட்டேன் என்கிறாய்? ஸ்ரீ ரமணா வருவாயாக.

145. நீ புசிப்பதற்காகப் பன்றி இறைச்சியை தான் ருசி பார்த்த பின் உனக்கு அதிக அன்புடன் நிவேதித்தவரும், அப்போது ஒரு நாள் உன் கண்ணில் இரத்தம் வடிந்த புண்ணைப் பார்க்கப் பொறுக்காதவராய் அழுது, அத்யந்த சிவபக்தியால் தன் கண்ணையே பறித்து உனக்கு அளித்தத் திருவாளருமாகிய ஸ்ரீ கண்ணப்பரைப் போல உண்மையான சிவபக்தி கனியப் பெறுதவனும், கண்ணப்பரை விட உடலா லன்றெனினும் மனத்தால் மிக விழிந்த புலையேனுமாகிய நான், அந்தோ! என் செய்வேன்? இறைவா, ரமண பிரானே, வருவாயாக.

146. தன் ஒரே ஆண் மகவை அறுத்துக் கொன்றுங் கூட உனக்கு அமுதூட்ட வல்லவரா யிருந்த சிறுத்தொண்ட நாயனாரது பூரண அன்பைச் சுவைத்து மகிழ்ந்த உன் முன்னே, அறிவிலியாகிய நான் 'வருவாயாக, வருவாயாக' என்று பலமுறை கூவி யழைத்தாலும், நீ வருவாயோ? 'அடியார் களின் தகுதியைப் பொருட்படுத்தாமல் அவ்வியாஜமாய் நீ கருணை செய்பவன்' என்னும் தனிப் பெருங்கருணைத் தரத்தால்

நீ வந்தருளினு லன்றி, உன்னை நான் காண வேறு வழியே யில்லை. ஆகவே நானும் உனைக் காணும்படி ஸ்ரீ ரமணு வருவாயாக, வருவாயாக.

147. நீ தர்ம தரிசனமாக (என் தவத்துக்காக வன்றி உன் கருணையால்) எழுந்தருளினு லன்றி, உன் தரிசனம் பெற எனக்குத் தகுதி ஏதாவது உண்டோ? ஏனெனில், கீழ்மை எல்லாம் நீக்கிக்கொள்ளாத கெடு மனத்தே னல்லவா நான்? நீ அறியாயோ? ஞான சற்குருவே, உன்னைத் தேடி உன் தரிசனம் கிடைத்தால் தான், பிறகு என் ஈன குணங்களெல்லாம் என்னை விட்டு நீங்கும். இதற்காகவே ஸ்ரீ ரமணு வருவாயாக.

148. ஓர் யாசகனிடம் 'அடே, நீ ஏன் தங்கச் சட்டி ஏந்தி பிச்சைக்கு வரவில்லை? (உன் மண் சட்டியில் பிச்சை போட்டால், எனக்குக் கேவலம்.) அதனுல் பிச்சை போட மாட்டேன்; போ!' என்று கூறுபவர்களைப் போல, என் அறியாமையும் அபக்குவமும் கண்டு என்னை இகழ்ந்து விலக்குவோரிடம் சென்று நான் இரந்து என்ன பெற முடியும்? அறிவு மங்கி மயங்கி மனேபல மின்றி நான் வாழ்கின்ற இருட் காலத்திலும் கூட எனக்கு அருட்கை கொடுத்து உதவிக் காப்பாற்றுகின்ற கடவுள் ரமணனே, வருவாயாக.

149. கண்ணில்லாக் குருடன் ஒருவன் நடந்து போகும் போது அவனது கால் யார் மேலாவது தவறிப் பட்டுவிட்டால், அக் குருடனை யாராவது கோபித்துக்கொள்வார்களா, என்ன? அது போல, கணக்கற்ற பிறவிகளாக இருண்டு போன புத்தியாகிய அஞ்ஞானத்தில் அலைந்து தவிக்கின்ற நான் செய்கிற பிழைகளைக் கண்டு நீ என்னை வெறுத்தகன்ருல், அந்தோ, நான் என்ன செய்வேன்? இறைவா, என்னைக் கருணை கூர்ந்து மன்னித்தருள்க. நான் உன்னைக் கண்ணுற் காண வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ரமணக் கடவுளே வருவாயாக.

150. திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்திற்காகக் கடைந்த முற்காலத்தில் யாவரும் கண்டு அஞ்சி நடுங்கும்படி எழுந்த ஆலஹால விஷத்தையுங் கூட நீ ஏற்று உண்டு தொண்டையில் தரித்துக்கொண்டா யல்லவா? அந்த

அபாரப் பொறுமையையும் கருணையையும் நான் கேள்விப்பட்டு, உனது பூங்கழல்களை கொடிய வினையுடையவனுகிய என் முட்டாள்தனக் காரியங்களையும் பொறுத்து அருளவல்ல தென்று நம்பி உன்னிடம் ஓடி வந்து சரணடைந்தேன். என் மேலும் நீ கருணை கூர்ந்து இன்றே என் கண்முன் ஸ்ரீ ரமணு நீ எழுந்தருளி வருவாயாக.

151. துஷ்டர்களாகிய திருடர்களது கொடுஞ் செயலையும் (உன்னை அடித்ததையும்) பொறுத்துக்கொண்டாய். அவர்கள் திருடுவதற் குதவியாக ஓர் ஹரிக்கேன் விளக்கையும் ஏற்றித் தரச் செய்து, 'உள்ளே வந்து வேண்டியதை எடுத்துச் செல்லட்டுமே' என்று கருணை நிறைந்த வார்த்தை கூறினுய் என்னும் இச் சம்பவங்களைக் கேட்டு, உனது அருட் சகாயத் திருவடிகள் மட்டுமே என்னுடைய எல்லாப் பிழைகளையும் பொறுத்துக்கொள்வதோடு, இனிமேலும் நான் எப் பிழையும் செய்யாத நல்லவனுக என்னை மாற்றியும் தரும் என்று நம்பி உன்னிடம் வந்துள்ளேன். ஸ்ரீ ரமணு, ரமண பிரானே, வருவாயாக.

152. ஒரு ஜீவன் இவ் வுலகில் ஒரு கொடியாக பிறந்து விட்டால், தான் பற்றிப் படர்ந்து உயிர் வாழ்ந்திருக்க ஒரு கொழுகொம்பு இல்லாமல் முடியாதல்லவா? அது போல, அடியேன் சகல துன்பங்கட்கும் மூலமான அகந்தை அழியாத வரையில் உன் துணைக்காக வேண்டி துடிதுடித்து வாடியுள்ளேன். நீ உன் சகுண வடிவோடு வந்து எனக்கு ஒரு துணைவனுகத் தோன்ருவிட்டால், என் பழைய கர்மங்கள் எப்படி அழியும்? அழியாதல்லவா? அதனுல் என் கண்களுக்கு முன் ஸ்ரீ ரமணு வருவாயாக, வருவாயாக.

153. இந்தப் பயங்கர உலகில் நான் தனியாக வாழும் தைரியமோ சக்தியோ இல்லாதவன் என்ற நிலைமையைக் காண்பாயாக. உலகத்திலுள்ள மனிதர்களில் யாரொருவரும் (ஆணே, பெண்ணே) என்னுடன் துணையாக வாழும் வாழ்க்கை ஏற்பட்டால், என் மனம் வாந்தி யெடுக்கும். பரிசுத்தமானவனே, அதனுல் நீயே இங்கு வந்து என் ஐம்புலன்களாலும் காணக் கூடியவாறு சகுண ரூபத்தோடு என்னுடனிருந்து, என் தனிமை நீக்கித் தர வேண்டும். தந்தையே, ரமணு, நீ வருவாயாக.

154. உன்னைத் தவிர நான் அடைய விரும்பும் சற்சங்கத்தார் உலகில் வேறு யாருண்டு? யாருடனும் சேராமல் நிச்சங்கமுற்று உன் திருவடிகட்கே நேசங் கொண்டு நான் இருப்பேனே தவிர, எந்த சங்கத்துக்கும் (மடமோ, மனிதரோ) இனிப் போக மாட்டேன். நீயே வந்து என்னோடு எப்போதும் இருந்து தனிமையால் எனக் கேற்பட்டுள்ள அச்சத்தைப் போக்கியருள வருவாயாக.

155. தினந்தினம் உன்னைக் கனவிலாவது கண்டு கண் குளிரலாம் என்றால் கூட, அதுவும் கிடைக்க வில்லை. அப்படியிருக்க, நீ நனவிலா வந்து தரிசனம் தரப் போகிறாய்? அவ்வாறு நனவில் என் முன் நீ வந்தால் திருஷ்டிபட்டுப் போகுமோ? தினமும் உள்ளே திரும்பி அகமுகமாக உன்னைப் பார்க்கவும் இயலாதவன் நான். நனவில் உன் திருவுருவைக் காணப் பெற்றேனாயின், மனம் பிறகு வேறு எந்தப் பொருள் மேலும் ஆசையால் ஓடிப் பாயாமல் ஆன்ம நிட்டை யடையுமே! எனக்கு வேறென்ன வேண்டும்? ஆகையால் ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

156. சற்குருவே, உன்னைக் கண்ணால் இனிமேல் கண்டுகொள்வேனாயின், இங்குள்ள எந்தப் பண்டங்களையும் பார்க்க மாட்டேன்; கொடிய பசியையும் மறந்துவிடுவேன்; பிற மக்கள் என்னை ஏளனம் பண்ணிப் பேசிக்கொள்வதையும் கவனிக்க மாட்டேன்; தூங்க மாட்டேன்; இந்த நனவாகிய உலகக் கனவை மறந்து உன் பேராசைப் பித்துப் பிடித்தவனாய்த் திரிவேன்; என்னுடைய இந்தப் பேராசையைத் தீர்த்து வைக்க ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

157. இறைவா, என் பதியே, நீ மட்டும் என் முன் எழுந்தருளி யிருப்பாயாகில், சூரியனுதிப்பதோ, மேகங்கள் சூழ்வதோ, மிகுந்த கோடைக் காலம் வருவதோ, காய் கனிகள் முதிர்ந்து பழுக்கும் பருவம் வருவதோ, மழைக் காலம் வருவதோ, பனிமூடும் காலம் வருவதோ, இத்தகைய எவ்வித வெளியுலக இயற்கையின் மாற்றமும் அறியாதபடி நான் சமாதியுற்று உன்னாசை மேலீட்டால் உன்னோடு ஒன்றி யிருப்பேன். என் இந்த ஆசைப் பயித்தியம் நிறைவேறுமாறு ரமண பிரானே வருவாயாக.

158. பந்தமோ மோக்ஷமோ அற்றவராய் என்னுள்ளே விளங்கிக்கொண்டிருக்கும் பெருமானாகிய உன்னோடு சேர்ந்து இருக்கப் பெறுவேனாகில், இந்த உலகத்தைப் பற்றி நினைக்க மாட்டேன்; இந்த உடலைப் பற்றி நினைக்க மாட்டேன்; மூச்சு விடவோ, இழுக்கவோ கூடக் கருத மாட்டேன்; உயிர் உடலி லிருக்கிறதா, போய்விட்டதா என்பதைக் கூடக் கவனிக்க மாட்டேன். ஆகையால் அளவற்ற அருளுடையவனே, என் தந்தையே, ரமண பிரானே, வருவாயாக.

159. எனக்கு என்னைப் பெற்ற தாயும் தந்தையும் குருவும் தெய்வமும் ஆகிய நால்வரும் ஒருவரேயாகிய உன்னைப் புகலாக விடாமற் பற்றிக்கொண்டேனாயின், பிறகு என் உயிரைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. அந் நிலையில் இவ் வுலகத்தார் என்னைப் பற்றி (நல்லவனென்றோ, கெட்டவனென்றோ, பித்தனென்றோ) எது வேண்டுமாயினும் சொல்லிக் கேலி செய்யட்டும்! ஆனால் இப்போதே நீ என் முன் எழுந்தருள வேண்டும் என்ற ஆசை மிகுந்துள்ளேன். ரமண பிரானே வருக.

160 என் தந்தையே, நான் எப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும், அங்கங் கெல்லாம் நீ திருவுருவோடு எழுந்தருளியிருக்கின்றதை யுணர்ந்து, அதனால் தகாத பாவ காரியங்களைச் செய்ய வெட்கப்படும் நிலையை உண்டாக்கி, என் கேடான மனத்தைத் தடுத்தாள வேண்டும். அவ்வாறு என் மனப் போக்கைத் தடுத்து, அதைப் புனிதமான — தங்க — மனமாக மாற்றியருள வேண்டாமோ? உன்னை என் கண் முன் உருவோடு தரிசிக்கக் கிடைத்தால் தான், இந்தக் காரியம் கைகூடும். அதனால் இப்போதே ஸ்ரீ ரமணா வருவாயாக.

161. ஸ்ரீ ரமணா, எல்லாச் சமயத்திலும் நான் உன் அருகிலேயும் (நீ என் அருகிலேயும்) இருக்கும் (நித்திய சாந்நித்ய) பாக்கியத்தை நான் அடைந்தாலல்லது, நான் மனோவாக்குக்காயங்களால் எந்தப் பாவத்தையும் செய்யாத புனித வாழ்வு வாழ்வது என்பது அரிதே யாகும். ஆகையால், நீ என் அருகில் எப்போதும் துணையா யிருந்து, உனது திருவாக்கால் நல்லுரை கூறுவதனாலும், நான் உன் பாதங்களைத் தொட்டு வணங்குவதாலும், என்னைப் பாவமற்ற நல்ல அடியவனாக்குவதற்கு நீ உருவோடு வர வேண்டும். ஸ்ரீ ரமணா, வருவாயாக.

162. காலையில் எழுந்ததும் உன் திருவுருவைக் கண்ணால் தரிசிக்கும் பேறும், இடைவேளை, மாலை, இரவு ஆகிய நேரங் களிலும், தூக்கம் வருவதற்கு முன் சமயத்திலும், தூக்கம் வந்த பிறகு கனவிலும் சற்குருவாகிய உன்னையே காணும் ஒப்பற்ற பாக்கியமும் எனக்குத் தனியாகக் கிடைத்த பெரும் பாக்கியமாக அமைய வேண்டும். இது என் விருப்ப மாகும். அதனால் ஸ்ரீ ரமணா வருவாயாக.

163. பகவானே, எனக்கு தேகம் ஒன்று இருக்கிறது என்று நான் உணரும் வரையிலும், என் கண்முன் இந்த உலகம் என்று ஒன்று காணப்படும் வரையிலும், என் நாவில் தாகம் உணர்வாகும் வரையிலும், வயிற்றில் பசி யுணர்வு இருக்கும் வரையிலும், மற்றவர்களோடு பேச வேண்டும் என்னும் ஒரு மயக்கம் இருக்கும் வரையிலும், (அதாவது, உடலுணர்வு இருக்கும் வரையிலும்) நீயும் திருவுருத் தாங்கி என்முன் எழுந்தருளி யிருக்க வர வேண்டும். நீ என்னை உன்னோடு உணர்வுமயமாக இரண்டறக் கலக்க வைத்து விட்டால், அதன் பிறகு ‘நான்’ என்று ஒரு வியக்தி ஏது மிஞ்ச முடியும்? அதனால், அது வரை ஸ்ரீ ரமணா நீ திரு வுருவுடன் வந்தருள்வாயாக.

164. மனம், புத்தி, சித்தம் முதலிய அந்தக்கரணங்களும், கண், காது, கை, கால் முதலிய தேக அவயவங்களும் யாதொரு பழுது மின்றி யிருப்பதால், இளமையில் உன்னை நன்கு தொழக் கூடியனவா யுள்ளன. இந்த நிலை மாறி மூப்பு, தளர்வு முதலிய வெல்லாம் வருமே, அதன்பின் தேகத்திற்கு மரணமும் வந்துவிடுமே. அதற்கு முன்பே நீ உன் மனமிரங்கி எனக்குப் புகல் தந்து காப்பாற்றுவதற்காக, தந்தையே, ரமணா, நீ எழுந்தருளி வருவாயாக.

165. அலையும் மனத்தைத் தடுத்து உன்னைத் தவிர வேறெங்கும் போகாதபடிக் காத்துக்கொள்ளும் விவேகமாகிய புத்தியின் சக்தி குறைந்து மங்கும் முன்பே, உன் மகனாகிய என்னைப் பக்குவப்படுத்தி முக்தி கொடுக்க வேண்டாமா? நீ அருள் செய்ய முன்வராவிடில், மூப்பு என்னும் கொடிய பறவை என்னைக் கொத்தித் துன்புறுத்திவிடுமே. அது வருவதற்குள் என் சற்குருவே, ரமணா, நீ வருவாயாக.

166. நீ உன் இறைவனான அருணாசலன் எந்த விதத்திலும் (உள்ளும் புறமும்) உன்னை விட்டு நீங்கக் கூடாது என்று பிரார்த்தித்து, அவனருளால் அவ்வாறே தேக இறுதி நாள் வரை அவனை விட்டுப் பிரியாமல் வாழ்ந் திருந்தாயே! உன் தந்தையாகிய அருணாசலன் உன்பால் காட்டிய அத்தகைய கருணையைப் போலவே, என் தந்தை யாகிய நீயும் உன்னையே நாடி நிற்கும் உன் அடியவனாகிய எனக்கும் அருள்கூர்ந்து என் கண்முன் எழுந்தருளி, இறைவா, வருவாயாக.

167. என் தந்தையே, நீ பரமாத்மஞானியாய் காலதேசம் எல்லாம் கடந்த அத்வைத நிலையில் இருந்தாய். அப்போதுங் கூட உன் திருமேனி வாழ்ந்த நாள் முழுவதும் அருணாசலன் உருவுள்ளவனாய் உன்னோடு பிரியாமல் வாழ்ந்திருந்தானே! அத்தகைய தனிப் பெருங் கருணைக் கடலான அருணாசலக் கடவுளின் அருமை மகனே, நீயும் என் இரு கண்களின் முன்னும் எழுந்தருளலாம். அது ஒரு தவறல்ல. ஆகையால், என் அருளரசே, ஸ்ரீ ரமணா, நீ வருவாயாக.

168. எல்லா உலகங்களுமாய் வியாபித்திருக்கும் பரம் பொருளின் ஆசைப்படத் தக்க அருணாசல வடிவை தன் தேக வாணாள் முழுதிலும் சிறிதும் விட்டு நீங்காத பேறு பெற்றவனே! இவ்வாறு (சற்குரு சொரூபத்தோடு எப்போதும் இருக்குமாறு) பெற்றுக்கொண்ட பாக்கியச் செல்வமாகிய பெருங் குன்றில் (குன்று போன்ற பெரிய செல்வத்தில்) ஒரு சிறு குன்றிமணி யளவாவது எனக்கும் நீ கொடுக்க வேண்டுமென்று உன்னோடு சண்டை போடவா வேண்டும்? 'அருள்க' என்று அழுது கேட்டால், உடனே, கொடுத்துவிடுவாயே! ஆகையால் உன்னைத் திருவுருவோடு நான் எப்போதும் கண்டு களித்திருக்கும்படி கருணையுள்ள ஸ்ரீ ரமண பிரானே, வருவாயாக.

169. கட்டுக் கடங்காத பக்திப் பெருக்கால் நீ அருணா சலனை உன் கண்ணிலிருந்து மறையாத மணவாளனாக மணந்துகொண்டு, வேறு எந்த ஒருவராலும் உன் அத்தகைய மாங்கல்யப் பேறு மாறாதபடி பெற்றாய் (அதாவது, அருணா சலனை உன்னிட மிருந்து யாராலும் அகற்ற முடியா தாகையால், மாங்கல்யப் பேறு விலக்க முடியாதது என்றவாறு)

ஆனால் நானோ உன்னைக் காணாமற் பிரிந்திருக்க சகியாது வருந்தி மிக அழுது துதித்தும், நீ அதற்கு மறுப்புக் கூற நினைக்காதே. ஸ்ரீ ரமணா, விரைவில் வருவாயாக.

170. நீ என் முன் 'இறைவன் உனக்கு ஆவல் எவ்வாறுள்ளதோ, அவ்வாறே அளிப்பான்; என் தந்தையாகிய அருணாசலன் எனக்கும் அவனது திருவடிப் பேற்றை யளித்தான்; அதையே நீயும் விரும்புகிறா யல்லவா? அதனால் அதை உனக்கும் இதோ கொடுத்தேன்; அனுபவித்து மகிழ்' என்று கூறித் திருவுருவோடு எழுந்தருளுவாயானால், எனது தாங்க முடியாத பாவச் சுமை நீங்கும். கண்ணே, ரமண பிரானே, வருவாயாக.

171. உன் தந்தையாகிய குரு அருணாசலன் உன்னை அவனது அருட்பெருங் கருணையாலேயே பலவந்தமாக உன்னை மதுரையினின்று விடாப்பிடியாய்க் கடத்திச் சென்று அருணாசலத்தில் உன் கண் முன்னிலையி லிருந்து நீங்காத ஞான நாயகனாய் பிடிவாதமாக அருள் செய்தான். இவ்வாறு அருணாசலனும் உன் தந்தை உன்னிடத்தில் செய்த அருளைப் போலவே, என் தந்தையாகிய நீ எனக்கும் செய்துவிட்டாய் என்பதை நிரூபித்துக் காட்டி என் கண்களின் முன், ஹே ரமணா, ரமண பிரானே, எழுந்தருளி வருவாயாக.

172. அருட் புகழில் குறைவில்லாது ஓங்கும் திருவண்ணாமலைக்குத் தன்னிடம் வந்துவிடும்படி உன்னை ஸ்ரீ அருணாசலேசன் அழைத்தான். (அதனால் "அவ்வருடைய உத்தரவின்படி" என்று எழுதி வைத்துவிட்டு வந்தாய்) அது போல, 'நீ என் அருகிலிருக்க வா' என்று நீ என்னை எங்கே வரும்படிக் கட்டளை யிட்டாலும், என் தலைவனே! ஸ்ரீ ரமணேசா! நான் உடனே எழுந்தோடி அங்கே வருவேன். அதனால் நான் எங்கு வர வேண்டும் என்பதைக் கூறி அழைக்க நீ வருவாயாக.*

---

*பதிப்பாளரின் குறிப்பு: இப் பாடலை ஸ்ரீ 'சுவாமிகள் புனைந்தவுடனே, ஸ்ரீ பகவான் தாம் ஸ்ரீ சுவாமிகளைத் திருவண்ணாமலைக்கு அழைக்க இருப்பதைச் சூசகமாகத் தெரிவிக்கும் முகத்தான் முதன்முதலாகத் தரிசனம் தந்தார். இதன் விபரம் முன்னுரையில் காண்க.

173. ஓர் பசுவின் கன்று 'அம்மா' என்று கூப்பிட்டதும், அதன் தாய் உடனே அதனிடம் வந்து சேர்கிறது. உன் அடியவனான நான் ஆவலோடு நாக்கு நிரம்ப (வாய் நிரம்ப) 'ஸ்ரீ ரமணாய நம' என்று கூவி உன்னை அழைக்கின்றேன். நீ எனக்கு உதவிய இந்த நல்ல உடலைச் 'சாவு' என்னும் ஒன்று வந்தடையு முன்பே, உடலுக்கு உள்ள இளமைப் பருவம் மாறி, தளர்ந்து போகின்ற மூப்புப் பருவம் வருவதற்கு முன்பே, நீ என்மேல் இரக்கங்கொண்டு, 'நீ வா' என்று என்னை அழைத்துச் செல்ல என் கண் முன்னே, ஸ்ரீ ரமண பிரானே, எழுந்தருளி வருவாயாக.

174. உயிரோடு வாழ்ந்திருக்கும் இவ் வுடல் மறையும்படி வருகின்ற மரணத்தை என்னால் தடுக்க முடியுமா? முடியாதே! முப்பாழுக்கும் அப்பாலாய் சகலமுங் கடந்து விளங்கும் கடவுளே, நீ என்னிடம் எழுந்தருளி வந்தால், உன் அருளால் நான் தலைவிதி வன்மையையும் தாண்டிக் கடந்து, இவ் வுடல் வாழ்வு எவ்வாறு நடந்தேறுகின்றது (உயிரும் உடலும் கூடிய நிலை) என்ற ரகசியத்தையும் அறிந்து, அதனால் உடலினின்றும் முக்தனாகி, உன்னுடன் ஒன்றாய்க் கலந்து வாழும் நித்திய வாழ்வைப் பெறுவேனே அதனால் ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

175. நான் உனது திருவுருவை அண்ணாமலையிற் காணக் கிடைத்த போது, ஆசை தீர அருகிருந்து உன் திருமேனியைப் பார்க்கவும், உன்னுடன் பேசவும், உன் திருவடிகளில் தலை சாய்த்து வணங்கவும், பரம்பொருளாகிய உன் திருமுன் ஆடிப் பாடிப் புகழ்ந்து துதிக்கவும், அடிக்கடி இவ்வாறெல்லாம் உன்னோடு அளவளாவவும் கொண்டிருந்த ஆசை முற்றும் பூர்த்தியாவதற்கு முன்பே, நீ உன் திருமேனி உருவத்தை விட்டுவிட்டாயே. எனது இக் குறையை யாருக்கு எடுத்துரைப்பேன்? ஆகையால் ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

176. அப்பா, நீ திருவண்ணாமலையில் எனது அருள் நிறைந்த சற்குருவாகத் திருமேனி தாங்கி எழுந்தருளி வந்திருந்த போது, உன் அருகில் பல உத்தம பக்தர்கள் சூழ்ந்து கொண்டிருந்தனர். அதனால் அடிமை நாயாகிய நான் விரும்பிய விதமெல்லாம் நின் சகுண சொரூபத்தைத் தொட்டு வணங்கி யனுபவிக்கும்படி நீ அனுமதிப்பது அரிய காரியமே யாயிற்று.

ஒரு வேளை அப்படி நீ எனக்குத் தனியாகத் தந்தாலும், மற்ற வர்கள் சகித்துக்கொண் டிருந்திருப்பார்களோ? (மாட்டார்.) இனிமேல் தான் நீ அவ்விதம் தனிப் பெருங் கருணை எனக்காகக் கொண்டு என்முன் தனியே எழுந்தருள வசதியா யிருக்கும். அதனால் ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

177. இந்த நாமரூபங்கள் நிறைந்த உலகைக் கண்டு, அவை உண்மையானவை என்று நம்பிக்கொள்ளும் என் மடமை மனம் மாறி, அருமைப் பொருளாகிய ஆன்மாவே சத்தியமன்றி இவை யெல்லாம் ஆன்மாவுக்கு அயலான சத்தியப் பொருள்கள் ஆகா என்ற பரமாத்ம தரிசனம் நான் பெறும் வரையில், என் குரு பெருமானான நீயும் உருவத்தோடு என் கண்முன் எழுந்தருளியிருக்க வேண்டுகின்றேன். ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

178. ரமண பிரானே. நீ என்மீது அளவற்ற கருணை யோடு என் கண்முன் தோன்றுவாய் என்றும், பிறகு என்னை விட்டு ஒருபோதும் பிரிய மாட்டாய் என்றும், என்னை இனி யாதொரு கர்மமும் இயற்ற விடமாட்டா யென்றும், நான் தேடி வாடும் உன் அருளாகிய அமுதத்தை எனக்கு அளிப்பா யென்றும் எண்ணி எண்ணி ஏங்கி, அடக்க முடியாதபடி உன் ஆசை மிகுந்து, அவ் வாசையாகிய வலையிலகப்பட்டு உன்னையே துதித்துப் பாடி அழுகின்றேன். பரம்பொருளே, ஸ்ரீ ரமண பிரானே, வருவாயாக.

179. நீ என் கண் முன்னேயே இருந்து வருவாய் என்றும், நான் காரியங்கள் செய்யும் போதும் அங்கு நீ என் கைகளின் முன் இருப்பாய் என்றும், நான் சாப்பிடும் போதும் என்னைப் பார்த்துக்கொண்டே என் முன்னால் இருப்பாய் என்றும், நான் அயர்ந்து தூங்கப் போகும் போதும் என் முன் இருப்பாய் என்றும், எந்த எண்ணமும் மனத்தில் உதிப்பதற்கு முன்பே நீ அங்கு வந்திருப்பாய் என்றும், இவ்வாறு எப்போதும் என் முன்னிலையிலேயே நீ இருந்து வருவாய் என்றும் ஏங்கி ஏங்கி பாடல்களால் உன்னை வரும்படி அழைத்தேன். பகவானே, ரமண பிரானே, நீ இரக்கப்பட் வருவாயாக.

180. 'நீ என் இருவினைப் பயனையும் நீக்கி யருள்வாய்; இவ் வுடம்பை எனக்கு வேறானதாக உணர வைத்து, அதைப்

பொய்த் தோற்றமாக நான் உணரச் செய்வாய்; உன் பிள்ளையாகிய என்னை ரக்ஷிப்பாய்; எனக்கு எல்லா நல்ல பக்குவமும் உண்டாகச் செய்வாய்; எனக்கு எல்லாச் சமயத்திலும் ஓர் தாயைப் போல உதவுவாய்; பெற்ற தாயையும் விட அதிக கருணையோடு என்னைக் காப்பாய்' என்று உன்னை எனது இவ்வுலக வாழ்க்கையில் நம்பியுள்ளேன். ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

181. (சிற்சில சமயம் யாதேனும் ஒரு காரியத்தை) செய்யத் தக்கதா, தகாத காரியமா என்று தீர்மானிப்பதில் புத்தி தடுமாறி கோபமுற்று கடின சொற்களைப் பிரயோகிக்கும் கடையேனாகிய என்னை, என் கண்முன் எழுந்தருளி யிருந்து, வழிகாட்டி, செய்யத் தகாத காரியத்தை விட்டு விடக்கூடிய ஆற்றலையும் தந்து நீ உதவி செய்யாவிடில், நான் என்ன செய்வேன்? தோய்ந்துள்ள வினை வாசனைகளை வடுக் கூட மிஞ்சாமல் மாற்றித் தர, ஸ்ரீ ரமண பிரானே, நீ மனமிரங்கி வருவாயாக

182. என் உடைந்து போன உள்ளம் உறுதி பெறும் படியும், சத்வஸ்துவின் உண்மை யுணர்வை நான் பெறும் படியும் நீ கருணையோடு இவ் வுலகில் எடுத்துக்கொண்டு வந்த திருமேனி வடிவை நீ மீண்டும் ஒருமுறை எடுத்துக் கொள்வது உனக்கு அரிய காரியமா? நீ இதற்கு முன் இவ்வாறு மீண்டும் மீண்டும் பலமுறை நடந்துகொண்டதில்லையோ? என் அன்புக்குரிய ஸ்ரீரமண பிரானே, ஸ்ரீ ரமணா, நீ வருவாயாக.

183. நான் இவ் வுடலையே 'நான்' என்று உணர்ந்திருக்கும் இந்த அஞ்ஞான தசையில் என்னை அடிமை கொண்ட தலைவனாகிய நீயும் திருவுருவோடு என்முன் இராமல் திருமேனியை விட்டு விட்டாயே, இது தகுமா? இறைவா, மிகுந்த கருணைக் கடலே, நீ என்னை இவ்விதம் வெறுத்தகன்றால், கடையேனாகிய நான் கரையேற முடியுமா? அல்லது வேறு எங்காவது குறிக்கோள் தவறிப் போய்விட்டாலும் போய்விடுவேனே! ஆகையால் நீ திருமேனியோடு, சகுண சொரூபனாக உன்னை எனக்குக் காட்டித் தந்து உதவ ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

184. 'எந்தக் கருமம் செய்யத் தகுந்தது? எது செய்யக் கூடாத கருமம்?' என்று நான் உய்வதற் கேற்ற நெறிகளை அறிந்து கடைப்பிடிக்கத் தெரியாத அற்பனாகிய என் முன்னர், நீ உள்ளங்கை நெல்லிக்கனி போல் பிரத்யக்ஷமாக வந்திருந்து, கடுகளவு கூட தவறாது நடக்க வழி காட்டித் தந்து, 'இதைச் செய்; இதைச் செய்யாமல் விடு' என்று உன் திருவாயால் கட்டளை யிட்டு என்னைக் காப்பாற்ற ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

185. நான் ஓரெண்ணத்தை எண்ண முற்படுவதற்கு முன்பே, என் மெய்யுயிரான ஸ்ரீ ரமண பிரானே, நீ என் உள்ளத்தை அறிந்துகொண்டு, நான் நல்லதையே நினைக்கவும் தீய எண்ணங்களை நாடாதிருக்கவும் நீ என்னை நடத்திக் தர வேண்டும். அன்றி நானாகவே அறிந்து நடக்க எப்போதும் இயலாது. அதனால் ஸ்ரீ ரமணா, நீ என்னைக் காப்பாற்ற இணங்கி, இன்றைக்கே வந்து தோன்றுவாயாக.

186. ஓர் தவறான செயலைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பே 'இது சரியா; செய்யலாமா? அல்லது தவறு; செய்யக் கூடாதா?' என்று தெளிவாக உணராமல், அதைப் பற்றி 'இது நல்லதே' என்று எண்ணியும், சொல்லியும், செய்தும் வருகிற என்னை, அவ்வாறு நான் தீர்மானிக்கு முன்பே, நான் அறியும்படி நீ திருவுருக் கொண்டு வந்து நியாயத்தின் கரையில் நின்றுகொண்டு எனக்கு எடுத்துரைத்து வழிகாட்ட வேண்டும். அப்போது நான் உன்னை கண், காது முதலிய பஞ்சேந்திரியங்களாலும் கண்டு, உன் அறிவுரைப்படி நடந்து உலகில் தவறு நேராத நல்ல தவத்தை நான் செய்யுமாறு, ஸ்ரீ ரமண பிரானே, நீ தயை புரிந்து வருவாயாக.

187. 'நீ செய்த காரியமாகிற இது ஒரு குற்ற மாகும். நீ செய்த அதுவுங் கூட ஒரு குற்றமே! (இவை மட்டுமல்ல) இன்னொரு குற்றமும் நீ செய்திருக்கிறாய்! எனவே, இனிமேலும் நீ புதுப்புது குற்றங்களைச் செய்வாயாகில், நான் பொறுக்க மாட்டேன்' என்று இப்படி யெல்லாம், ஏதொரு நல்ல காரியமும் செய்ய வியலாத எளியவனாகிய என்னிடத்தில் ஸ்ரீ ரமண பிரானே நீ கடிந்துகொள்வாயோ? அப்படி நீ கடிந்துகொள்வதா நியாய மாகும்? (அல்ல.) நான் குற்றங்கள் புரியாதவனாக ஆகும்படி நீ அருள் செய்வாயாக; ஸ்ரீ ரமண பிரானே, நீ வருவாயாக.

188. கொடியனுகிய நான் செய்த, செய்யுங் குற்றங்களை நீ கணக்கெடுப்பாயாகில், அடியேன் உய்வடைவதற்கு ஆகும் காலமானது வரிசை வரிசையாக வந்து போகின்ற ஊழிதோறூழிக் காலங்கள் பலவும் வந்து போனாலும், கிட்டாததாம். ஆகையால், ஐயோ, உன் மிகச் சிறந்த கருணை யாட்சியால் என்னிடம் இனி குறைகள் வாராத சுத்த சத்துவ குணத்தை அருள, நீ சிறிது எழுந்தருள வேண்டும். ஓ சகுண சொரூபத் தெய்வமே, ஸ்ரீ ரமண பிரானே, வருவாயாக.

189. நான் பற்பல தடவை என் குறை கண்டு பயந்து உள்ளம் பதைத்து உன்னைத் தொழுது வேண்டியுங் கூட, என் பாவங்கள் தீராமற் பெருகுவதைக் கண்டு, இவ் வுடலைக் கொன்று போடலாம் (தற்கொலை செய்துகொள்ளலாம்) என்று என் அற்ப புத்தியால் வேறொன்றும் செய்ய முடியாததால் தீர்மானிப்பேன். இதைக் கண்டுங் கூட, நீ இரக்கமில் லாதாரைப் போல இன்னும் எழுந்தருளி வராதிருக்கின்று யென்றால், இனி இவ் வுலகில் எப் பொருளைச் சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டு, எதற்காக இன்னும் நான் உயிரோ டிருக்க வேண்டும்? ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

190. தினந்தினமும் விடாது முயற்சி செய்தாலும், என் மனத்திலிருக்கும் தீய எண்ணங்களை விலக்கி அழித்து வெற்றி கொள்ளத் தக்க உடற்சக்தியோ, மனோவலிமையோ சிறிதும் என்னிடமில்லை. இந்தப் பெரிய மாயையின் வலிமையை ஒழிக்க வல்லவனுன நீ இனிமேலாவது வருவாய் என்றும், இனி இம் மாயா மயக்கம் ஒழியும் என்றும் நம்பி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் எளியேன் மேல், ஹே குருதேவா, நீ கோபங் கொண்டு விடுவாயோ? ஸ்ரீ ரமண பிரானே கோபிக்காமல் வருவாயாக.

191. இன்னும் கோடி தடவை நான் வந்து பிறவி எடுத் தாலும், குறையும் தவறுமில்லாத உத்தம சுத்த சத்துவ குண வாழ்வைப் பெற்றுச் சிறப்படைய முடியும் என்று எனக்கு நம்பிக்கை யில்லை. நீ அருட்டுணை செய்தாலன்றி, துன்பங் களால் தாக்கப்பட்டு வாட்டமுற்றுக் கெட்டுப் போவேன். ஆகையால், எனது எல்லாப் பிழைகளையும் நீ மன்னித்து அருளி, என்னை உன் பிள்ளை என்றே நினைத்து உன் அவ்வியாஜ கருணையால், ஹே ரமண குருநாதனே, வருவாயாக.

192. தர்மத்தில் பிறழாமல் நிலைத்து வாழும் பெரியோர்களாகிய உன் அடியார்களின் முன்பு, அப்பா, நீ வந்து தரிசனம் கொடுப்பதால் அதிலென்ன பயனிருக்கிறது? பிழைகளினின்று விடுபட இயலாமல் மிகவும் அழுது பிரார்த்திக்கின்ற மன நோயாளனாகிய என்முன் வந்து தரிசனம் தந்தால், எனக்கு உன்னை பக்தி செய்யும் சக்தி பெருகி, தீ வினைகளாகிய அதர்மப் பிணி நீங்கும்; ஞானப் பயன் உண்டாகும். அதனால் ஸ்ரீ ரமண பிரானே வருக, வருவாயாக.

193. ஓர் அற்பக் கிருமியாகக் கெட்டுக் கடைப்பட்டதாய்க் கிடக்கும் பொருளைக் கூடத் தன் அருட் கரத்தால் தொட்டு, சிறந்த சூரியனாக ஜ்வலிக்கச் செய்யும் சுய வலிமை அளவற்று நிரம்பி வழியும் எல்லாம் வல்ல பெருமானே! நீ என்னிடத்தில் மட்டும் மனமிரங்காதவனா யிருப்பது ஏனோ? ஸ்ரீ ரமண பிரானே வருக, வந்தருள்க.

194. ஓர் அற்பமான புல்லைக் கருவியாகக் கொண்டு மகாமேரு மலையைக் கூடப் புரட்டித் தள்ளிவிடுகிற அருள் வலிமை யுடைய னல்லவா நீ! அத்தகைய நீ என் மனத்தை உன் வசமாக்கி அழிக்க மாட்டாயா? அளவற்ற செல்வத்தைத் தானமாக அளிக்கும் ஒரு வள்ளல் என்னைக் கண்டால் மட்டும், 'ஒன்று மில்லை, போ' என்று கூற மனம் வருகிறதோ? ஸ்ரீ ரமண பிரானே என் முன்னர் எழுந்தருளி வருவாயாக.

195. உன்னைச் சரணடைந்த அடியேனுடைய குறைபாடுகளெல்லாம் நீங்குமாறு நீ அருள் செய்வதற்குத் தாமதித்தால், நல்லோ ரெல்லாம் என்னைப் பார்த்துச் சிரிப்பர்; அதனால் நான் அவமானத்தில் மூழ்கி, என் கண்கள் அடக்க முடியாதபடி கண்ணீரைப் பெருக்குவனவாய் நான் மனமொடிந்து போவேன். இவ்வாறு நான் சீர் கேடடைவதை கருணை மூர்த்தியான நீயுங் கூடச் சகித்துக்கொண்டு சும்மா விருக்கலாமா? அது நியாயமா? எனவே நான் உன்னை யடைய வேண்டும் என்று கொண்டுள்ள பேராசையானது நிறைவேறும்படி, ஸ்ரீ ரமண தேவனே வருவாயாக.

196. உலகத்தார் பலரும் 'திருவண்ணாமலையில் எழுந்தருளி யிருக்கும் கருணைக் கடவுளான ஸ்ரீ ரமணேசன் நம் கலக்கங்களை யெல்லாம் அகற்றும் அருட் கண்களை யுடையவன்; தன்னடிக்கு வருகின்ற எல்லா அடியார்களின் பாவங்களையும்

நீக்கி, ஆன்மநிஷ்டையில் நிலைபெறும்படிச் செய்தருளினுன்' என்று உன் சந்நிதியில் நேரிற் கண்டு உரைத்த இவ் வுண்மையை நீ மாற்றவோ,]| மறுக்கவோ எண்ணுதே. விரைவில் ஸ்ரீ ரமண பிரானே வருவாயாக.

197. 'கடவுளைக் காணுவதோ, அவரோடு பேசுவதோ, அவர் திருவடிகளைத் தொட்டு வணங்கித் துதித்து மகிழ்வதோ, இதெல்லாம் பண்டைக் காலத்துப் புராணக் கதைகளின் கூற்று; தற்காலத்தில் அது நடக்காது' என்று பரிகாசம் பண்ணித் தொண்டை கிழியக் கத்துகின்ற உலகத்தவர் சொல்லைப் பொய்யாக்கி ஒழிக்க, என்னருகில் அப்பா ரமணு, நீ திருவருளால் திருவுருக் கொண்டு வருவாயாக.

198. எந்தவொரு பொருளையும் படைக்கக் கூடிய சக்தி யில்லாத அகந்தையாகிய நான் கூட ஓர் உடலை 'எனது' என்று ஏற்படுத்திக்கொண்டு, பிறகு அதை 'நான்' என்றே அபிமானித்து வாழக் கூடியவனு யிருக்கும் போது, நீயோ உனது கடாக்ஷத்தின் லவலேச அசைவாலேயே கோடிக்கணக் கான அண்டங்களை யெல்லாம் படைத்துக் காத்தழிக்கும் பெருமானுகையால், (ஓர் திருவுருவை மீண்டும் எனக்காக நீ எடுத்து வர) என்ன தடை யுண்டாகும்? உனக்கு மட்டும் கருணை என் மீது இருக்குமானுல், சகுண வடிவில் சுவாமி உன்னைக் கிடைக்கப் பெறுவேன்; அது அரிதல்ல. அதனுல் என் தலைவனே, ஸ்ரீ ரமண பிரானே, வருவாயாக.

199. 'வருந்தி அழுகின்ற அடியவனுகிய இவன் முன்னே நாம் வந்து தோன்றி, அவனை விட்டகலாமல் எப்போதும் உடனிருந்து இவனைத் திருத்த வேண்டுமே தவிர, இவனை இனி உலக மாயையாகிய நோய் பீடிக்காம லிருக்கச் செய்யக் கூடிய மருந்து வேறென்று மில்லை' என்று இவ்வாறு உன் மனத்தில் தீர்மானித்து நீ வர வேண்டும்; அப்போது உன் திருவருளால் நான் நிச்சயமாகத் திருந்திவிடுவேன். தெய்வ ரமணு, அதனுல் வருவாயாக.

200. இந்த உடல் செத்து அழிந்துவிட்டாலும் கூட, தாம் அழிவுருத விகணக்கற்ற ஷய வாசனைகள் முற்றும் அழிந்த நிலையை நான் அடைய வேண்டு மென்ருல், அது சற்குரு பக்தியாகிய பெரும் பித்து (பேரன்புப் பைத்தியம்)

எனக்கு ஏற்பட்டாலன்றி, வேறு எவ்வாறு அடைய முடியும்? அத்தகைய பக்திப் பைத்தியம் எனக்குப் பிடிக்க வேண்டு மென்ருல், ஸ்ரீ ரமணப் பெருமானை சகுண நாமரூபத்தில் எப்போதும் வைத்துக்கொண்டு அனுபவிக்கும் பாக்கியம் கிடைத்தாலன்றி முடியுமோ? எனவே பக்திப் பித்து அதிகரித்து அதன் சுவையிலேயே நான் தத்திப் புரள ஹேதுவாக, தந்தையே ஸ்ரீ ரமணு, நீ என் கண்முன் வருவாயாக.

201. நல்லோரால் வெறுக்கப்பட வேண்டியதான, விஷய வாசனையோடு கூடிய தீ மனத்தால், பல வழிகளிலும் ஆசைகளால், இழுக்கப்படுகின்ற எனது திகைப்பு நீங்குமாறு, ஸ்ரீ ரமண தெய்வ நாமரூபத்தில் நீ உனது திருவடிகள் என் சிரத்தை மிதிக்கும்படி அருள் புரிவாயானுல், அது உன் கருணைச் சிறப்புக்கு ஓர் அறிகுறி யாகுமே தவிர, யாரொருவர்க்கும் பழித்து நகைக்கும் காரியமாகாது. அதனுல் ஸ்ரீ ரமணு, ஸ்ரீ ரமண ப்ரபூ, நீ வருவாயாக.

* * *

202. ஸ்ரீ ரமணுய நமோ நம, வருக; ஸ்ரீ அருணுசல வடிவமானவனே வருக; இப் பூவுலகில் அவதரித்த பெருந்தகையே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

203. மானிடர்க்கு மட்டுமன்றி தேவர்கட்கும் சற்குருவே வருக; என் மனத்தின் பேராவற் பொருளே வருக; தீ வினைகளை மாற்றும் தவ வலிமையே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

204. சீரிய அருணுசல புருஷோத்தமனே வருக; சீரிய அருணுசலத்தின் மைந்தனே வருக; சீரிய அருணுசல வாசியே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

205. ஸ்ரீ அருணுசலத்தின் மேல் பெருமயக்க முள்ளவனே வருக; ஸ்ரீ அருணுசல வாழ்வே தாமானவனே வருக; ஸ்ரீ அருணுசல மன்னனே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

206. மிகப் பெரிய அருணுசல யானையே வருக; மிகப் பெரிய அருணுசல வள்ளலே வருக; மிகப் பெரிய அருணுசல சமுத்திரமே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

207. சிறந்த பஞ்சாக்ஷர மந்திரமான அருணாசலமே நீ வருக; சிறந்த அருணாசல மாதவமே நீ வருக; சிறந்த அருணாசலமே தானான நீ வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

208. பொன்மய அருணாசலத் திருவடியே வருக; ஒளிமய அருணாசலப் பூரணனே வருக; அழகான அருணாசல மலரின் (சிவ) மணமே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

209. பழமையான அருணாசலத்தின் தோழனே வருக; பழமையான அருணாசல சூரியனே வருக; பழமையான அருணாசல ஞானாகாசமே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

210. சீரிய அருணாசல சித்தனே வருக; சீரிய அருணாசல தெய்வமே வருக; சீரிய அருணாசல ஞான சிங்கமே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

211. ஞான அருணாசலத்தின் காதலே வருக; அருணாசலத்தின் ஞானக் கண்மணியே வருக; ஞானக் கண்ணாகிய அருணாசலக் காந்தக் கவர்ச்சியே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

212. அருணாசல வேங்கடரமணனே வருக; அருணாசல ஆத்மவித்தையே வருக; அருணாசலனே, நீ என் முன்னே வருக; ஸ்ரீ ரமணேசனே வருக வருக.

213. நீ என்னை பொன் பொருள் முதலிய ஐசுவரியமில்லாமல் இருக்க வைத்தாலும் இருப்பேன்; பெற்ற தாயில்லாமலிருக்க வைத்தாலும் இருப்பேன்; சாப்பிடும் அன்னமில்லாமல் இருக்க வைத்தாலும் இருப்பேன்; ஆனால் நீ என்முன் இல்லாமல் இருக்க வைத்தால் சகிக்க மாட்டேன். ஸ்ரீ ரமணேசனே வருக.

241. நான் இதயம் மலராதவனானாலும், எனது உலக நினைவுகளாகிய மனம் நாசமடையும்படி உனது திருவருண் முகவிலாசமானது என் கண்களின் முன்னே தோன்றுமாயின், (மேற்கூறிய என் குறைபாடுக ளெல்லாம் நீங்கி) பரமானந்தமடைவேன். ஆதலால் ஸ்ரீ ரமணேசனே வருக.

215. (உபயோகிக்கத் தெரியாத ஒருவனது கையிற் கோக்கப்பட்ட) வாளாயுதம் (அவனுக்கே தீங்கு விளைப்பது) போல, மனம் என்னும் வாளாயுதம் என் நல்வாழ்வைக் கெடுப்பதை நினைத்து

மிகவும் வருந்துகின்றேன். அத்தகைய என்முன் என்னை ஆளும் குருநாயகனுன நீ வந்து தோன்றினுல், அன்றைக்கே மனம் நாசமாகும்; ஆதலால் ஸ்ரீ ரமணேசனே வருக.

216. மேலும் மேலும் தாழ்மையையே நான் அடையும் படியாக பந்த சிந்தனையையே தந்திருக்கின்ற என் தற்போதைய பிராரப்தம் மிகக் கொடிய பெரிய ஒன்றே யாயினும், என்முன் நீ வந்தால் என் மனம் உண்முகப்படும்; அவ்வாறு வருக; பிறகு அது நாசமுறும். எனவே ஸ்ரீ ரமணேசனே வருக.

217. பூர்வ வாசனைகளாற் றூண்டுவிக்கப்படுகிற ஆசைக ளெல்லாம் அழிந்தாலன்றி, துன்பங்களை யெல்லாம் வெற்றி கொள்ள முடியுமோ? முடியாது. மிகப் பெரிய வீரனுகிய நீ யல்லவா இதற்காக வரவேண்டும்? என்னை அடிமை கொள்ளும் சர்வ வல்லமையனே, ஸ்ரீ ரமணேசனே வருக.

218. உன் அருள் நிலவாகிய ஆன்மநிஷ்டை கிடைத்து விட்டால், பிறகு எந்தத் திசை நோக்கியும் நான் போக மாட்டேன். நான் நல்லவனல்ல என்றுலும், கருணுகரா, நீ என் தகுதி பாராமல் வலிந்து வந்து ஆட்கொள்ள வேண்டும். அதற்காக ஸ்ரீ ரமணேசனே நீ வருக.

219. என் தந்தையே நீ மட்டும் வந்துவிட்டால், உன் திருவடிகள் எனக்கு அந்தக்கரணப் புறக்கரணங்களின் தயவே யில்லாத பெரும் ஆன்மசுகத்தைத் தந்துவிடும்; உலக ஆசைகள் எல்லாம் துரும்பு போல் பறந்து போய்விடும். பிறகு மரணம் எப்படி என்னைத் தீண்டும்? அதனுல் ஸ்ரீ ரமணேசனே வருக.

220. உன் அடியார்களின் சகல பாரங்களையும் ஏற்றுக் கொண்டு அவர்களை க்ஷேமமாகக் காப்பாற்றுகின்ற உனது திருவடிகளைத் தவிர, பயனற்ற என் மனத்தை அழிக்கக் கூடிய சக்தி எனக்கு வேறு ஏதுண்டு? ஆகவே ஸ்ரீ ரமணேசனே, நீ விருப்பத்தோடு என்முன் வருக.

221. சிரத்தையுள்ள அடியவர்கள் எந்த தெய்வ நாமரூபத் தில் உன்னைத் துதித்துக் கூப்பிடுவார்களோ, அந்தந்த நாம ரூபத்தில் நீ அவர்கள் முன் தோன்றி, உன் அருட் கரத்தால் அவ் வடியார்களின் கண்ணீரைத் துடைக்கும் கருணையாளன் அல்லவா நீ? ஆகையால் ஸ்ரீ ரமணேசனே வருக.

222. என் மனம் இப் பிறவியிலேயே நாசமாகிவிடுமா? அல்லது மீண்டும் பிறக்குமா? பேயாகிய என் மனத்தைக் கொன்று, நான் ஆன்மாவாய் நிலைபெறும்படி உன்னருட் செம்பதம் செய்யுமோ? அல்லது அவ்வாறு செய்ய மறந்து விடுமோ? என்னுகுமோ? ஸ்ரீ ரமணேசனே வருக.

223. காடு போல மேன்மேலும் ஓங்கி வளருகின்ற காமமாகிய பெரிய குற்றமாகிய, நெடிய பகை மனமாகிய என் மாயையை, ஞான மா குருவே, உன் அருளிஷ்டத்தால் அழித்து நீ எழுந்தருள வேண்டும் என்று வேண்டுகின்றேன். தேவ தேவனே, ஸ்ரீ ரமணேசனே, வருக.

224. பல உலகங்களிலு முள்ள ஜீவ கோடிகள் படும் துயரங்களையும் நீக்குவதற்காக வெளியில் அவதாரங்களாகவும் சற்குருவாகவும், உள்ளே அகந்தையை அழிக்கும் ஆத்ம சொரூபமாகவும், பல விதத்தில் போர் புரிந்து முடிவில் அருளாகிய சுகானுபவத்தை உயிர்கள் அடையும்படி, வசீகரிக்கும் அருட் பூங்கணையாளனுன சிவ மாரனே, ஸ்ரீ ரமணேசா, நீ வருக.

225. என் தாயாகவும் அருள் தந்தையாகவும் என்முன் உருவோடு எழுந்தருளி நீ வரவும், அந்த சற்சங்கத்தால் வைராக்கிய பலம் பெற்ற மனம் உன் உண்மையாகிய ஆன்ம சொரூபத்தை விசாரத்தால் ஆராயவும், அதனுல் அகங்காரம் அழியவும், ஸ்ரீ ரமணேசனே வருக.

226. பதினறு வயது இளமைப் பருவத்தில் கட்டுக் கடங்காத அருணுசல பக்தி எழும்பப் பெற்ருய் நீ. அத்தகைய உன்னை நான் தொட்டு வணங்க வில்லை. (அதனுல் அழைக் கின்றேன்.) ஸ்ரீ ரமணேசா, என்னிடத்தில் மட்டும் வஞ்சனை ஏனே? வருக.

227. இன்று உன்னைக் கண்களால் காணப் பெற மாட்டேனுயின், நான் பவ சாகரத்தைக் கடக்க முடியாதவனே யாவேன்; அருணுசலன் தனது விசாலமான அருட் கைகளால் அணைத்து அன்போடு தழுவிக்கொண்ட இளம் மணமகளாகிய ஸ்ரீ ரமணேசனே, நீ வந்தருள்க.

* * *

தனிப்பாக்கள்

(ஆறுசீர் விருத்தம்)

அல்லும் பகலும் விழித்திருக்கும்
ஆன்ம நிட்டை தாராயோ
அல்லும் பகலும் தூங்கியெழா
ஆன்ம நிட்டை தாராயோ
அல்லும் பகலும் அறியாத
ஆன்ம நிட்டை தாராயோ
அல்லும் பகலு மிதற்கேதான்
அழுவேன் ரமணா வாராயோ.

உரை: உலக விஷயாதிகளில் மூழ்கித் தூங்கிவிடாமல் இரவும் பகலும் ஜாக்கிரதையாக விழித்திருக்கும் (ஜாக்கிர, சொப்பன, சுழுப்தியாகிய மூவவஸ்தைகளை மாறி மாறி அடையாமல், துரீயத்தில் எப்போதும் விழித்திருக்கும்) ஆன்ம நிட்டையை அருள மாட்டாயோ? இரவும் பகலும் ஆன்மா விலேயே சொக்கி உலகை மறந்த பேரின்பத் தூக்கமாகிய ஆன்மநிட்டையை அருள மாட்டாயோ? 'இது இரவு, இது பகல்' என்பது போன்ற இருமைகளின் வேறுபாடே உணராத நிர்விகற்ப ஆன்மநிட்டையை அருள மாட்டாயோ? இதற்காகவே இரவும் பகலும் உன்னை வேண்டி அழுது நிற்கின்றேனே! ரமண பிரானே வாராயோ?

(வெண்பா)

நெஞ்சைநூ லாக்கி நெகிழ்ந்துமற்ற நேரத்திற்
பஞ்சைநூ லாக்கும் பணிதந்து — தஞ்சையிலே
வாழுமா றின்றென்னை வைத்த ரமணனடித்
தாழுமே என்றன் தலை.

உரை: உள்ளத்தில் ஊறும் பக்திக் கருத்துக்களைப் பாடல் நூல்களாக்குவதும், புற வாழ்வில் பருத்திப் பஞ்சை நூற்று நூலாக்குவதும் எனது பணிகளாகத் தந், தஞ்சையில் வாழும்படி என்னைத் திருவருளிச்சைப்படி வைத்த சற்குரு ஸ்ரீ ரமண பிரானது திருவடிகளில் என் தலை வணங்குகின்றது!

ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்து

பிழைத் திருத்தம்

பாடல்	வரி	பிழை	திருத்தம்
5	4	வருக பாழுலக	வருகபா ழுலக
14	1	துப்[illegible]றி	துப்பறி
32	4	பொருந்துவோ[illegible]	பொருந்துவோய்
32	4	வருகக[illegible]த்	வருககர்த்
38	7	பீதியேயகல	பீதியே யகல
38	8	ரமனே	ரமணனே
39	1	அருணையில்	அருணையில்
39	1	வலைவை	வலைவைத்
58	3	விளங்கு மென்னறிவை	விளங்குமென் னறிவை
59	1	வுலகில்	லுலகில்
99	8	வருக	வருக
106	5	வாவென்று	வாவென்றுன்
138	2	தகுதியில் லேன்மேற்	தகுதி யில்லேன்மேற்
139	1	குறைகொங்டிண்	குறைகொண்டிங்
195	6	சகித்தால்	சகித்தல்
208	2	பூ[illegible]ணு	பூரணு
227	4	வருகேவ	வருகவே
270	3	செப்பினென்	செப்பியென்
272	2	விரைந்து[illegible]	விரைந்துநீ
290	1	மூர்த்தி[illegible]ன்	மூர்த்தியுன்
312	4	வகருவே	வருகவே

உரை	வரி	பிழை	திருத்தம்
179	10	இரக்கப்பட்	இரக்கப்பட்டு
160	1	ப[illegible]ந்து	பயந்து

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
122	25	அவனை	இவனை
122	33	விகணக்கற்ற ஷய	கணக்கற்ற விஷய
124	25	241	214
125	28	பயன■ற	பயனற்ற
127	29	தந்,	தந்து,
xii	30	பர பொருளே	பரம்பொருளே
xix	7	போது■ான்	போதுநான்
xxiii	23	நடந்தாய்சுந்தரர்	நடந்தாய் சுந்தரர்
xxxii	29	ரமணனேவருக	ரமணனே வருக

இந் நூலின் கண் ...

இந் நூலாசிரியரான ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள் தம் இளமைப் பருவத்திலேயே பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளை வந்தடைந்தவர். அவரையே ஞான குருவாகக் கொண்டு அவரையே பாடிப் பரவும் பேறு பெற்றவர். பகவான் ஸ்ரீ ரமணர் தம் தேக வாழ்வை நீத்ததும் பெருந்துயரடைந்த ஸ்ரீ சுவாமிகள் அப் பிரிவுத் துயர் ஆற்ருமல் மீண்டும் ஸ்ரீ பகவானது தரிசனம் வேண்டி உள்ளம் உருகப் பிரார்த்தித்தார். அஞ்ஞான இருளை நீக்க வேண்டி தம் ஞான குருவை மீண்டும் மானிட உருவிலேயே காண விரும்பிய ஸ்ரீ சுவாமிகளது உள்ள ஏக்கமானது இனிய தமிழ்க் கவிகளாக மலர்ந்தது. அவரது உள்ளத்து உணர்ச்சியே அருட்கவி ஊற்ருக இப் பாடல்கள் வடிவில் எழுந்ததால், படிப்போர் யாவர்க்கும் ஸ்ரீ சுவாமிகள் கொண்ட அதே உணர்ச்சியை ஊட்டுவதாகவும், மிக எளிய நடையைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது இந் நூல்.